# குழந்தை வளர

தி. சு. அவினாசிலிங்கம்

# குழந்தை வளர

தி. சு. அவினாசிலிங்கம்

AVINASHILINGAM INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION FOR WOMEN
( DEEMED UNIVERSITY )
LIBRARY
CBE

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்
கோயமுத்தூர் - 641020

முதல் பதிப்பு : ஏப்ரல் 1948
மறு பதிப்பு : மே 1973

ரூ. 2-50

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய அச்சகம்
கோயமுத்தூர்-641020

**சமர்ப்பணம்**

எனது

அன்பார்ந்த

வித்யாலயக் குழந்தைகளுக்கு

INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION FOR WOMEN
( DEEMED UNIVERSITY )
LIBRARY

## பொருளடக்கம்


முகவுரை

| | | | |
|---|---|---|---|
| 1. | அன்பின் ஆற்றல் | ... | 1 |
| 2. | முதல் வேலை | ... | 9 |
| 3. | நம்புங்கள் | ... | 13 |
| 4. | சந்தேகம் வேண்டாம் | ... | 17 |
| 5. | செய்து காட்டுக | ... | 22 |
| 6. | பயப்படுத்தாதீர்கள் | ... | 26 |
| 7. | வளர விடுக | ... | 30 |
| 8. | தொட்டில் பழக்கம் | ... | 34 |
| 9. | இரு பெண்களின் தற்கொலை | ... | 38 |
| 10. | வீட்டில் சந்தோஷம் | ... | 43 |
| 11. | பலாத்காரம் வேண்டாம் | ... | 48 |
| 12. | வணங்கி வெல்க | ... | 53 |
| 13. | நிதானம் | ... | 57 |
| 14. | ஆண்மையுடன் வளர்த்தல் | ... | 62 |
| 15. | ஆண்மை எது ? | ... | 68 |
| 16. | பிள்ளைகளுக்கு இலட்சியம் | ... | 73 |

# முகவுரை

என் வாழ்வில் பெரும் பகுதி குழந்தைகளின் மத்தியில், அவர்கள் சேவையில் கழிந்திருக்கிறது. அது இவ்வாழ்க்கையில் நான் பெற்ற பெரும் பேறு. அவர்களிடம் அன்புடன் பழகி, அவர்களுடைய அன்பைப் பெறுவதே பேரானந்தத்தை அளிக்க வல்லது. அவர்களுடன் வித்யாலயத்தில் பழகிய அனுபவமே இக்கட்டுரைகளின் அடிப்படையாக இருந்திருக்கிறது.

நமது குழந்தைகள்தான் நாம் போற்றற்குரிய செல்வம் என்பது வெறும் பேச்சல்ல; அது முற்றிலும் உண்மையாகும். நமது நாட்டின் எதிர்காலப் பெருமையும், சிறுமையும் நமது குழந்தைகளை வளர்க்கும் முறையைப் பொருத்திருக்கிறது. இத்தூயபணியில் இச் சிறு நூல் ஒரு சிறிதளவாவது உதவுமாயின், அதுவே நான் கோரும் பயனாகும்.

இக்கட்டுரைகளில் பல 'கலைமகளில்' வெளியானவை. அத்துடன் முதல் பதிப்பில் வெளிவராத இரண்டு கட்டுரைகளும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று என் ஆங்கிலக் கட்டுரையின் திரு. க. வெங்கடேசன் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு 'அன்பின் ஆற்றல்' என்ற பெயரில் வெளிவருகிறது. மற்றொன்று 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயத்தில்' வெளிவந்தது. இவற்றை வெளியிட அனுமதி அளித்த 'கலைமகள்', 'ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்' ஆசிரியர்களுக்கும், திரு க. வெங்கடேசன் அவர்களுக்கும், இந்த மறுபதிப்பை வெளியிட மிகுந்த அன்புடன் உதவியிருக்கும் திரு சொ. அரியநாயகம் அவர்களுக்கும் நம் நன்றி உரியது.

குழந்தைகளைத் தெய்வமெனப் போற்றி, அவர்களைத் தூய்மையுடனும், சக்தியுடனும் வளர்ப்பதே நாம் நம் தேசத்திற்கும், நமக்கும் செய்யக்கூடிய மகத்தான பணியாகும். அங்ஙனம் செய்ய ஆண்டவன் நமக்குப் போதுமான அன்பும், அறிவும், ஆற்றலும் அளிப்பானாக!

ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் வித்யாலயம்
கோயமுத்தூர்-641020
5—5—1973

தி. சு. அவினாசிலிங்கம்

# அன்பின் ஆற்றல்

"மனித வாழ்வை இயக்கும் மிகப்பெரும் சக்தியாக விளங்குவது அன்பு தான். அணுக்கள் அணுக்களோடு சேர்வதற்கும், அணுத்திரள்கள் அணுத்திரள்களோடு கூடுவதற்கும், தாவரங்கள் ஒன்றையொன்று தழுவி நிற்பதற்கும் காரணமென்ன? மனிதன் மனிதனோடு, ஆண் பெண்ணோடு, பெண் ஆணோடு, விலங்குகள் விலங்குகளோடு-ஏன்-பிரபஞ்சமே ஒரு மையத்தை நோக்கி ஈர்க்கப்படுவதேன்? அதுதான் அன்பு. மிகச் சிறிய அணுமுதல் சர்வ வல்லமையுடைய ஏகவியாபி ஈறாக அன்பு வெளிப்பட்ட வண்ணம் இருக்கிறது. உணர்விலும், உணர்வற்ற தன்மையிலும், நுண் பொருளிலும், அண்ட சராசரத்திலும் அன்பு வெளிப்படுகிறது. அண்டம் முழுவதிலும் தனிப்பட்ட இயக்க ஆற்றலாக இருப்பது அன்பு ஒன்றேயாகும். இத்தகைய அன்பின் உந்துதலால்தான் கிறிஸ்து மனித குலத்துக்காகவும், புத்தர் ஜீவராசிகளுக்காகவும், தாய் குழந்தைகளுக்காகவும், கணவன் மனைவிக்காகவும் தங்களது வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றனர்" எனக்கூறியுள்ளார் சுவாமி விவேகானந்தர்.

'அன்பின் ஆற்றல்கள்' என்ற அருமையான நூலில் பிட்ரிம் ஏ. சொரோகின் கூறுவதாவது: 'எல்லையற்ற ஆக்க சக்தி பெற்றிருப்பதால்தான், தன்னலங்கருதா அன்புக்கு நோய் தீர்க்கும் ஆற்றல் உண்டு என்பது-பலர் எண்ணுவதைக் காட்டிலும்-முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உயிராற்றலான அன்பானது உடல், உள்ள, ஒழுக்க நலன்களுக்கு இன்றியமையாததாகும். சுயநலக்காரர்களைவிடப் பொது நலப் பண்புடையோர் நெடுங்காலம் வாழ்கின்றனர். அன்புக் காளாகாத குழந்தைகள் அடிப்படையிலேயே சமூக ஒழுக்கக் குறைபாடு

டையவர்களாகின்றனர். குற்ற உணர்வுகளுக்கும், தற்கொலைப் போக்குக்கும், வெறுப்பு, பயம், நரம்புக் கோளாறுகள் போன்றவற்றுக்கும் மிகச் சிறந்த மாற்று அன்பேயாகும். ஆழ்ந்த-நிலையான மகிழ்ச்சிக்கு அத்தியாவசியமாக வேண்டியிருப்பது அன்பு. நற்குணம், சுதந்திரம் ஆகியவற்றின் உச்சகட்டமே அன்புதான். மனிதகுல மேம்பாட்டுக்குரிய அருமையான ஆற்றல் மிக்க கல்விச் சக்தியாகத் திகழ்வதும் அன்பேயாகும். மனிதர்களிடத்தில் கட்டுக்கடங்கா அன்பு செலுத்துவதன் மூலம் உண்டாகக்கூடிய சக்தியே, மக்களிடையே எழும் சச்சரவுகளை நீக்கி, இவ்வுலகில் மனிதனை மனிதன் அழித்துக் கொள்ளும் அபாயத்தைத் தடுக்கவல்லது. அன்பு ஒன்றைத்தவிர வேறு எந்த ராணுவ பலமோ, போரோ, ராஜதந்திர சூழ்ச்சிகளோ, பலமான போலீஸ்படையோ, கல்வியோ, பொருளாதார அரசியல் திட்டங்களோ, அன்றி ஹைட்ரஜன் குண்டுகளோ, எதுவும் மனித குலத்துக்கேற்பட்டுள்ள பயங்கரப் பேரழிவைத் தடுக்க முடியாது. அன்பினியல்பை அறிந்துகொண்டு அதைப் பெருக்கித் தேக்கிவைத்துப் பயன்படுவதற்கான திறமையான வழிகளைத் தெரிந்துகொண்டால் அன்புவழி இவ்வதிசயத்தைச் செய்யலாம்.

வாழ்வின் அமிழ்தமாய் விளங்குவது அன்பு. உடல் கோளாறுகளையும், மனநோய்களையும் தீர்க்கும் ஆற்றல் அன்புக்கு உண்டு எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மனத்தில் வெறுப்பை வளர்ப்பவன் தனது மனநிலையை இழப்பதுடன் ஆரோக்கியத்தையும், வாழ்க்கையையும் கெடுத்துக்கொள்கிறான். மாறாக, அன்பு, இரக்கம், நட்புணர்வு ஆகியவை மனச்சாந்தியை அளிப்பதுடன் மனிதனுக்குச் சமநோக்கையும் கொடுக்கவல்லது. இக்குணங்களை வளர்ப்பவன், புறச் சூழ்நிலைகள் எப்படி இருப்பினும் சாந்தம், மகிழ்ச்சி, அமைதி ஆகியவற்றைப் பெறுகின்றான்.

குழந்தைகளின் வளர்ச்சிக்குத் தாயன்பு இன்றியமையாதது. இதயபூர்வமான அன்பின்றேல் குழந்தைகள் நோய்க்கும், பசிக்கும் இலக்காகி எவ்வளவு விரைவாக நோய்ப்பட்டு இறக்க முடியுமோ அவ்வளவு விரைவில் இறந்துவிடுகின்றன. இதுபற்றி, ரெனே ஏ. ஸ்பிட்ஸ் என்பார் ஆராய்ச்சி செய்துள்ளார். இவர் குழந்தைப் பராமரிப்பு இல்லத்திலுள்ள முப்பத்துநான்கு குழந்தைகளை இறக்கும் தருவாயில் படம் பிடித்து ஆராய்ந்தார். இக்குழந்தைகளுக்குத் தாயன்பைத் தவிர பிற பராமரிப்புக்கள் யாவும் இருந்தன. தாயன்பு இன்மையே அவர்களது இறப்புக்குக் காரணமாயிருந்தது. டாக்டர் ஸ்பிட்ஸ் எடுத்த படங்களைப் பார்த்தால் அக்குழந்தைகளின் உயிர்ச் சக்தி சிதறுண்டு

செல்லும் போக்கைக் காணலாம். பெற்ருேரைப் பிரிந்த மூன்று மாதங்களுக்கெல்லாம் அக்குழந்தைகளுக்குப் பசி எடுப்பது நின்று விட்டது; உறக்கம் கெட்டுவிட்டது; உடல் சுருங்கிவிட்டது; அக் குழந்தைகள் எந்நேரமும் சிணுங்கிக்கொண்டே உடல் நடுக்கமுற்றன; மேலும், இரண்டு மாதங்களில் நிர்மூடர்களாகக் காட்சியளித்தன. முதல் வயதில் இருபத்தேழு குழந்தைகளும், இரண்டாம் வயதில் ஏழு குழந்தைகளும் இறந்தன. நீடித்து உயிர்வாழ்ந்த குழந்தைகளும் நிர்மூடர்களாகவே வளர்ந்தன.

மன ஒழுக்கக் கோளாறுகளைத் தடுத்துக் குணப்படுத்தும் ஆற்றல் குறிப்பாக அன்புக்குண்டு. அன்பைக்கொடுத்து அன்பைப் பெறும் சூழ்நிலை, பிறந்த குழந்தைகள் மனநலனும் ஒழுக்க மேம்பாடும் கொண்ட நன்மக்களாக வளர்வதற்கு அவசியமானதாகும். தனிமனித உடலையும், உள்ளத்தையும் சரிப்படுத்திப் பலப்படுத்துவதோடு கூட, ஒருவரது அத்தியாவசிய வளர்ச்சிக்கும் மன, ஒழுக்க, சமூக நலனுக்கும் ஊட்டமளிக்கின்றது. மகிழ்ச்சியான வாழ்வுக்கும் இன்றியமையாத 'வைட்டமின்' ஆக இருப்பது அன்பைச் செலுத்தி அன்பைப் பெறுவதேயாகும்'. (சொரோகின் ப. 77,79)

டாக்டர் பிரிட்ஸ் டால்போர்ட் என்பார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஜெர்மனியில் உள்ள டூசல்டோர்ப் குழந்தைகள் மருத்துவ மனைக்குச் சென்றிருந்தார். அவரது அனுபவம் நல்விளக்கம் தருவதாயுள்ளது. ஒரு மூதாட்டி இடுப்பில் ஒரு குழந்தையை வைத்துக்கொண்டு சுற்றி வருவதைக் கண்டார். டால்போர்ட் இதுபற்றி மருத்துவமனைத் தலைவரைக் கேட்டபோது அவர் கூறியதாவது: ''ஓ! அந்த மூதாட்டி அன்னையைப் பற்றிக் கேட்கின்றீர்களா? குழந்தையைக் குணப்படுத்த நாங்கள் எடுக்கும் முயற்சிகளெல்லாம் தோல்வியுற்ருல் அக்குழந்தையை மூதாட்டி அன்னவிடம் ஒப்படைத்துவிடுவோம். அவள் அக்குழந்தையை நன்கு குணப்படுத்திவிடுவாள்.'' இதிலிருந்து குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் ஏற்படும் தீய விளைவுகளுக்குக் காரணம் குழந்தைகளுக்கு அன்பனுபவங்கள் இன்மையும், தாய்ப்பராமரிப்பு இல்லாமையும், உணர்ச்சிப் பற்ருக்குறையுமே என்று உணரப்பட்டது.

தனி மனிதர்களுக்கும், சமுதாயங்களுக்கும் இயக்கஆற்றல் மிக்க ஊக்க சக்தியளிப்பது அன்பேயாகும். தாய், குழந்தைப்பாசத்தால் குழந்தைகளின் பொருட்டு எத்தகைய துன்பத்தையும் ஏற்கத் தயாரா யிருக்கிருள். பல ஆண்களும், பெண்களும் நாட்டுப்பற்ருல் துன்பங் களைத்தாங்கியுள்ளனர்; சிறைக்குச் சென்றுள்ளனர்; துப்பாக்கிக்குண்டு

களுக்கு இரையாகியுள்ளனர். வாய்மையின் மீது அன்பு கொண்டிருந்ததால்தான் சாக்ரடீஸ் நஞ்சுண்டார். சமயப்பற்று இருந்தமையால்தான் பல்லாயிரக்கணக்கானோர் பல கொடுமைகளையும் ஏற்று, சாவைத் தழுவியுள்ளனர். இசை, ஓவியம், சிற்பம் போன்ற துறைகளில் தோன்றிய மகத்தான வேலைப்பாடுகள் அனைத்தும் பணத்திற்காகவோ அல்லது பிறர்க்குப் பயந்தோ தோன்றியவையல்ல; அவை யாவும் எல்லையற்ற அன்பின் விளைவேயாகும். அன்பின் அகத்தேயுள்ள இறை இயல்பு அன்பு செலுத்துவோரையும், அன்பைப் பெறுவோரையும் உயர்த்த வல்லது. திருக்குறள் பின்வருமாறு இதனை உணர்த்துகிறது.

''என்பிலதனை வெயில்போலக் காயுமே
அன்பிலதனை அறம்'' [77]

சுவாமி விவேகானந்தர் 'பக்தி யோகத்தில்' கூறுவது போன்று அன்புக்குக் கீழ்க்காணும் மூன்று இயல்புகள் உண்டு. முதலாவதாக அன்புக்குப் பேரம் பேசும் தன்மையில்லை. பயனை எதிர்பார்த்து ஒருவர் மற்றொருவரை நேசித்தால் அது கடை வியாபாரமேயன்றி அன்பாகாது. வாங்கி விற்கும் நடவடிக்கை எங்கு உள்ளதோ, அங்கு அன்புக்கு இடமில்லை. 'எனக்கு இதைக்கொடு; அதைக்கொடு' என ஒருவன் இறைவனை வேண்டிப் பிரார்த்தித்தால் அது அன்பாகாது. 'நான் உன்னைப்பிரார்த்தித்து வேண்டுகிறேன். நீ அதற்காக ஏதோ கொடுக்கின்றாய். இது வெறும் கடை வியாபாரமேயன்றி வேறில்லை'- இக்கருத்தை பின்வரும் கதைமூலம் விளக்குகிறார் சுவாமி விவேகானந்தர்.

வேட்டையாடக் கானகம் சென்றான் மன்னன் ஒருவன். அங்கு ஒரு முனிவரைக் கண்டான். சிறிது உரையாடியதில் அம்முனிவரைப் பிடித்துவிட்டது மன்னனுக்கு. அரண்மனைக்கு வந்து சன்மானம் பெற்றுச் செல்லுமாறு முனிவரை வேண்டினான் மன்னன். 'வேண்டாம்' என்றார் முனிவர். 'இங்குள்ள நிலையில் நான் பூரண திருப்தியடைகிறேன். உண்பதற்கு வேண்டிய பழங்களை இம்மரங்கள் கொடுக்கின்றன. வேண்டிய தண்ணீரை இந்த அழகான தூய அருவிகள் கொடுக்கின்றன. இங்குள்ள குகைகளில் நிம்மதியாக உறங்குகிறேன். நீங்கள் மன்னராயினும் உங்கள் சன்மானம் பற்றி நான் ஏன் அக்கறை கொள்ளவேண்டும்?' எனக்கூறி மறுத்தார் முனிவர். 'என்னை முழுதும் திருப்திப்படுத்த தாங்கள் என்னுடன் நகருக்கு வந்து ஏதாவது சன்மானம் பெற்றுத்தான் போகவேண்டும்' என வற்புறுத்தினான் மன்னன். இறுதியில் முனிவர் மன்னனுடன் செல்லச் சம்மதித்தார்;

அரண்மனைக்கும் சென்ருர். அரண்மனையில் தங்கமும், நகைகளும், பளிங்குக் கற்களும், பிற அதிசயப் பொருள்களும் ஏராளமாக இருந்தன. எங்கே பார்க்கினும் செல்வச் செழுமையும், அதிகாரத்தின் சாயலும் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தன. முனிவருக்குச் சன்மானம் கொடுப்பதற்கு முன்பு மன்னன் பூஜை அறைக்குச் சென்று பிரார்த்தித்தான். ''ஆண்டவனே! எனக்கு மிகுந்த செல்வத்தையும், குழந்தைகளையும், நிலத்தையும் கொடுப்பாயாக!'' என வேண்டினன். இதற்கிடையே முனிவர் எழுந்து செல்ல ஆயத்தமானர். எழுந்து செல்வதைக் கண்ட மன்னன் முனிவரை அணுகி, 'சுவாமி! தாங்கள் சன்மானம் பெருது செல்கின்றீர்களே! இங்கு தங்கி அருளவேண்டும்' எனப்பணிந்து கூறினன். முனிவர், திரும்பி மன்னரைப் பார்த்து, 'ஓ மன்னவா! நான் யாசகர்களிடம் யாசிப்பதில்லை. உன்னல் எதைக் கொடுக்க இயலும்? எந்நேரமும் நீயே யாசித்துக் கொண்டிருக்கிருயே' என்று கூறினர்.

அன்பின் இயல்பு, என்றும் கொடுப்பதேயன்றி பதிலுக்கு எதையும் பெறுவதன்று. கடவுளின் திருக்குமாரன் கூறியதாவது: ''கடவுள் விருப்பால் என்னிடம் உள்ள எதையும் கொடுக்கிறேன்; ஆனல், அவரிடமிருந்து நான் எதையும் கேட்பதில்லை. இவ்வுலகில் எனக்கு வேறெதுவும் வேண்டாம். நான் ஆண்டவனை நேசிக்க விரும்புவதால் நேசிக்கிறேன். பதிலுக்கு எதையும் கேட்பதில்லை. கடவுள் சர்வ வல்லமை உடையவரா அல்லரா என்பதைப் பற்றி யார் கவலைப்படுகிருர்கள்? அவருடைய சர்வ வல்லமையில் எனக்கெதுவும் வேண்டாம். அவர் வல்லமையைக் காட்டுவதிலும் எனக்கு அக்கறையில்லை. 'ஆண்டவன் அன்புத் தெய்வம்' என்ற ஒன்றே எனக்குப் போதும். வேறெதுவும் நான் வேண்டவில்லை. வேறெந்த வேண்டுகோளும் எனக்கில்லை.''

அன்பின் இரண்டாவது இயல்பு 'அன்பு பயமறியாது' என்பதாகும். 'கடவுள் எங்கோ மேகங்களுக்கப்பால் ஒரு கையில் பரிசுப்பொருள்களையும், மற்ருெரு கையில் தண்டனைகளையும் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிருர்' என்று ஒருவன் நினைப்பானகில், அங்கு அன்புக்கு இடமில்லை. ஒருவனுக்குப் பயமூட்டி அன்பு செலுத்த முடியுமா? ஆட்டுக்குட்டி, சிங்கத்தை நேசிக்க முடியுமா? சுண்டெலி பூனையின்மீது பாசம் கொள்ளமுடியுமா? ஆண்டவன் மீது அடிமை அன்பு வைக்க முடியுமா? அடிமைகள் சில சமயங்களில் அன்புணர்வைத் தூண்டலாம். ஆனல், அது உண்மை அன்பு ஆகாது. நீங்கள் எப்போதாவது பயத்திடையே அன்பைக் கண்டிருக்கிறீர்களா? அன்போடு பயம் என்றுமே ஒன்று சேராது. தன் காதலிக்காக ஒருவன் தன் உடலையும், செல்வத்தையும்,

பிற எதையும் இழக்கத் தயங்குவதில்லை. ஒரு குழந்தைப்பாசம் மிக்க தாயும் அவ்வாறே. ஆழ்ந்த அன்பு, பயத்தையெல்லாம் புறங்காட்டச் செய்கிறது. இதே போன்றதுதான் இறைவன்மீது அன்பு செலுத்து வதும். 'கடவுள் பரிசு கொடுப்பவரா அல்லது தண்டிப்பவரா?' என்பதைப் பற்றி யாருக்கு அக்கறை? இது ஒரு பக்தனின் எண்ண மல்லவே! வீட்டுக்குத் திரும்பும் நீதிபதியைக் கவனியுங்கள். அவரது மனைவி அவரிடம் என்ன காண்கிருள்? அவர் ஒரு நீதிபதி என்பதையோ, வழக்கை விசாரித்துத் தண்டனை வழங்குபவர் என்பதையோ அல்ல. கணவன் தன் காதலன் என்பதையே அவள் காண்கின்ருள். அவளது குழந்தைகள் அவரிடம் காண்பதென்ன? அன்புருவான தந்தையே யன்றி, தண்டிக்கும் நீதிபதியை அல்ல. அது போன்றே, இறைவனின் குழந்தைகளும் ஆண்டவனைத் தண்டிப்பவராகவோ அல்லது சன்மானமளிப்பவராகவோ காண்பதில்லை. அன்பின் சுவையறியா மக்களே பயந்து நடுங்குகின்றனர். பயத்தை விட்டொழியுங்கள்! சில மனிதர்களும், பல அறிவாற்றல் மிக்கோரும் ஆன்மீகத்தைப் பொறுத்த வரை கீழ் நிலையிலேயே உள்ளனர். இக்கருத்துக்கள் இத்தகை யோருக்குப் பயன்படுவதாக!

அன்பின் மூன்ருவது இயல்பு, அது மிக உயர்ந்த இலட்சியம் என் பதாகும். முதல் இரண்டு கட்டங்களான வியாபார நோக்கத்தை நீக்கி, எல்லாப் பயத்தையும் உதறித்தள்ளிய பிறகே, அன்பு மிக உயர்ந்த இலட்சியம் என்பதை மனிதனுல் உணர முடியும். இவ்வுலகில் அழகிய பெண்ணொருத்தி அழகற்ற ஒருவனையும், அழகான ஆடவன் அழகற்ற பெண்ணையும் காதலிப்பதை எத்தனை தடவை பார்த்திருக்கிருேம்? பொதுவாக ஆண் பெண்களின் அழகற்ற புறத் தோற்றங்களைப் பார்க்கின்ருேமேயொழிய அவர்களுக்குள் உள்ள காதலைக்காண் பதில்லை. காதல் கொண்டோருக்கு அவர் நேசிப்பவர் உலகிலேயே மிகவும் அழகானவராகத் தோன்றுவார். இது எப்படி? விகாரமான ஒருவனைக் காதலிக்கும் பெண்ணொருத்தி அவள் எதை இலட்சிய அழகு என்று மனத்தில் நினைக்கின்ருளோ அதையே அவள் காதலிக்கும் ஆடவன் மீது செலுத்தும்போது, அவள் வழிபட்டுக் காதலிப்பது அவளது இலட்சியமேயன்றி விகாரமான மனிதனல்ல. அந்த மனிதன் அவளது எண்ணமேயாகும். ஆனுல், அவன்மீது அவளது இலட்சியத்தை இணைத்துக் கூட்டும்போது அவன் அவளது வழிபாட்டுக்குரிய பொரு ளாகின்ருன். அன்புள்ள இடத்துக்கெல்லாம் இது பொருந்தும். நம்மில் பலர் மிகச் சாதாரண சகோதரர்களாகவும், சகோதரிகளாகவும்

இருக்கலாம்; இருப்பினும், இவர்கள் யாவரும் நமது சகோதர சகோதரிகள் என எண்ணும்போது இவர்கள் அழகு மிக்கவர்களாகின்றனர்.

சுதந்திரமற்ற இடத்தில் அன்பு என்றுமே தோன்றுது. அடிமையிடம் உண்மை அன்புக்கு இடமில்லை. ஒரு அடிமையை வாங்கி அவனுக்கு விலங்கிட்டு வேலை வாங்கினுல் அவன் மாடாக உழைப்பான். ஆனுல், அவனிடம் அன்பு இராது. அதுபோல், நாமும் உலக விவகாரங்களில் ஈடுபட்டு அடிமைகள் போல் வேலை செய்தால் நம்மிடமும் அன்பு இருக்காது. சுயநல வேலை அடிமையின் வேலை; அதுவே அன்புக்குச் சோதனை. அன்பு வடிவமான எந்த வேலையும் இன்பத்தைத் தரவல்லது; அமைதியையும், மகிழ்ச்சியையும் தராத அன்புச் செயலே இல்லை.

தூய்மையான அன்பு எல்லையில்லா ஆற்றல் உடையது; அது மனிதர்களை மட்டுமன்றி மிருகங்களைக்கூடப்பிணிக்கவல்லது. சைதன்யர், துஷ்ட மிருகங்கள் நிறைந்த காட்டிடையே செல்லும்போது அன்புப் பரவசத்தில் மூழ்கிப் பாடிக்கொண்டே செல்வாராம். துஷ்ட மிருகங்களும் துஷ்ட குணத்தைத் துறந்து அவரோடு சேர்ந்து ஆடுமாம். உலகம் முழுதும் தங்களது தாய்மையாலும், தன்னலங்கருதா அன்பாலும் தொடக்கத் தடைகளையும், வெறுப்பையும் வெற்றிகண்டு, விரோதிகளாயிருந்தோரின் மனத்தை கவர்ந்ததற்கான எடுத்துக் காட்டுகள் பல உண்டு. அன்புணர்வு இல்லாதவரே இல்லை; ஏனெனில், அன்பில்லாதவன் இறந்தவனுக்கும், உணர்வற்ற பொருளுக்கும் ஒப்பாவான். இதனையே வள்ளுவர்,

> ''அன்பின் வழியது உயிர்நிலை; அஃதிலார்க்கு
> என்புதோல் போர்த்த உடம்பு'' [80]

என்பர்.

தெய்வத்தன்மை வாய்ந்த அன்பு யாவரிடத்திலும் காணப்படுகின்றது. ஆனுல், பலரும் அதைத் தங்களது குடும்பங்களோடும் சொந்தக்காரர்களோடும் கட்டுப்படுத்தி விடுகின்றனர். சிலருக்கு அவர்கள் சார்ந்துள்ள ஜாதி, வகுப்பு, இடம் அல்லது மொழி அளவுக்கு இந்த அன்பு விரிவடைகின்றது. இவ்வரையறைகளை எல்லாம் கடந்து எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவோரே உயர்ந்தோராவர். இத்தகையோரே அவ்வப்போது இப்பூவுலகில் தோன்றும் ஞானிகளும் தீர்க்கதரிசிகளுமாவர். நன்கு நெறிப்படுத்தப்பட்ட தொடர்ந்த

முயற்சியால் சடப்பொருள்களின் சக்தியை உண்டாக்குவது போன்றே நன்கு திட்டமிட்ட-நிலையான-இடையருத முயற்சியால் ஆன்மீக அன்பாற்றலை உருவாக்கலாம். 'தேவையான முயற்சி இருப்பின், பொறுமையோடு வாழ்நாள் முழுதும் முயன்று அன்புக்கோபுரத்தின் உச்சியை எட்டமுடியும்' என்பதற்கு புத்தர், கிறிஸ்து, அசிசி பிரான்சிஸ் முனிவர், மகாத்மா காந்தி போன்ரோரது வாழ்க்கையே சான்ருகும்.

இருப்பினும், இதுவரை அன்பின்தன்மை அறிவியல் ரீதியாக ஆராயப்படவில்லை. தற்போதைய தொழில் யுகத்தில் மனித இனத்தில் அதிகரித்துள்ள மன நோய்களால் இத்தகைய ஆராய்ச்சிகள் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. 'மனித வாழ்வை வளப்படுத்தும் மிக முக்கியமான அனுபவம் அன்புதான்' என்பதை சமீபத்திய ஆராய்ச்சிகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளன. இதுவன்றி, உண்மையான அன்புக்கென்று தனியான ஒரு நியதியுண்டு. இத்தகைய நியதியே அன்பு செலுத்துவோரையும், அன்பைப் பெறுவோரையும் என்றுமே பலன் பெறச் செய்கிறது. இதற்கிணையாக வேறெதுவும் இல்லை.

# முதல் வேலை

மாலை சுமார் ஏழு மணி இருக்கும். அப்பொழுது வித்யாலயத்தில் பிரார்த்தனை முடிந்தது. வெளியே தரையில் பாய் விரித்து உட்கார்ந் திருந்தேன். எங்கும் அமைதி நிறைந்திருந்தது. அப்பொழுது கிரா மத்திலிருந்து சில முக்கியஸ்தர்கள் வருவதைப் பார்த்தேன்.

சாதாரணமாக அவர்கள் அந்த நேரத்தில் வருவதில்லை; வந்தாலும் பலர் சேர்ந்து வருவதில்லை. ஏதேனும் விசேஷம் இருக்கு மென்று தோன்றியது. அவர்களை உட்காரும்படி சொல்லி, ''என்ன விசேஷம்?'' என்று விசாரித்தேன்.

சில விஷயங்கள் சொல்ல வேண்டுமென்றுதான் அவர்கள் வந்து இருந்தார்கள். கிராமத்தில் ஆரம்பப் பாடசாலை ஒன்று வித்யாலயத் தின் மூலம் நடந்து வருகிறது. இப்பொழுது அது ஆசிரியர் பயிற்சி சாலைக்கு மாதிரிப் பள்ளிக்கூடமாக இருந்து வருகிறது. அன்று ஆசிரியர் பயிற்சிசாலை இல்லை. ஆரம்பப் பள்ளி மாத்திரம் இருந்தது.

''என்னங்கோ, பள்ளிக்கூடம் வரவர ரொம்பக் கெட்டுப் போச்சுதுங்களே!'' என்று பெரியவர் ஒருவர் ஆரம்பித்தார். அதைக் கேட்டதும் திடுக்கிட்டேன். பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியராக இருந்து நடத்துகிறவர் வித்யாலய முக்கிய ஊழியர்களில் ஒருவர்; சேவையில் ஆர்வமும், உயர்ந்த லட்சியங்களும் உடையவர்; மேலும், பி. ஏ., எல். டி., பட்டம் பெற்றவர்; எல்லா விதங்களிலும் தகுதி வாய்ந்தவர். எனவே, அவர்கள் அப்படிச் சொன்னால் திடுக்கிடாதா? ''என்ன சமாச்சாரம்? விவரமாகச் சொல்லுங்கள்'' என்றேன்.

''வரவரப் பிள்ளைகளுக்குப் பயமென்பது கொஞ்சங்கூட இல்லைங்கோ. முந்தியெல்லாம் பள்ளிக்கூடம் அல்லது பள்ளிக்கூட வாத்தியார் என்று சொன்னால் பையன்கள் நடுங்குவார்கள். வாத்தியாரைத் தெருவில் பார்த்தால் ஓடி ஒளிந்து கொள்ளுவார்களே! இப்பொழுது என்னடா வென்றால், வாத்தியார் ஊருக்குள் வந்தால், பிள்ளைகள் எல்லாம் 'அண்ணா, அண்ணா' என்று வந்து வாத்தியாரைச் சுற்றிக் கொண்டு, கைகளைப் பிடித்து ஆளுக்கு ஒரு பக்கம் இழுக்கிறாங்கோ! இப்படியிருந்தால் பையன்களுக்கு எப்படிப் பயம் இருக்கும்? எப்படிப் படிப்பாங்கோ?'' என்று குறை சொன்னார்கள்.

அவர்கள் சொல்லும் குறை புரிந்தது. எனக்குச் சிரிப்பு வந்தது. சிரிப்பை அடக்கிக்கொண்டு, ''பிள்ளைகளை மிரட்டுவதும் பயமுறுத்துவதும் நல்லதல்ல. அவர்களை அன்புடனும், சந்தோஷத்துடனுந்தானே நடத்த வேண்டும்?'' என்று அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன்.

அவர்களுக்கு அது சமாதானம் அளிக்கவில்லை. சிறு குழந்தைகளாகத் தாங்கள் இருந்தபோது தங்களுக்கு இருந்த அனுபவத்தை எடுத்துரைக்க ஆரம்பித்தார்கள். அக்காலத்தில் வாத்தியார் என்றால் ஒரே கிலி. வாத்தியார் எப்பொழுதும் பிரம்பும் கையுமாக இருப்பார். கோபம் வந்தால் பையன்களை நொறுக்கித் தள்ளி விடுவார். பெற்றோர்களும் பையனைப் பள்ளியில் கொண்டு வந்துவிடும்போது, ''கண்ணையும் மூக்கையும் விட்டுவிட்டு, மற்றபடி உங்களுக்கு இஷ்டமானபடி இவனை வெளுத்துத் தள்ளுங்கள்'' என்று சொல்லிப்போவார்கள். ''அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்'' என்ற பழமொழியில் நம்பிக்கை இருந்த காலம் அது. பிள்ளைகள் பள்ளியில் இருக்கும் காலம் முழுவதும் இந்தப் பயத்திலேயே கழிப்பார்கள். ''அப்படி இருந்தால் பிள்ளைகள் நன்றாகப் படிப்பார்களா அல்லது இந்தப் பள்ளிக்கூடம் மாதிரி கொஞ்சங்கூடப் பயமில்லாமல் பிள்ளைகள் ஆசிரியரிடம் 'அண்ணா' என்று ஓடிவந்து கட்டிக் கொள்கிற மாதிரி யிருந்தால் நன்றாய்ப் படிப்பார்களா?'' என்று கடைசியில் ஒரு கேள்வியும் கேட்டார்கள்.

''அந்த முறை தவறு, அது கெடுதலை உண்டாக்குகிறது. பிள்ளைகளை அன்புடன் நடத்துவதுதான் அவர்களுக்கு நிரந்தரமான நன்மையை உண்டாக்கும்'' என்று மறுபடியும் அவர்களுக்கு எடுத்துரைத்தேன். அவர்களில் மற்றொருவர் மீண்டும் சொல்ல ஆரம்பித்தார்.

''நாங்கள் எல்லாம் பையன் தொந்தரவு செய்தால் 'இதோ வாத்தியாரைக் கூப்பிடுகிறேன்' என்று மிரட்டி அவர்களை அடக்கு

வோமே! இனிமேல் வாத்தியாரிடத்தில் பயமில்லாமல் போனல் நாங்கள் எப்படிப் பிள்ளைகளை அடக்கி வாழ்வது?'' என்று கேட்டார். ''பயமுறுத்திக் குழந்தைகளை வளர்ப்பது நல்லதல்ல; அதன் மூலம் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே கோழைகளாகவும், வலுவற்றவர்களாக வும் ஆகிவிடுகிருர்கள்'' என்று பலவாருக அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன். அவர்களும் அதை ஒருவாறு கேட்டுக் கொண்டு சென்ருர்கள். ஆனல், அவர்கள் இக்கருத்துக்களை ஒப்புக் கொண்டார் களோ, இல்லேயோ என்று நான் நிச்சயமாகச் சொல்ல இயலாது.

வருங்கால இந்தியா, வீரர்கள் நிறைந்த நாடாகவும், ஆற்றல் நிறைந்த தேசமாகவும் இருக்க வேண்டுமானல் ஆரம்பத்திலிருந்தே குழந்தைகளை அதற்கு ஏற்ற முறையில் நாம் வளர்க்க வேண்டும். இவ்விஷயத்தில் நாம் எப்பொழுதும் நினேவில் வைத்துக்கொள்ள வேண்டியது ஒன்றுண்டு. மேல் நாட்டு ஆராய்ச்சியாளர்களாலும், அதற்கு முன் நம் நாட்டு மனத் தத்துவ சாஸ்திர நிபுணர்களாலும் ஒப் புக்கொள்ளப்பட்ட உண்மை அது. நம் குழந்தைகளுக்குச் சுமார் ஐந்து வயது பூர்த்தியாவதற்கு முன்னமேயே, அவர்களுடைய அடிப்படை யான கருத்துக்கள் அமைகின்றன. குழந்தைப் பருவத்தில் அதற்கு என்ன கருத்துக்களேயும் எண்ணங்களேயும் உண்டாக்குகிறேமோ, அக் கருத்துக்களும், எண்ணங்களும் அக்குழந்தையின் மனத்தில் ஆழ்ந்து ஊன்றி ஆயுள்வரையும் இருந்து வருகின்றன. இதிலிருந்து தாய் தந்தையர்களுக்கு இருக்கும் மகத்தான பொறுப்பு ஒருவாறு புலனகும். குழந்தைகளே வளர்ப்பதில் ஆரம்பப் பள்ளிகளில் ஆரம்ப ஆசிரியர் களுக்கு இருக்கும் பெரிய பொறுப்பைப் பற்றிச் சிலர் மிகுதியாக எழுது கிருர்கள். ஒரு குழந்தைக்கு யார் ஆரம்ப ஆசிரியர்கள்? பள்ளிக் கூடத்தைப் பற்றிய எண்ணம் தோன்றுவதற்கு வெகு காலத்திற்கு முன்னிருந்தே, முதலில் தாயும், அதற்குப் பின் தந்தையுமே அதற்கு முதல் ஆசிரியர்களாக இருந்து வருகிருர்கள் என்பதை நாம் மறந்து விடலாகாது.

நம் குழந்தைகள் ஆண்மையுடனும், தைரியத்துடனும் வளர வேண்டுமென்று நாம் நினேக்கிறேம். இதை ஒப்புக் கொள்ளாத எந்த இந்தியத் தாயும், தந்தையும் இருக்கமாட்டார்கள். எல்லாப் பெற்றேர் களும் அவ்விதமே நினேக்கிருர்கள். நாகரிகத்தில் முன்னேற்ற மடைந் ததாகச் சொல்லப்படும் மேல் நாடுகளில் இருப்பதைவிட, நம் நாட்டுத் தாய்மார்கள் தம் குழந்தைகளே அதிகமாக நேசிக்கிருர்கள்; தங்கள் குழந்தைகளிடம் அதிக அன்பு காட்டுகிருர்கள் என்பதில் ஐயமில்லே.

ஆனல், அவ்வன்பைச் சரியான முறையில் காட்டிக் குழந்தைகளை நன்ருக வளர்க்க அவர்கள் உணரவில்லை என்பதுதான் வருத்தம் அடைவதற்குரிய விஷயமாகும். இனிப்புப் பண்டம் இருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். குழந்தையின் பேரில் இருக்கும் அன்பு காரணமாகவே அதற்கு மிதமிஞ்சி அப்பண்டத்தைக் கொடுத்தால், அது நல்லது செய்யுமா? கெட்டதைத்தான் அது விளைவிக்கும். மது பானக் கடைக்குச் செல்லும் தாய் ஒருத்தி, தன் குழந்தைக்கும் மது பானத்தை ஊட்டியதை நான் என் கண்ணுரப் பார்த்து வருந்தியிருக் கிறேன். அவளுக்கு அக்குழந்தையின் பேரில் இருந்த அன்பின் காரணமாகச் செய்த காரியம் அது. எனவே, நம் நாட்டில் தாய் தந்தையருக்கு, குறிப்பாகத் தாய்மார்களுக்குத் தங்கள் குழந்தைகளின் பால் வெறும் அன்பு மாத்திரம் இருந்தால் போதாது. அதனுடன் குழந்தைகளை நன்ருக வளர்ப்பதற்கு வேண்டிய ஆழ்ந்த அறிவும் இருக்க வேண்டுவது மிகவும் அவசியம்.

ஆற்றலும், அறிவும் உடையவர்களாக மக்களை வளர்ப்பதற்கு வேண்டிய திட்டங்கள் பல இக்காலத்தில் போடப்படுகின்றன. மகாத்மா காந்தி வெளியிட்டிருக்கும் அடிப்படைக் கல்வி அவைகளில் முக்கியமானது. இதைத் தவிர வேறு திட்டங்களும் அவ்வப்போது வெளியிடப்பட்டிருக்கின்றன. ஆனல், இத்திட்டங்கள் அனைத்தும் குழத்தைகள் பள்ளிக்கு வரும் காலத்திலேதான் பயன்படத்தக்கவையாக இருக்கின்றன. ஆனல், பள்ளிக்கு வருமுன் இருக்கும் குழந்தைகளின் காலம் அவர்கள் வாழ்க்கையைச் சரியாக அமைப்பதற்கு எவ்வளவு முக்கியமானதாக இருக்கின்றதென்பதை முன் எடுத்துக் காட்டியிருக் கின்ருேம். அக்காலத்தில் பெற்ருேர்களைத் தவிர வேறு எவரும் அதற்கு வழி காட்டியாக இருந்து உதவ முடியாது. எனவே, இத் திட்டங்கள் நன்ருக நடைபெறுவதற்குப் பெற்ருேர்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

நம் குழந்தைகளை நன்ருக வளர்க்க வேண்டுமானல் நம் பெற்ருேர் களை இத்துறையில் ஒத்துழைக்கும்படி செய்ய வேண்டியது மிக அவசியம். அதுதான் கல்வித்துறையில் நாம் செய்ய வேண்டிய முக்கியமான முதல் வேலையாகும்.

# நம்புங்கள்

சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன் நடந்த விஷயம் அது. நேற்று நடந்த மாதிரி இருக்கிறது.

வித்யாலயம் அப்பொழுது இளமையில் இருந்தது. அது ஆரம்பித்து இரண்டு மூன்று வருஷங்கள் இருக்கும். அப்பொழுது போத்தனூரில் ஒரு வாடகைக் கட்டிடத்தில் இருந்தோம். குழந்தைகள் சுமார் நாற்பது பேர்கள் இருந்தார்கள். இப்பொழுதுபோல் அப்பொழுதும் வித்யாலய சம்பந்தமான எல்லா வேலைகளையும் குழந்தைகளே கவனித்து வந்தார்கள். அக்காலத்தில் அவர்களில் சிலரே கடைக்குப் போய்க் காய்கறி முதலியன வாங்கி வந்தார்கள்.

அந்த வாரம் இந்தப் பணியை ஏற்றவன் ராமசாமி. வாரத்திற்கு ஒருமுறை வேலைகள் மாறும். அனுதினமும் கடைக்குச் சென்று காய் கறி வாங்கவேண்டியது ராமசாமின் பொறுப்பு. இந்த வேலை வந்த பிறகு ராமசாமியிடம் சில்லரையாகப் பணம் இருப்பதைக் குழந்தை களில் சிலர் கவனித்தார்கள். கடையில் சாமான் வாங்கும்போது அதிக விலை போட்டுக் கணக்கு எழுதி, அவன் பணம் எடுத்துக் கொள் வதாக வதந்தி உண்டாயிற்று. எனவே, அவனைக் கூப்பிட்டு விசாரித் தோம். முதலில் 'இல்லை' என்றான். பிறகு, விசாரணையின்பேரில் ஒப்புக் கொண்டான்; குற்றம் வெளிப்பட்டதும் தேம்பித் தேம்பி அழுதான்; 'இனிமேல் இவ்விதம் செய்வதேயில்லை' என்றான். இக்குற்றம் ஏற் பட்டதிலிருந்து அவன் அந்தப் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டான்.

அன்றிலிருந்து அவனுடைய வாழ்க்கையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. தான் செய்த குற்றம் ஒருபுறம், அதற்கு மேல் மற்றவர்

கள்—தன் நண்பர்களும், பெரியோர்களும்—தன்னை நம்பமாட்டார்கள், தன்னைச் சந்தேகிக்கிறார்கள் என்ற எண்ணம் ஒருபுறம் அவனை வருத்தின. முன்பு உற்சாகமாக இருந்த பையன் இப்பொழுது ஒன்றுக்கும் முன் வருவதில்லை. அவன் முகத்தில் களையில்லாமலிருந்தது.

இரண்டு வாரங்கள் கழிந்தன. வித்யாலய உக்கிராணத்தைப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு மிகப் பெரியது. மாதந்தோறும் ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் உக்கிராணத்தில் உண்டு. சர்க்கரை, திராட்சை, முந்திரிப்பருப்பு, நெய் முதலிய தின் பண்டங்கள் அவன்வசம். இவைகளைத் திட்டமாகக் கண்டிப்புடன் நன்றாய்ப் பராமரிப்பது பெரிய பொறுப்பு. பிள்ளைகளில் மிகவும் நம்பிக்கையுள்ளவர்களைத்தான் இதற்குத் தேர்ந்தெடுப்பது வழக்கம். அதைச்செய்து வந்தவன் கடமை தீர்ந்து, புதிதாக ஒருவனைத் தேர்ந்தெடுக்க வேண்டிய காலம் வந்தது.

பிள்ளைகள் அனைவரும் கூடி யோசனை செய்தார்கள். பல பெயர்கள் வந்தன. ராமசாமி பெயரும் பிரேரிக்கப்பட்டது. சிலர் ஆட்சேபித்தார்கள், குற்றம் செய்து விலக்கப்பட்டவன் என்று. வேறு சிலர், ''அவன் திருந்தியவன்; மீண்டும் சுயநலமில்லாமல் பொறுப்பை வகிக்க முடியும் என்று நிரூபித்துக்கொள்ள அவனுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கலாம்'' என்று நினைத்தார்கள். ராமசாமியோ ''எனக்கு இந்த வேலை வேண்டவே வேண்டாம்'' என்று அழுதான். காரணம்! தன்னை எல்லாரும் சந்தேகப்படுவார்கள் என்பதே. அவனுக்குச் சமாதானம் சொன்னோம். அவனிடத்தில் எங்களுக்கு நிறைந்த நம்பிக்கை இருக்கிறதென்று தெரிவித்து, அவனை ஒப்புக்கொள்ளும்படி வற்புறுத்தினோம். இந்த வற்புறுத்தலுக்கு இணங்கி ஒப்புக்கொண்டான்.

மற்றவர்கள் தன்னை நம்புகிறார்கள் என்ற எண்ணமே அவனுக்கு ஒரு புதிய பலத்தையும், தன்னம்பிக்கையையும் கொடுத்தது. அவன் தன் வேலையை மிக நன்றாகவே செய்து வந்தான்; அதற்குப் பிறகு பல வருஷங்கள் வித்யாலயத்தில் இருந்து வந்தான்; இருக்கும் வரை தன் கடமைகளை மிகுந்த பொறுப்புடனேயே செய்து வந்தான்; வித்யாலயத்தை விட்ட பிறகு, இப்பொழுது பொறுப்புள்ள பதவியிலிருந்து நன்றாக வேலை செய்துகொண்டு வருகிறான்.

பிள்ளைகள் பொறுப்புடன் வளருவது பெரும்பாலும் நாம் அவர்களிடம் வைக்கும் நம்பிக்கையைப் பொறுத்திருக்கிறது. பல பெற்றோர்கள் தங்கள் மக்களை நம்புவதில்லை என்பது எனக்குத் தெரியும். பையன்

காரியங்களைக் கெடுத்து விடுவான் அல்லது சரியாகச் சிரத்தையுடன் செய்யமாட்டான் என்று பலர் நினைக்கிருர்கள். அவர்கள் நினைப்பதே பிள்ளைகளை அவ்விதம் இருக்கும்படி செய்கிறது. ஆரம்பத்தில் பிள்ளை கள் பல குற்றங்களைச் செய்யலாம். ஏதோ சில தவறுகள் செய்ததும் அவர்களுக்குப் பொறுப்பில்லை என்றோ சிரத்தை இல்லை என்றோ நினைப்பது தவறு. ஆரம்பத்தில் யாரும் பிழைகள் செய்வது இயற்கை. நம் வாழ்க்கையைப் பற்றியே யோசனை செய்து பார்த்தால் எத்தனை பிழைகள் செய்து, அதிலிருந்து விஷயங்களைக் கற்றுத் தற்போதைய நிலைமையை அடைந்திருக்கிறோ மென்பது புலப்படும். சில விஷயங்களை அனுபவத்தின் பேரில்தான் பிள்ளைகள் அறிந்துகொள்ள முடியும். முதலில் ஏதாவது பிழை செய்ததுமே அவர்களுக்கு மீண்டும் அனுபவத் திற்குச் சந்தர்ப்பம் அளிக்காவிடில் அவர்கள் எங்ஙனம் நன்ருக வளர முடியும்?

சில பெற்றோர்களும், ஆசிரியர்களும் குழந்தைகளைப் பலவாருகத் திட்டுவதைப் பார்த்து நான் வருந்தியிருக்கிறேன். ''நீ உதவாக் கட்டை,'' ''உன்னால் எதுவும் செய்ய முடியாது'' ''தர்ப்பையைப் போட்டுப் பொசுக்கினுலும் உனக்கு வராது,'' ''கழுதை மாதிரி வளர்ந்து விட்டாயே ஒழிய உனக்கு ஒன்றுமே தெரிவதில்லை'' எனப் பலவாருகத் திட்டுகிருர்கள். இப்படித் திட்டப்படும் குழந்தைகள் பலர் இவர்களின் வார்த்தைகளின் காரணமாகவே தங்கள் தன்னம் பிக்கையை இழந்து, வலு இழந்து, ஒளி இழந்து அவ்விதமே ஆகிவிடுகிருர்கள். ஆனல், கொஞ்சம் வலுவிருப்பவர்கள் இவ்வார்த்தை களையும், வசவுகளையும் பொறுக்க மாட்டாமல் எதிர்த்துப் பேசி, தங்கள் பெற்ருேர்கள் அல்லது ஆசிரியர்களிடம் இருக்கும் நம்பிக்கையையும் மதிப்பையும் இழப்பார்கள். எவ்விதமாயினும் இது பெற்ருேர்களுக்கோ, ஆசிரியர்களுக்கோ அல்லது அவர்கள் வளர்க்கும் பிள்ளைகளுக்கோ நன்மைபயக்கிறதல்ல என்பது மாத்திரம் மறுக்க முடியாத உண்மை.

சிலர் தங்கள் பிள்ளைகளிடம் சில பொறுப்புகளை ஒப்படைக்கிருர்கள். ஆனல், பொறுப்பைக் கொடுத்தவுடன் அவர்களுக்கு ஓயாமல் சந்தேகம் வந்து விடுகிறது, அவன் சரியாகக் கவனிப்பானு அல்லது கவனிக்க மாட்டானு அல்லது ஏமாந்து விடுவானு என்று. இந்தச் சந்தேகத்தின் காரணமாகப் பல சமயங்களில் அந்த வேலைகளில் தாங்களே பிரவேசித்துக் காரியங்கள் செய்வார்கள். இதன்மூலம் பிள்ளைகளுக்கு மனக் கசப்பும், அச்சமும் தோன்றுமே ஒழிய, தன்னம்பிக்கையை அதிகப்

படுத்தாது. ஒருதரம் பொறுப்புக் கொடுத்தபின், அப்பொறுப்பை நிர்வகிக்கும்படி பூரணமாய் நம்பிக்கை காட்டுவதே அப்பிள்ளைக்கு நன்ருகப் பயிற்சி அளிக்க உதவிசெய்யும்.

திருக்குறளில் 'தெரிந்து வினையாடல்' என்ற அதிகாரத்தில் அழகான குறள்கள் இருக்கின்றன. ஆட்களை வேலைக்குத் தேர்ந்தெடுப்பதில் ஒருவன் மிக ஜாக்கிரதையுடன் ஆராய்ந்து தேர்த்தெடுக்கவேண்டுமாம்.

இதனை இதனால் இவன்முடிக்கு மென்ருய்ந்து
அதனை அவன்கண் விடல். [517]

ஆனுல், இவ்வளவு ஆராய்ச்சி செய்து ஒருவனை ஒரு காரியத்தைச் செய்யும்படி நியமித்து விட்டால் பிறகு என்ன செய்ய வேண்டும்?

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய ளுகச் செயல். [518]

ஒருதரம் தேர்ந்தெடுத்துப் பொறுப்பையும் ஒப்படைத்துவிட்டால், அதற்கு மேல் அவனைச் சந்தேகிக்கக் கூடாது. 'அதனை அவன்கண் விடல்' என்ருர். 'பூரணப் பொறுப்பையும் நம்பி அவனிடம் விட்டு விடுக' என்பது அதன் பொருள். அந்த நம்பிக்கையே அவனைக் காரியங்கள் நன்ருகச் செய்யும்படி தூண்டும்.

இந்த நம்பிக்கையை நமது பிள்ளைகளிடமாவது வைக்கும்படிதான் பெற்ருேர்களிடமும், ஆசிரியர்களிடமும் கேட்டுக் கொள்ளுகிறேன். அதுவே, குழந்தைகளை ஆற்றலுடன் வளர்ப்பதற்குச் சிறந்த சாதன மாகும்.

# சந்தேகம் வேண்டாம்

உங்கள் குழந்தைகளை நீங்கள் சந்தேகிக்கக் கூடாதென்று உங்களிடம் சொன்னால் நீங்கள் என்ன பதில் சொல்வீர்கள்? ''எங்காவது உண்டா? என் குழந்தையை நான் சந்தேகித்தால், வேறு யாரை நம்புகிறது?" என்றுதான் எந்தத் தாயும் தகப்பனும் சொல்லுவார்கள். உண்மையிலேயே நம் குழந்தைகளிடத்தில் அவ்வளவு நம்பிக்கை இருந்தால் குழந்தைகள் மிகவும் நன்றாக வளருவார்கள். ஆனால், அவ்விதம் இல்லாமலிருப்பது தான் வருத்தமாக இருக்கிறது.

எத்தனையோ பெற்றோர்கள் தங்கள் வயசு வந்த பிள்ளைகளிடங்கூடத் தங்கள் பெட்டிச் சாவிகளை நம்பிக் கொடுப்பதில்லை! 'அவன் அதிகம் செலவு செய்து விடுவான்' என்ற சந்தேகம் சில பெற்றோர்களுக்கு. மற்றவர்களுக்கு வாரி இறைத்து விடுவான் அல்லது மற்றவர்கள் ஏமாற்றி விடுவார்கள் என்ற சந்தேகம். ஆனால், இவ்விதம் நம்பிக்கையில்லாமலிருப்பதே பிள்ளைகள் அவ்வாறு இருப்பதற்கு உதவி செய்கிறது என்பதை அவர்கள் உணர்வதில்லை.

பெற்றோர்கள் சந்தேகப் பட்டதனாலேயே வாழ்க்கை பாழ்பட்ட குழந்தைகள் பலர். ஓர் உதாரணம் என் நினைவில் வருகிறது. கதையல்ல; என் கண்முன் நடந்த உண்மை.

ஒரு தனவந்தர்; நன்றாகப் படித்தவர்; ஒழுக்கமும் சீலமும் உள்ளவர். அவருக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் மிகவும் நல்ல குணவான்; மற்றவர்களிடத்தில் அன்பு நிறைந்தவன்; நல்ல சுபாவந்தன்; நண்பர்களிடம் பழகும் சுபாவம்; தன்னிடத்தில் பணம் இருந்தால் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவுவான்; சிற்றுண்டி

அருந்த அல்லது கேளிக்கைகள் பார்க்கச் சென்ருல் நண்பர்களேயும் உடன் அழைத்துக் கொண்டு செல்வான். இப்படிச் சில்லரைச் செலவு கொஞ்சம் அதிகம். ஆகவே, பெற்ரேர்கள் முதலில் அவனே அதற்காக வைதார்கள்; திட்டினர்கள்; பின்னல் சந்தேகப்பட ஆரம்பித்தார்கள். அவன் வீட்டிற்கு வந்த பொழுதெல்லாம் தாயும் தகப்பனும் ஒரே வசைமாரி பொழிந்தனர். ''நீ வீணுய்க்கெட்டு விடுவாய். இவ்வளவு செலவு செய்கிருயே. உன்னிடம் என்ன துர்ப்பழக்கங்கள் இருக்குமோ? வீட்டிலேயேஇரு. கண்ட இடங்களில் சுற்றிக்கொண்டிருக்கிருய் போலிருக்கிறது. அப்படிப் போகக்கூடாது'' என்றெல்லாம் கண்டித்தார்கள்.

இவர்களது திட்டுகளும், வார்த்தைகளும் அவனுக்கு வீட்டிலிருக்கும் சந்தோஷத்தைக் குறைத்தன. வீட்டை விட்டுத் தப்பித்து வெளிச் சென்ருல் போதும் என்ற நினேப்பு, தானே உண்டாயிற்று. எனவே, எவ்வளவு காலம் வீட்டிற்கு வெளியில் இருக்க முடியுமோ அப்படி இருக்க ஆரம்பித்தான்.

பெற்ரேர்களுக்குச் சந்தேகம் வலுத்தது. ''ஏண்டா, பீடி சிகரட்டுப் பிடிக்கிருயாமே?'' என்று பலவாருகக் கேட்க ஆரம்பித்தார்கள். அவனுக்கு அதுவரையில் அந்தப் பழக்கம் இல்லே. பெற்ரேர்கள் மிரட்டலும், வெறுப்பு வார்த்தைகளும் அவன் மனத்தில் எதிர்ப்பை உண்டாக்கின. இதுவரை பெற்ரேரிடத்தில் இருந்த மதிப்பும் மரியாதையும் குறைய ஆரம்பித்தன. தான் செய்யாத ஒரு குற்றத்தை அவர்கள் தன்பேரில் அபாண்டமாய்ச் சுமத்தியது அவன் மனத்தில் மிகுந்த வருத்தத்தை உண்டுபண்ணியது. அவன், 'பீடி சிகரட்குடிப்பதில்லே' என்று பல தடவைகளில் சொல்லியும் அவர்கள் நம்பாதது இன்னும் அதிக வருத்தத்தையும், வெறுப்பையும் உண்டாக்கிற்று. 'இவர்கள் எப்படி இருந்தாலும் நம்மைத் தூற்றுகிருர்கள்; இக்குற்றம் செய்யாமலிருந்தாலும் செய்வதாகவே இவர்கள் மதிக்கிருர்கள். அதைச் செய்து பார்த்தால்தான் என்ன?' என்று பிசாசு ஒன்று அவன் மனத்தில் சொன்னது போலிருந்தது. அவனும் உடனே அதற்கு இணங்கி, 'நான் அதைச் செய்துதான் பார்க்கிறேன். இவர்கள் என்ன தான் செய்வார்களோ பார்க்கலாம்' என்று அதைச் செய்ய ஆரம்பித்தான்.

அதிலிருந்து வீட்டில் அனுதினமும் பெற்ரேர்களுக்கும் அவனுக்கும் சண்டை. பெற்ரேர்கள் இன்னும் அதிகமாகச் சந்தேகப்பட ஆரம்பித்தார்கள். அவன் செய்யாத காரியங்களே யெல்லாம் அவன் செய்த

தாகச் சந்தேகித்தார்கள். எனவே, மனக்கசப்பும் அவநம்பிக்கையும் சந்தேகமும் அதிகரித்துக் கொண்டே வந்தன.

அவனைத் திருத்த என்ன செய்யலாமென்று பெற்றோர்கள் யோசித்தார்கள். நம் தேசத்தில்தான் நல்லதற்கும், கெட்டதற்கும் மருந்தாகச் செய்யக்கூடியது ஒன்று உண்டல்லவா? ஒருவன் தீவிரவாதியாக இருக்கிறான்; குடும்பத்தையும் கவனிக்காமல் தேசத்திற்காகவும், ஏழை மக்களுக்காகவும் உழைக்கிறான் என்றால் அதை நிறுத்துவதற்கு அவனுக்கு மணம் செய்வித்து விட்டால் சரியாகப்போய்விடும் என்பார்கள். மனைவி மக்கள் ஏற்பட்டுவிட்டால் இத்தகைய பொறுப்பற்ற குணமெல்லாம் போய், பொறுப்பு வந்து விடுமாம்! அதே மாதிரி கெட்ட பழக்கங்கள் இருப்பவனுக்கும் அவனுக்கென்று ஒருத்தி ஏற்பட்டால் திருந்தி விடுவான் என்று நினைப்பதுண்டு. எனவே, அவனுக்கும் மணம் செய்தார்கள்.

அவனுடைய தம்பி சுயநலமுள்ளவன்; ஆரம்பத்திலிருந்தே தன் காசு பணத்தில் ஜாக்கிரதையாக இருப்பவன்; அவன் மிகவும் நல்ல பிள்ளையாகத் தோன்றினான். அவன் வாக்குக்கு வீட்டில் செல்வாக்கு அதிகமாக இருந்தது. அண்ணன் பேரில் பெற்றோர்களுக்குச் சந்தேகம் இருக்கவே, அவன் அபிப்பிராயங்கள் நிராகரிக்கப் பட்டன. முன் எப்படி இருந்த போதிலும் தன் மனைவியின் முன்னிலையில், தான் இவ்வளவு தாழ்த்தப்பட்டது அவனுக்கு எல்லை இல்லாத வருத்தத்தை உண்டாக்கியது. கொஞ்சநாள் மனைவியும் அவனுடன் சேர்ந்து வருத்தப் பட்டாள். ஆனால், அதற்குப் பிறகு அவளும் அவனை உதாசீனமாக நடத்த முற்பட்டாள். ''இந்த வீட்டில் உங்களை யார் மதிக்கிறார்கள்?'' என்று கேட்கத் தலைப்பட்டாள். இதனால், அவனுக்கு ஏற்பட்ட வருத்தமும் வியாகுலமும் எல்லை இல்லாதனவாக இருந்தன. அவனுக்கு வீடு நரகமாயிற்று. வீட்டைவிட்டு ஓடிப்போய், இந்த வருத்தங்களைக் கொஞ்ச நேரமாவது மறந்திருக்க முடியாதா என்று தோன்றிற்று. தன் அவமானத்தை மறந்து தனியாக இருக்க அவன் மனம் நாடியது. இந்தத் துக்கத்தை மறக்கச் சினிமாவுக்குப் போய்ப் பார்த்தான்; விளையாட்டுக்களில் கலந்து கொண்டு பார்த்தான்; புத்தகங்கள் படித்துப் பார்த்தான்; வெளியூர்களுக்குச் சென்று பார்த்தான். இவைகளில் ஒன்றும் அவனுடைய எல்லையில்லாத வருத்தத்தைக் கொஞ்சமும் குறைக்கவில்லை. வீட்டிற்குச் செல்வதும், வீட்டைப்பற்றி நினைப்பதுமே அவனுக்கு நாராசமாக இருந்தன. அதை மறந்திருக்கத்தான் அவன் விரும்பினான். வேறு வழியொன்றும் தெரியவில்லை; குடிக்க ஆரம்பித்தான்.

இது வீட்டில் இன்னும் அதிகமான சண்டையை உண்டாக்கிற்று. அதனால், குடி மேலும் அதிகமாயிற்று. பணம் விரயமாயிற்று; கையில் கிடைத்த பணமெல்லாம் அதில் செலவாயிற்று. வீட்டில் இருப்பவர்கள் அவனுக்காகப் பயந்து பெட்டிகளை ஜாக்கிரதையாகப் பூட்ட ஆரம் பித்தார்கள். அவன் மனைவிகூடத் தன் நகைகளைப் பத்திரமாய்ப் பூட்டி வைக்க ஆரம்பித்தாள். வீட்டில் இவர்கள் சந்தேகம் அதிகமாக அதிக மாக அவன் வருத்தமோ எல்லையற்றதாயிற்று. அதை மறக்க எப் பொழுதும் குடி வெறியில் மூழ்கியிருந்தான். அவன் மனத்தில் ஒரே வெறுப்பு நிறைந்தது. குடியும் வெறுப்பும் அதிகமாகிக் கொண்டே வந்தன. அவனால் தாங்க முடியவில்லை. கொஞ்ச காலம் கழித்துப் புத்தி இழந்து பைத்தியமாக மாறினான்.

இப்பொழுது அவன் தம்பி காலமாகிவிட்டான். அவன் தந்தைக்கு இவன் ஒரே மகனாய் இப்பொழுது விளங்குகிறான். அவனைப் பார்த்துப் பார்த்து அவர் ஏங்குகிறார். அவருக்கு எல்லா ஐசுவரியங்களும்-பணம், செல்வாக்கு, படிப்பு முதலிய அனைத்தும் இருக்கின்றன. ஆனால், இந்த ஒரு குறை அவர் இருதயத்தைப் பிளக்கிறது.

'அருமையான பிள்ளை அவன்; அன்பு நிறைந்தவன். பல நற் குணங்கள் நிறைந்தவனாக இருந்த அவன் ஏன் இப்படியானான்?' என்று பல தடவைகளில் நான் சிந்தித்துப் பார்த்திருக்கிறேன். நாள் ஆக ஆக ஒரு பதில்தான் என் மனத்தில் தோன்றுகிறது. அவன் பெற் றோர்கள் மாத்திரம் அவன் பேரில் சந்தேகப் படாமல் நம்பிக்கை காட்டியிருந்தார்களானால், அவன் வாழ்க்கை எவ்வளவு உன்னதமான தாக இருந்திருக்கும்!

பரஸ்பர நம்பிக்கை இருவரையும் உயர்த்தும்; இருவருக்கும் பலன் கொடுக்கும்; இருவரையும் புனிதமாக்கும். பெற்றோர்களையும் குழந்தைகளையும் இறுகப் பிணிக்கும் அன்புக்கயிறு அது. அது இல்லாவிடில் குழந்தைகளை வளர்க்க முடியாது; குடும்பத்தை நடத்த முடியாது; வாழ்க்கையில் இருக்க முடியாது. தாயும் குழந்தையுமாக இருக்கலாம்; அல்லது அண்ணன் தம்பி, புருஷன் மனைவியாக இருக்க லாம்; ஒருவர்மேல் ஒருவர் நம்பிக்கையின்றிச் சந்தோஷமாக இருக்க முடியாது. நண்பர்களிடத்திலாகட்டும், வியாபாரத்திலாகட்டும் அல்லது வேறு எந்தத் தொழிலிலாகட்டும், அது இன்றியமையாதது.

நம் குழந்தைகள் குற்றங்கள் செய்யலாம்; தவறுகள் செய்யலாம். தவறு செய்யாதவர்கள் உலகில் யார் இருக்கிறார்கள்? ஆனால், அது

காரணமாக அவர்களிடம் அவநம்பிக்கை கொள்வதும், அவர்களைச் சந்தேகிப்பதும் பெரிதும் பாவமாகும். நம்பிக்கையும் அன்புமே அவர்களைத் திருத்தித் தூய்மைப் படுத்தும்.

ஆதலால், பெற்றேர்கள், ஆசிரியர்கள் முதல் குழந்தைகளுடன் பழகும் அனைவரையும் நான் மிகவும் மன்ருடிக் கேட்டுக்கொள்வது இதுதான்! வேண்டுமானுல் நீங்கள் குழந்தைகளைத் திட்டுங்கள்! அடியுங்கள்! தண்டியுங்கள்! ஆனுல், தயவுசெய்து அது காரணமாக அவர்கள் நல்ல குணங்களில் சந்தேகம் மாத்திரம் கொள்ளாதீர்கள்!

# செய்து காட்டுக

ஜூன் மாதம் முதல் வாரம். மாலை நாலரை மணி இருக்கும். வித்யாலயத்தில் என் அறைக்கு வெளியிலுள்ள திட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். பெரிய கார் ஒன்று வெகு ஒய்யாரமாய் வந்து நின்றது. அதிலிருந்து 'சில்க்' சட்டையும், ஜரிகை வேட்டியும் அணிந்த கனவான் ஒருவர் இறங்கினர். விரலில் வைர மோதிரம்; இடது கையில் தங்கச் சங்கிலியுடன் கைக்கடிகாரம். இவையெல்லாம் அவர் ஒரு தனவந்தர் என்பதைத் தெரிவித்தன. அவருடன் ஒரு பையனும் வந்து இறங்கினன். அவனைப் பார்த்ததும் அவர்கள் எதற்கு வந்திருக்கிருர்கள் என்பது ஒருவாறு புரிந்தது. ஜூன் மாத ஆரம்பத்தில் பையனை அழைத்துக் கொண்டு எதற்கு வருவார்கள்? வித்யாலயத்தில் பையனைச் சேர்ப்பதற்குத்தான்.

அவரை உபசரித்து உட்காரச் சொல்லி என்ன விஷயமென்று கேட்டேன். பையனை வித்யாலயத்தில் சேர்க்க வேண்டும் என்று சொன்னர். விசாரித்ததில் அவர் பக்கத்தில் ஒரு நகரத்தில் இருப்பவராகத் தெரிந்தது. அவ்வூர் முதலாளிகளில் ஒருவர். எப்படியாவது வித்யாலயத்தில் பையனைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னர். வித்யாலயத்தில் வருஷத்தில் நாற்பது புதுப் பிள்ளைகளை எடுப்பது வழக்கம். சுமார் இருநூற்றைம்பது அல்லது முந்நூறு விண்ணப்பங்கள் வரும். அவைகளில் பொறுக்கி எடுக்க வேண்டும். அவ்வருஷம் சில தினங்களுக்கு முன்தான் பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து முடிந்திருந்தது. அது விஷயத்தை அவருக்கு எடுத்துச் சொன்னேன்.

அவருக்குச் சமாதானமாகவில்லை. எப்படியும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றார். ''உங்கள் ஊரிலேயே பல பாடசாலைகள் இருக்கின்றனவே! அவைகளில் ஒன்றில் சேர்க்கக் கூடிய வசதியிருக்க, இங்கு வந்து ஏன் இவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''அதற்குக் காரணம் இருக்கிறது'' என்றார். என்னவென்று கேட்டேன்.

''பையன் வீணைகச் சினிமாவுக்குப் போய்க் கெட்டுப் போகிறான். நாள் தப்பினாலும் சினிமாவுக்குப் போவது தவறுவதில்லை. அங்கிருந்தால் அதை அடக்க முடியவில்லை. இங்கே சேர்த்து விட்டால் அப்படிப் போக முடியாதல்லவா? அதற்காகத்தான் இங்கு எப்படியும் சேர்த்துவிட வேண்டுமென்று விரும்புகிறேன்'' என்றார்.

அவர் தொழில் என்னவென்று விசாரித்தேன். ''சினிமாத் தொழில்; படம் பிடிப்பதும் கொட்டகை நடத்துவதும்'' என்றார்.

அப்படியிருக்க அவர் பையன் வேறு எவ்விதமாக இருப்பான்?

வேறு ஒரு தடவையில் ஒருவர் தம் மகனை வித்யாலயத்தில் சேர்க்க அழைத்து வந்தார். அவசியம் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மிகவும் வற்புறுத்தினார். அவர் கல்வி பயின்றவர்; தனவந்தர்; ஊரில் முதன்மையானவரும்கூட. அவர் இருந்த ஊரிலும் பள்ளிகள் இருந்தன. ''அப்படியிருந்தும் ஏன் இவ்வளவு வற்புறுத்துகிறீர்கள்?'' என்று கேட்டேன். அவர் சொன்னார்: ''பையன் அதிகமாகச் சிகரெட் குடிக்கக் கற்றுக்கொண்டான். அதை நிறுத்த வேண்டும்'' என்றார்.

''தாங்கள் சிகரெட் குடிப்பதுண்டா?'' என்று கேட்டேன். ''நிறையக் குடிப்பதுண்டு'' என்றார். பையன் ஏன் சிகரெட் குடிக்கிறான் என்பது புரியவில்லையா?

முதல் பையன் சினிமாவுக்கு அதிகமாகச் சென்றதற்கும், இரண்டாம் மாணவனுடைய சிகரெட் குடிக்கும் பழக்கத்திற்கும் காரண புருஷர்கள் அவர்கள் பெற்றோர்களே என்பது தெளிவாகத் தெரியவில்லையா? நாம் அநுதினமும் இடைவிடாது செய்யும் ஒன்றைச் செய்யக் கூடாதென்று நம் குழந்தைகளிடம் சொன்னால், அந்த வார்த்தையில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை. தகப்பனார் ஒவ்வொரு நாளும் செய்யும் காரியத்தை, தானும் செய்வதில் என்ன தவறு இருக்க முடியுமென்று பிள்ளை நினைக்கிறான். அதற்குமேல்

தந்தை கண்டித்தால், தந்தை செய்வது தவறெனவும், தாம் அநுப விக்கும் ஒன்றைத் தம் மகனுக்கு அளிக்க அவர் மறுக்கிறரெனவும் கொள்ளுகிருன். ' இது சம்பந்தமான அவர் கட்டளைகள் நியாயமற் றவை. ஆதலால், அவைகளை மீறி அக்காரியங்களைச் செய்வதில் தவறில்லை ' என்று அவனுக்குத் தோன்றுகிறது. ஆனல், தகப்பனரை அவ்வயதில் வெளிப்படையாக அவன் எதிர்க்க முடிகிறதில்லை. எனவே, திருட்டுத்தனமாக இக் காரியங்களைச் செய்ய ஆரம்பிக்கிருன்.

பல வேறு விதங்களில் இம்மாதிரியான விஷயங்கள் ஒவ்வொரு வீட்டிலும் நடக்கின்றன. இதனல் பெற்றேர்களுக்கும் பிள்ளைகளுக் கும் எவ்வளவோ மனக்கசப்பு ஏற்படுகிறது. பிள்ளைகள் கீழ்ப்படிவ தில்லை என்று கடிந்துகொள்ளும் பெற்றேர்கள் பலர். ஆனல், இவ்வள வுக்கும் காரணம் தங்கள் வாழ்க்கையும் பழக்க வழக்கங்களுமே என் பதை அவர்கள் உணர்ந்து கொண்டால் இவ்வளவு வருத்தங்களுக்கு இடம் இராது.

பிள்ளைகள் எதைச் செய்யக்கூடாதென்று பெற்றேர்களுக்குத் தோன்றுகிறதோ அதைத் தாங்களும் செய்யக் கூடாது. அப்பொழுது தான் அவர்கள் வார்த்தைகளில் பிள்ளைகளுக்கு நம்பிக்கை உண்டாகும். பெற்றேர்களைப் பற்றிச் சொன்ன இது, ஆசிரியர்களுக்கும் குழந்தைகளை வளர்ப்பதில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் பொருந்தும். பழங்காலத் தில் நம் ஆசிரியர்கள் இதை நன்ருக உணர்ந்திருந்தார்கள். ஆனல், தற்காலத்துக் கல்வி முறையில் இந்தக் கருத்து இன்னும் அதிகமாக இருக்க வேண்டும். 'நான் தமிழ் ஆசிரியர். நான் கணக்கு ஆசிரியர். வகுப்புக்குச் சென்று என் விஷயத்தை நன்ருகச் சொல்லிக் கொடுத்து விட்டால் எனது கடமையை நான் நன்ருகச் செய்தவனவேன்' என்று ஒருவர் நினைத்தால் அது சரியாகாது. ஒருவர் சொல்லிக் கொடுப்பதில் வல்லவராக இருக்கலாம். ஆனல், ஒழுக்கத்திலும், பழக்க வழக்கங் களிலும் மாணவர்களின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு இல்லாவிடில், அவர் எவ்வளவு கெட்டிக்காரராக இருந்தாலும் ஆசிரியராக இருந்து குழந்தைகளுக்குப் பயிற்சியூட்டத் தகுதி இல்லாதவர் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்முடைய உபதேச மொழிகளில் அழகான கதை ஒன்று சொல்லியிருக்கிருர். ஒருவர் தம் குழந்தையை அழைத்துக் கொண்டு சிகிச்சைக்காக ஒரு வைத்தியரிடம் சென்ருர். அப்பொழுது வைத்தியர் சர்க்கரையைப் பொட்டணமாக மடித்துக் கொண்டிருந்தார். குழந்தையின் உடலைச் சோதனை செய்து, "நாளைக்கு வாருங்கள்"

என்று சொல்லி அனுப்பினர். மறுதினம் அவர் வந்ததும், ''குழந்தைக்குச் சர்க்கரை மாத்திரம் கொடுக்காதீர்கள். அவ்வளவுதான்'' என்ருர். குழந்தையை அழைத்து வந்த தந்தை ''ஏன் ஐயா, இதை நேற்றைத் தினமே சொல்லியிருக்கக் கூடாதா?'' என்று கேட்டார். ''நேற்று நானே சர்க்கரை மடித்துக் கொண்டிருந்தேனே; அப்படியிருக்க, குழந்தையைச் சர்க்கரை சாப்பிட வேண்டாமென்று சொன்னல், குழந்தைக்கு என் வார்த்தையில் நம்பிக்கை ஏற்படாதல்லவா?'' என்ருர். இந்தக் கதையில் நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டிய மகத்தான உண்மை புதைந்து கிடக்கிறது என்பதை எடுத்துக் காட்டவேண்டிய அவசியம் இல்லை.

நம் குழந்தைகள் நல்லொழுக்கத்துடனும், பலத்துடனும் வளர வேண்டுமென்று நினைக்கிருேம். நல்ல பழக்கங்களும், கட்டுப்பாடான வாழ்க்கையும், தூய்மையுமே சகலவிதமான சக்திகளுக்கும் அடிப்படையென்பதை நாம் மறந்துவிடலாகாது. எதிர்காலத்தில் குழந்தைகளை ஆண்மையும், தூய்மையும் உள்ளவர்களாக வளர்க்கவேண்டும் என்ற எண்ணத்தை நாம் உண்மையாகவே உடையவர்களாயிருந்தால் நம்முடைய வாழ்க்கையும் அத்தகையதாக இருக்க வேண்டும். ஏனெனில், நம் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கை நம்முடைய தினசரி வாழ்க்கையைச் சார்ந்திருக்கிறது. நம்முடைய மக்கள் எப்படி ஆகவேண்டுமென்று நினைக்கிருேமோ அதற்குத் தகுந்தபடி நாம் வாழ்க்கையை நடத்தவேண்டும்.

எதிர்காலத்தில் நமது நாடு மகத்தானதாகவும், நம் குழந்தைகள் குன்ருப் புகழுடனும் வளரவேண்டும் என்று நினைக்காதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். அனைவருக்கும் அந்தக் கருத்து உண்டு. ஆனல், வெறும் எண்ணம் மாத்திரம் காரியங்களைச் சாதிக்கப் போதாதல்லவா? அவ்வெண்ணங்களைக் கொண்டுசெலுத்தப் போதுமான முயற்சி செய்கிறவர்கள்தாம் அவைகளில் வெற்றி பெறுகிருர்கள். இதைவிட உயர்ந்த-புனிதமான முயற்சி வேறு ஒன்றுமில்லை. அதில் நாம் அனைவரும் ஈடுபடுவோமாக!

# பயப்படுத்தாதீர்கள்

எங்கள் வீட்டுக்கு அருகில் ஒரு சந்து. அதில் ஒரு மொட்டை மரம் நெடு நாட்களாக இருந்து வந்தது. அதைக் கண்டால் எனக்குப் பயம். மத்தியானத்தில் கூட நான் அதனருகில் செல்ல மாட்டேன். அதில் ஒரு பேய் இருக்கிறதென்று என் தாய் எனக்குக் காரணம் சொல்லிவைத்திருந்தாள்.

நான் குழந்தையாக இருந்தபோது அம்மா சொன்னபடி சில சமயங்களில் கேட்க மாட்டேன்; இருட்டில் அங்கும் இங்கும் ஓடு வேன். அம்மாவுக்கு நான் அப்படி போவது பிடிக்கவில்லை. சொல்லிப் பார்த்தாள்; பின் மிரட்டிப் பார்த்தாள்; அதன் பின் அடித்தும் பார்த்தாள்; இவையெல்லாம் ஒன்றும் பயனில்லாமல் போகவே இந்தக் கதையை ஆரம்பித்தாள்.

அந்த மரத்தில் ஒரு பயங்கரமான பேய் இருந்ததாம். அது பிள்ளைகளை அடித்துக் கொன்று விடுமாம். ஆதலால் அங்கெல்லாம் இருட்டில் போகக்கூடாதென்று அவள் சொன்னாள். மிரட்டலும், அடியும் செய்யாத காரியத்தைப் பேய்க் கதை சாதித்தது. அன்று முதல் இரவில் அந்தப் பக்கம் போகமாட்டேன். அங்கு மாத்திரம் அல்ல, இருட்டில் எங்குமே போகப் பயம் ஏற்பட்டது.

எங்கள் வீட்டின் வெளிக் கூடத்தில் விளக்குப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். அங்கு எங்கள் தகப்பனார், குமாஸ்தா முதலியவர்கள் இருந்து தங்கள் வேலையைக் கவனிப்பார்கள். வீட்டிற்குள்ளே ஆகாரத்திற்குச் செல்வதற்கு முன், ஒரு நடையைக் கடந்து செல்ல வேண்டும். வெளிக்கூடத்தில் உள்ளதுபோல் உள் கூடத்திலும் விளக்கு

இருக்கும். நடையில் விளக்கு இராது; இருட்டாக இருக்கும். அந்த நடை வழியாகச் செல்லுவதில் கூட எனக்குப் பயம் உண்டாகும். அந்த நடையின் மூலை முடுக்குகளில் பேய் இருந்து பிடித்துக் கொள்ளும் என்ற பயம். இந்தப் பயம் வெகு காலம் இருந்தது. 12, 13 வயது வரை அந்த நடையைக் கடக்கும்போது பேயின் கையில் அகப்படாமல் இருக்கும் பொருட்டு 'சரேலெ'ன்று ஓடிவிடுவேன். இன்னுங் கூட இருட்டில் போகச் சில சமயங்களில் பயமில்லாமல் இருப்பதில்லை. இதற்கெல்லாம் காரணம் என் தாய் குழந்தைப் பருவத்தில் சொன்ன பேய்க் கதைதான் என்று சொல்லவும் வேண்டுமா?

பயத்தில் பல விதங்கள் உண்டு. பேயையும், இருட்டையும் கண்டு பயந்து கொள்வது ஒருவகைப் பயம். சிலர் இருட்டில் போக அஞ்சமாட்டார்கள். கிராமத்திலிருக்கும் பலருக்கு அதிகாலையிலும் இரவிலும் தோட்டம், காடு முதலியவற்றிற்குச் சென்று பழக்கமிருக்கும். ஆதலால், அவர்களுக்கு அதில் பயம் இராது. உத்தியோகஸ்தர்கள், கிராமத்தில் பெரிய தனக்காரர்கள் முதலியவர்களைச் சாதாரணமாகச் சந்தித்துப் பேசக் கூடச் சிலர் பயப்படுவார்கள்.

நகரத்தில் இருக்கும் பிள்ளைகள் நல்ல மின்சார வெளிச்சத்தில் வளர்ந்து விட்டு, கிராமங்களுக்குச் சென்றால் இருட்டிலே செல்லப் பயப்படுவார்கள். அவர்களுக்கு மனிதர்கள் யாரையும் பார்த்துப் பேசவும், வாதாடவும் சாதாரணமாகப் பயம் இராது. இதற்குக் காரணம் அவர்கள் இளவயதில் பெற்ற பயிற்சியும், பழக்கமுமே ஆகும்.

வித்யாலயத்தில் ஒரு பையன் இருந்தான். அவனுக்குச் சிறிது சளி பிடித்துக் கொண்டாலும் பயந்துபோய்ப் படுக்கைபோட்டுப் படுத்துக் கொள்வான்; லேசான காய்ச்சல் வந்தாலும் அப்படியே. 'அப்படிச் செய்யக்கூடாது; இப்படிச் செய்யக் கூடாதென்று' பலவித மான பத்தியங்கள் கூறுவான். அவன் பேசுவதையும் அவன் ஜாக்கிரதையையும் பார்த்தால் அறுபது வயதுக் கிழவன் மாதிரி இருக்கும். மற்ற பிள்ளைகள் மிகச்சாதாரணமாக எண்ணி, கொஞ்சமும் தொந்தரவு செய்து கொள்ளாத விஷயங்களில்கூட அவன் கலவரம் கொள்வான். இதற்குக் காரணம் என்னவென்று ஆராய அவன் வீட்டு விஷயங்களைப்பற்றி விசாரித்தோம். அவன் ஒரே பையன். அவன் தாய் இளம் வயதில் காலமாகிவிட்டாள். அவன் பாட்டிதான் அவனை வளர்த்து வந்தாள். பாட்டி அவனை அதி ஜாக்கிரதையாகக் காப்பாற்றித்தான் வந்தாள். அவனுக்குச் சளி பிடித்தாலும் அல்லது வேறு சாதாரணத் தொந்தரவு ஏதாவது அவன் உடம்பிற்கு நேர்ந்

தாலும் பாட்டி மிகவும் கவலைப்படுவாள். அவனுக்கு இருந்த உடம்பைப்பற்றிய பயம் அவன் மனத்திலும் நுழைந்தது. அதுதான் மேற்சொன்ன அவனுடைய பரபரப்புக்கும், பயத்திற்கும் காரணமாக இருந்தது.

வேறு சில பிள்ளைகள் வகுப்பில் மற்றவர்களுடன் பழகமாட்டார்கள்; அதிகமாகச் சிரித்துப் பேசவும் மாட்டார்கள். அவர்கள் நல்ல பிள்ளைகளாக இருக்கலாம்; தங்கள் காரியங்களைத் திறம்படச் செய்கிறவர்களாகவும் இருக்கலாம். எனினும், மற்றவர்களுடன் தாராளமாகப் பழக நம்பிக்கையில்லை. காரணம் என்னவென்று ஆராய்ந்தோம். அவர்கள் குடும்பம் மரியாதையான மத்தியதரக் குடும்பம். தங்கள் பணக்கார உறவினர்கள் தங்களை மரியாதையாக நடத்த மாட்டார்கள் என்று தாய், தந்தையருக்குப் பயம். அதற்குக் காரணமும் இருக்கலாம்; சில சந்தர்ப்பங்களில் அவர்கள் மரியாதைக் குறைவாக நடத்தப்பட்டிருக்கலாம். தங்கள் பிள்ளைகளை இந்த அவமரியாதையினின்றும் காப்பாற்ற வேண்டுமென்பது அவர்கள் எண்ணம். எனவே, அவர்கள் மற்ற பணக்காரப் பிள்ளைகளுடன் பழகும்போது, "உனக்கும் அவனுக்கும் என்ன சிநேகம் வேண்டிக்கிடக்கிறது? அவன் பணக்காரப்பிள்ளை. நம்மை மதிப்பானா?" என்று உபதேசிக்கிறார்கள். இந்த உபதேசம் அவன் மனத்திலும் பதிகிறது. அவர்கள் தன்னை மதிக்க மாட்டார்கள் என்ற எண்ணம் பிள்ளை மனத்தில் உண்டாகிறது. எனவே, அவன் தன்னம்பிக்கை இழந்து, மற்றவர்களுடன் பழகச் சக்தியற்றவனாகி விடுகிறான்.

மனிதன் இன்னும் பல விதமான பயங்களுக்கு ஆளாகி இருக்கிறான். பொருள்நஷ்டம், மூப்பு, பிணி, சாக்காடு—இவை அனைத்திற்கும் அவன் பயந்து நடுங்குகிறான். பயம் எத்தகையதாக இருந்தபோதிலும் அது மனிதனைத் தாழ்த்தி வலிமையற்றவனாகச் செய்கிறது என்பது யாராலும் மறுக்கமுடியாத உண்மையாகும். நமது நாட்டிலே எதிர்காலத்திலே ஒரு மகத்தான சக்தி வாய்ந்த ஒரு சமுதாயத்தை உண்டாக்க வேண்டுமானால், நம் குழந்தைகள் பயமற்றவர்களாக, தைரியமும், தன்னம்பிக்கையும் நிறைந்தவர்களாக வளரவேண்டும்.

குழந்தைப் பருவத்திலும் இளமையிலும் என்ன கருத்துக்களுடன் நம் குழந்தைகளை வளர்க்கிறோமோ, அக் கருத்துக்கள் குழந்தைகளின் மனத்தில் ஆழப் பதிந்து வாழ்க்கை முழுவதும் அவர்களுக்கு அடிப்படையாக இருக்கின்றன என்பது நாம் கண்ட உண்மை. எனவே, தாய்மார்களும், தந்தைமார்களும் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கிய

மான கருத்து: குழந்தைகளைப் பயங்காட்டி வளர்க்கக்கூடாது. அடித்தால் அன்று மாத்திரந்தான் அவர்களுக்கு வலி உண்டாகிறது. ஆனால், அவர்களைப் பயப்படுத்தி அடக்கினால் அதன் வடு ஆயுள் முழுவதும் இருந்து, அவர்கள் எதிர்காலத்தையும் பாதிக்கிறதென்பதை அவர்கள் மறந்து விடலாகாது.

நம் குழந்தைகளைப் பயமில்லாமல் வளர்க்க வேண்டுமென்ற எதிர்மறைக் கருத்து மாத்திரம் போதாது. அவர்களை எதற்கும் அஞ்சாத் தைரியத்துடனும், ஆண்மையுடனும் வளர்க்க வேண்டுமென்ற ஆர்வம் நமது மனத்தில் நிறைந்திருக்க வேண்டியது அவசியமாகும். நாம் பேசும் வார்த்தைகள், நாம் சொல்லும் கதைகள், நம்முடைய தினசரி நடவடிக்கை ஆகிய அனைத்தும் நம் குழந்தைகளுக்கு இத்தகைய உன்னதமான கருத்துக்களை அளிக்கக்கூடியனவாக இருக்கட்டும். அங்ஙனம் தங்கள் குழந்தையை வளர்க்கும் ஒவ்வொரு தாயும் தந்தையும் தேசத்திற்குப் பெரிய சேவை செய்யும் தேசபக்தர்கள் ஆவார்கள்.

# வளரவிடுக

குழந்தை பிறந்து கொஞ்ச காலத்தில் தவழ்ந்து நகர ஆரம்பிக்கிறது; அதற்குப் பிறகு நிற்கவும், நின்று நடக்கவும் முயல்கின்றது. அப்படி நடப்பதற்கு எவ்வளவு முயற்சிகள் அது செய்கிறதென்பது அதைக் கவனித்தவர்களுக்குத்தான் தெரியும். முதலில் எதையாவது பிடித்துக்கொண்டு நிற்க முயற்சி செய்யும்; அது முடியாமல் கீழே விழும். மறுபடியும் மறுபடியும் முயற்சி செய்து நிற்கப் பழகும். நடப்பதற்கு யத்தனம் செய்யும்போது இன்னும் பல தடவைகளில் அது விழுகிறது. ஆனால் ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம், பல தரங்கள் விழுந்தபிறகும் தன் முயற்சியைக் கைவிடுவதில்லை. பல நாட்கள், வாரங்கள், பல நூறு தடவைகள் செய்த முயற்சி காரணமாக அது முதலில் தள்ளாடி நடக்கவும், பின்பு உதவியின்றிச் சரியாக நடக்கவும், பின் ஓடவும் பழகிக்கொள்கிறது. ஆனால், முதல் தரம் விழும்போதே அதன் தாய் அந்தக் குழந்தையின் பேரிலுள்ள பேரன்பு காரணமாய், 'அட கண்ணே! விழுந்து விடுவாயப்பா. இனிமேல் இப்படிச் செய்யாதே' என்று சொன்னால், அந்தத் தாயைப்பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? ''அவள் அறிவில்லாதவள். குழந்தை விழுந்து அநுபவிக்காமல் எப்படி நடக்கக் கற்றுக்கொள்ளமுடியும்? அவள் சொல்லுகிறபடி குழந்தை கேட்டால், நடக்கும் பழக்கத்தையே பெறமுடியாமல்அல்லவா போய்விடும்?'' என்று நீங்கள் சொல்லுவீர்கள்.

ஆனால், இப்படித்தான் நம் பெற்றோர்களில் பெரும் பகுதியினர் இருக்கிறார்கள். இதைக்கேட்டு நீங்கள் ஆச்சரியப்படலாம். எனினும் உண்மை அப்படித்தான் இருக்கிறது என்பது வருத்தமான விஷயம்.

சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கத்தியைத் தொட விடமாட்டார்கள்; 'ஐயோ, கையை வெட்டிக் கொள்வானே' என்று பிடுங்கி வைத்துக் கொள்ளுவார்கள்; சுட்டுக்கொள்வான் என்று சொல்லி நெருப்புக்கு அருகில் போக விடமாட்டார்கள்; கைகால் சுளுக்கிக் கொள்ளுமென்று மேஜைமேல் அல்லது நாற்காலிமேல் ஏறிக் குதிக்க விடமாட்டார்கள்; வண்டி முதலியன மோதக் கூடுமென்று நினைத்துத் தனியாகத் தெருவில் போக விடமாட்டார்கள். கடைக்குப் போனால் ஏமாற்றப்படுவார்கள் என்று அங்கும் தங்கள் பிள்ளைகளைப் போக அநுமதிக்க மாட்டார்கள். இங்ஙனம் வளரும் பிள்ளைகள் எந்தவிதமான அநுபவமும் இல்லாத காரணத்தால் அறிவு வளர்ச்சி குன்றியவர்களாகவே இருப்பார்கள். அவர்களுக்குத் தன்னம்பிக்கை இராது. எந்தக் காரியத்திற்கும் அவர்கள் மற்றவர்களை நம்பி வாழ்க்கையை நடத்துகிறவர்களாகவே இருப்பார்கள்.

பிள்ளைகள் நன்றாகத் தைரியத்துடனும், தன்னம்பிக்கையுடனும் வளர வேண்டுமானால் அவர்களை இயல்பாக வளர விடவேண்டும். நல்ல சுற்றுப் புறத்தையும், நல்ல பழக்க வழக்கங்கள் வரக்கூடிய சந்தர்ப்பங்களையும் அவர்களுக்கு அளிக்க வேண்டியது நம் பொறுப்பு. அதற்குமேல் அவர்கள் பெறவேண்டிய அநுபவங்களைத் தாங்களே பெறும்படியாக விட்டு விடவேண்டும்.

கத்தியைத் திறப்பதிலும், உபயோகப் படுத்துவதிலும் அவன் கையை வெட்டிக்கொண்டால் அதற்காக மிகவும் கலவரப்படவேண்டிய அவசியம் இல்லை. கத்தியைச் சரிவர உபயோகிக்கும் விதத்தை அவனுக்குச் சொல்லிக்கொடுத்தால் போதுமானது. நெருப்பினால் கையைச் சுட்டுக்கொண்டால் அதன் மூலம் நெருப்பின் குணத்தைத் தானாகவே நன்றாகத் தெரிந்து கொள்ளுவான். கை சுளுக்கிக் கொண்டால், நாம் பிரமாதப்படுத்தக்கூடாது. இப்படிக் குதித்து விளையாடினால், சில சமயங்களில் அப்படி நேரும் என்பது அவன் தெரிந்து கொள்ளவேண்டிய அநுபவம். சில சமயங்களில் கைகால்கள் கூட விளையாடும்போது முறிந்துவிடலாம். ஆனால், இவைகளுக்காக அழுவதும், திட்டுவதும், மிகப் பெரிய விபத்துகள்போலப் பாவித்துத் துயரப்படுவதும் தவறு. இவைகளுக்கு வேண்டிய சிகிச்சைகளை உடனே செய்ய வேண்டியது அவசியம். ஆனால், பையன் மனத்தில் துயரத்தையோ அவநம்பிக்கையையோ உண்டாக்காமல், இவை

INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION
( DEEMED UNIVERSITY )

சிகிச்சையால் சரிசெய்யக்கூடியவை என்ற நம்பிக்கையை உண்டாக்க வேண்டும். இத்தகைய சந்தர்ப்பங்களில் சந்தோஷமாய் இவைகளைச் சகித்துக் கொள்ளுபவர்களே மதிப்பிற்குரியவர்கள் என்ற உணர்ச்சியை நாம் பிள்ளைகளிடம் உண்டாக்க வேண்டும்.

குழந்தைகள் தங்கள் இயல்பையும் அநுபவத்தையும் ஒட்டியே வளருவார்கள். அவர்கள் நன்ருக வளருவதற்கு வேண்டிய சூழ்நிலைகளை உண்டாக்குவதே பெற்ரோரின் கடமையாகும். அதற்குமேல் அவர்கள் குழந்தைகளைத் தாமே வளரவிட வேண்டியதுதான். குழந்தைகளின் வளர்ச்சி ஒரு செடியைப் போன்றது. செடி தன் இயற்கைப்படி தானே வளரும். அங்ஙனமே குழந்தையும் தன் இயற்கையை ஒட்டியே சுயமாகக் கற்றுக்கொள்ளுகிறது. ஆனுல், அது தன் சுபாவப்படி வளருவதற்கு நாம் உதவி செய்யமுடியும். அதற்கு மேல் அது பெறும் அநுபவத்திலிருந்துதான் அதன் அறிவு வளரும். செடி நன்கு வளரும் பொருட்டு நாம் பூமியைக் கிளறிவிடலாம்; சுற்றிலும் வேலியிட்டு மற்றப் பிராணிகள் வந்து அதை அழிக்காமல் காப்பாற்றலாம், அது வளருவதற்குத் தேவையான எரு, தண்ணீர் முதலியவற்றை அதற்கு உபயோகிக்கலாம். இவ்வளவோடு நம் வேலை நின்று விடுகிறது. அதற்கு வேண்டிய அனைத்தையும் அதுதான் உட்கொள்ளவேண்டும்; ஜீரணிக்க வேண்டும். அது போன்றது குழந்தையின் வளர்ச்சிக்குப் பெற்ருேரும் ஆசிரியனும் செய்யவேண்டிய உதவியும். குழந்தைகள் தங்கள் சொந்த அறிவை உபயோகப் படுத்தவும், தங்கள் கை, கால், கண், காது ஆகியவற்றைச் செவ்வனே பயன்படுத்தவும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்தால் அதுவே போதுமானது.

பிள்ளைகளின் விஷயத்தில் பெற்ருேர் அதிகமாகப் புகுந்து சிறு விஷயங்களிலும் தங்கள் விருப்பம்போல் செய்யும்படி வற்புறுத்துவது மிகவும் தவருன விஷயமாகும். அதன் மூலம் பிள்ளைகள் தாங்கள் சுயமாக நினைக்கும் பழக்கத்தை இழக்கவும், சரியானபடி வளர்ச்சியடையாமல் போகவும் ஏதுவாகிறது. ஒவ்வோர் உயிரிடத்திலும் பல உணர்ச்சிகள் இருக்கின்றன. அவை சரியாகத் திருப்தி செய்யப்பட வேண்டும். பெற்ருேர்கள் பலாத்காரமாகத் தங்கள் பிள்ளைகளைத் திருத்த முயற்சி செய்கின்றனர். ஆனுல். இவ்விதமான பலாத்காரத்தின் மூலம் பிள்ளைகள் மனத்தில் எதிர்ப்பு உண்டாகுமே யொழிய வேறில்லை.

விவேகானந்த சுவாமிகள் ஓரிடத்தில் வெகு அழகாகச் சொல்லி யிருக்கிறார் : ' ஒருவனுக்குச் சுயேச்சை அளித்தால் அவன் பலம் பெற்றுச் சிங்கம்போல் ஆகலாம். ஆனால், அவனைப் பலாத்காரப் படுத்தி அடக்கி வைத்தால் அவன் தன் குறைகளை மறைத்து நரிபோல் ஆவான்'—இவ்வார்த்தைகளில் ஒரு பெரிய உண்மை புதைந்து கிடக்கிறது. பிள்ளைகளின் வளர்ப்பு பொறுப்பை ஏற்கும் அனைவரும் இச்சொற்களில் ஆழ்ந்திருக்கும் அற்புதமான கருத்தை எண்ணி உணர்வார்களாக!

# தொட்டில் பழக்கம்

நல்ல வெயில். சித்திரை மாதத்துச் சூரியன் காய்ந்துகொண்டிருந்தான். ஒரு வயோதிக யாத்திரிகர் சாலை வழியாகச் சென்று கொண்டிருந்தார். வெயிலில் கஷ்டப்பட்டு, கொஞ்சம் நிழலில் இருந்து ஓய்வெடுத்துக் கொள்ள விரும்பி ஒரு பெரிய மரத்தடியை அணுகினர். அங்கே போய் உட்கார்ந்திருப்பார். அவ்வளவுதான்! ஒரு கொடிய சப்தம் கேட்டது. ''யாரடா அது? அடி; வெட்டு; குத்து!'' என்ற சப்தங்கள் காதில் விழுந்தன. இப்படிப் பேசுகிறவர் யாரென்று ஆச்சரியப்பட்டுச் சுற்றிலும் பார்த்தார். மனிதர் எவரும் பக்கத்தில் காணவில்லை. அச்சப்தம் மீண்டும் வரவே மேலே அண்ணாந்து பார்த்தார். மரத்திலிருந்துதான் வருவதாகத் தெரிந்தது. மறுபடியும் கவனிக்கவே மரத்திலிருந்த ஒரு கிளி இவ் வார்த்தைகளைச் சொல்லுவதாகத் தெரிந்தது. மீண்டும் மீண்டும் அதே வார்த்தைகள் வரவே, அவருக்கு அம்மரத்தடியில் தங்க மனம் இல்லை. வருத்தத்துடன் அம்மரத்தை விட்டுப் புறப்பட்டார்.

கொஞ்ச தூரம் சென்ற பிறகு வேறு ஒரு நல்ல மரம் தென்பட்டது. அதனடியிலாவது தங்கி ஓய்வெடுத்துக்கொண்டு செல்லலாமென்று அருகே சென்றார். அங்கே சென்றதும் அதிலிருந்தும் சில சப்தங்கள் வெளிவந்தன. ஆனால், இந்தச் சப்தம் முந்திய மரத்தில் கேட்டதற்கு முற்றும் வேறுபட்டதாக இருந்தது. ''வாருங்கள்; அமருங்கள்; சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்கள்!'' என்று அது சொல்லிற்று. இதுவும் மனிதர்கள் பேச்சல்ல. மேலே பார்த்தார். இங்கும் ஒரு கிளிதான்! அவருக்கு மிக ஆச்சரியமாக இருந்தது. முதல் மரத்தில் இருந்த கிளி

''யாரடா? குத்து, வெட்டு!'' என்று மிகக் கொடூரமான வார்த்தைகளைப் பேசி அவரை விரட்டியது. ஆனால், இந்தக் கிளியோ வெகு உபசார மான வார்த்தைகளை வெகு இனிமையாகச் சொல்லுகிறது. இந்தக் கிளி இப்படியும், அந்தக் கிளி அப்படியும் சொல்லுவானேன்? இதன் காரணத்தை அவர் அறிய விரும்பினார்.

அவர் ஆராய்ச்சியின் பயனாக அவர் அறிந்த உண்மை இது! அவ் இரண்டு கிளிகளும் ஒரே தாய்க்குப் பிறந்தவை. ஒரு கிளியை ஒரு கசாப்புக் கடைக்காரன் கொண்டு போய், தன் கடையில் வைத்து வளர்ந்து வந்தான். அங்கு அவன் பேசிய வார்த்தைகளைக் கேட்டு, அவ்வார்த்தைகளையே அது பேசக் கற்றுக்கொண்டது. மற்றொரு கிளியை ஒரு பெரியவர் எடுத்துச் சென்று, தம் ஆசிரமத்தில் வளர்த்து வந்தார். அது ஆசிரமத்தில் அவர்கள் பேசும் பேச்சுக்களையே கேட்டு அதன்படி பேசக்கற்றுக் கொண்டது. இரண்டு கிளிகளும் ஒருநாள் தத்தம் கூடுகளிலிருந்து தப்பி இரு மரங்களில் வந்து அமர்ந்தன. யாத்திரிகரைக் கண்டதும் தமக்குப் பழக்கப்பட்ட வார்த்தைகளைப் பேசின.

இது ஒரு பழங்கதை. மற்றப் பழங்கதைகளைப் போல் இதிலும் சிறந்த உண்மை ஒன்று புதைந்திருக்கிறது. பல பெற்றோர்கள் ''குழந்தைதானே! நாம் பேசுவது அதற்கு என்ன அர்த்தமாகப் போகிறது?'' என்று நினைக்கிறார்கள். அது முற்றும் தவறு. பாஷை அதற்கு அக்காலத்தில் அதிகமாகத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், பல விஷயங்களை அது உணர்ச்சி ரூபமாகவே (instinctively) தெரிந்து கொள்ளுகிறது. தன் தாய் தந்தையர்கள் சண்டையிட்டுக் கொள்வ தையும், சந்தோஷமாக இருப்பதையும், அவர்களுக்குக் கோபம், ஆத்திரம் முதலியன உண்டாவதையும் அது அறியாமல் இருப்பதில்லை. இவ்வுணர்ச்சிகள் அதன் மனத்தில் பதிந்து அதன் வளர்ச்சியைப் பலவிதங்களில் பாதிக்கின்றன.

மேலும், பெற்றோர்கள் பேசும் வார்த்தைகள், அவர்கள் உற வினர்கள், நண்பர்கள் முதலியவர்களை வரவேற்கும் முறை, அவர்கள் காரியங்கள் செய்யும் தன்மை முதலிய அனைத்தும் குழந்தையைப் பாதிக் கின்றன என்பதைச் சாதாரணமாகக் குழந்தைகளைக் கவனிப்பவர்கள் கூடத்தெரிந்து கொள்ள முடியும். சில குழந்தைகள் இளைஞர்களாக வளர்ந்த பின்னும் சில கெட்ட வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். அவர்கள் எப்படி இவ்வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள் என்பதை ஆராய்ந்தால் அவை அவர்கள் வீட்டிலிருந்து கற்று வந்தவை என்பது

புலப்படும். அவர்கள் தொனி, தோரணைகூடத் தங்கள் தாய் தந்தையரை ஒட்டியிருப்பதைக் கவனிக்கலாம்.

குழந்தைக்கு முதலில் தெரிவது தன் தாயே ஆகும். அதற்குப் பிறகு அதன் தந்தை. பல வருஷங்கள் அது இவர்களைச் சார்ந்து இவர்கள் பாதுகாப்பிலேயே வளர்கிறது. அதன் உலகம் முழுதும் அவர்கள் தாம். அவர்களே அப்பருவத்தில் அதன் லட்சியமாகவும் விளங்குகிறார்கள். எனவே, தன்னையும் அறியாமல் அவர்கள் போக்கை அது பின்பற்றுகிறது; அவர்கள் பேசுகிறபடி பேசுகிறது; அவர்கள் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகிறது; அவர்கள் விருப்பு வெறுப்புக்களால் பாதிக்கப் படுகிறது. அவர்கள் எதைக் கண்டு பயப்படுகிறார்களோ அதைக்கண்டு பயப்படுகிறது; எதைக் கண்டு ஏளனம் செய்கிறார்களோ அதைக் குழந்தையும் ஏளனம் செய்கிறது. இவ் வெண்ணங்களும் கருத்துக்களும் நாள் ஆக ஆக ஆழ்ந்து அதன் மனத்தில் பதிகின்றன. அந்தக் குழந்தை உள்ளத்தில் அதன் எதிர்கால வாழ்க்கைக்கே அவை அடிப்படையாக அமைகின்றன. அதற்குப் பின் நாள் ஆக ஆகக் குழந்தை வளர்ந்து பாலகனாகி இன்னும் வளர்ந்து இளைஞனாகிப் பின்னால் முதிர்ந்த மனிதனாகலாம். ஆனால், தன் குழந்தைப் பருவத்தில் அடைந்த அனுபவம் அனைத்தும் மனத்தில் என்றும் அழியாமல் இருந்து, பிறருக்குத் தோன்றாமல் அவனைச் செலுத்தும் சக்தியாக அமைகிறது. அதற்குப் பிறகு மற்றப் பல அனுபவங்கள் வரலாம். ஆனால், அவை அனைத்தும் அந்த அஸ்திவாரத்தை அடிப்படையாகக் கொண்டனவாகவே இருக்கும். இந்த உண்மையை உணர்ந்துதான் நம் பெரியோர்கள் ''தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்'' என்ற பழமொழியை உண்டாக்கினார்கள்.

தவறான பழக்க வழக்கங்களைக் கூடப் பிற்காலத்தில் திருத்திக் கொள்ள முடியலாம். ஆனால், மனத்தில் உண்டாகும் கோணல்களைப் பின்னால் என்றும் திருத்துவது கடினமான காரியம். பொறாமை பிறரிடத்தில் சந்தேகம், தன்னம்பிக்கை இல்லாமை, பயம், பேடித்தனம் முதலிய குணங்கள் குழந்தையாக இருக்கும்போது ஏற்பட்டால் அவைகளை என்றும் மாற்றுவது கடினமாகப் போய் விடுகிறது. நெடுங்காலத்திற்குப் பின், நமது வாழ்க்கையின் அந்திய காலத்தில் கூட நமது குழந்தைப் பருவத்தின்போது நாம் பெற்ற அனுபவத்தின் பயனைக் காணலாம்.

எனவே, நம் பெற்றோர்களுக்கு இவ்விஷயத்தில் பெரிய பொறுப்பு இருக்கிறதென்பது கூறாமலே விளங்கும். எதிர்காலத்தில் நம் மக்கள் வீரர்களாய், ஆண்மையுள்ளவர்களாய், அன்பும் ஒற்றுமையும் உள்ள வர்களாய், மகத்தான காரியங்களைச் செய்யும் சக்தியுள்ளவர்களாய் விளங்க வேண்டுமானால், அது பெரும்பாலும் அவர்கள் குழந்தைப் பருவ அனுபவத்தையும், பயிற்சியையும் பொறுத்திருக்கிறது. இத் தகைய பழக்கத்தையும் பயிற்சியையும் அளிப்பதே நம் பெற்றோர்கள் தங்கள் தாய் நாட்டிற்குச் செய்யக்கூடிய அரிய சேவையாகும்.

# இரு பெண்களின் தற்கொலை

சில மாதங்களுக்கு முன் நமது முக்கியமான தினசரிப் பத்திரிகை ஒன்றில் இந்தத் தலைப்புடன் ஒரு செய்தி பிரசுரமாகியிருந்தது, நண்பர்களுக்கு நினைவு இருக்கும். அந்தத் தலைப்புடன் அதன் விவரங்களும் வெளியாகி இருந்தன. இரண்டு பெண்கள் ஓர் ஊரில் ஒரு பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார்கள். அவ்வருஷம் அவர்கள் பரீட்சையில் தேர்ச்சி பெறவில்லை. முன் வருஷமும் தேர்ச்சி இல்லை. அவர்கள் இருவரும் பரீட்சையில் தோல்வியுற்ற வருத்த மேலீட்டால் தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானம் செய்து கொண்டார்கள்; காலையில் இருவரும் வீட்டைவிட்டுப் புறப்பட்டார்கள்; கொஞ்ச தூரத்தில் ஒரு குளமும், ஓர் ஆலயமும் இருந்தன. அங்கே சென்று குளித்து பிரார்த்தனை செய்தார்கள்; பிறகு குளத்தில் குதித்து மடிந்தனர். இது தான் செய்தியின் சாராம்சம்.

இதைப் படித்ததும் என் மனதில் வருத்தமும், கோபமும் உண்டாயின. இப்படி நேர்ந்ததே என்ற வருத்தம். இதற்குக் காரணமாக இருந்த அந்தப் பொல்லாத பரீட்சையின்மேல் கோபம். "இப்படியும் பெண்கள் தங்கள் உயிரை, இதற்காக மாய்த்துக் கொள்வார்களா ? இந்தப் பாழாய்ப்போன பரீட்சையிலே தேர்ச்சி பெருவிட்டால் தான் என்ன ?'' என்று பலவாருன எண்ணங்கள் இச் செய்தியைப் படிக்கும் யார் மனத்திலும் தோன்றுமல்லவா ? இவர்கள் இங்ஙனம் செய்ததற்குப் பரீட்சையில் தவறியதுதான் காரணமா, அல்லது வேறு காரணங்கள் எவையேனும் இருக்கின்றனவா என்று நாம் ஆராய வேண்டும்.

அடிக்கடி இன்னும் ஒரு விதமான செய்தியையும் பத்திரிகையில் காண்கிறோம். அது பையனைக் காணோம் என்ற தலைப்பில், 'வயது 9, மாநிறம், சுருட்டை மயிர், வெள்ளைச் சொக்காய் போட்டுக் கொண்டிருந்தான்—நேற்று முன் தினத்திலிருந்து காணோம். அவன் பெற்றோர்கள் அவன் பிரிவைத் தாங்காது வருந்துகிறார்கள். தயவுசெய்து கண்டு பிடிப்பவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்க ' என்று இருக்கும். ஏன் பையன்கள் இப்படிப் பெற்றோர்களை விட்டு ஓடிப் போகிறார்கள் ? குழந்தையாக இருக்கும்போது பெற்றோர் கொடுக்கும் பாதுகாப்பை உதறித் தள்ளிவிட்டுப் போவது எளிதான காரியம் அல்ல; சாதாரணமாக குழந்தைகளுக்கு இந்த எண்ணமே பயத்தை உண்டாக்கும்; எனினும் செய்கிறார்கள். ஏன்? அதேபோல் தற்கொலை, யாரும் விரும்பிச் செய்து கொள்ளும் ஒரு விஷயம் அல்ல. அதுவும் சிறு குழந்தைகள் செய்து கொண்டது என்னவோ உண்மை. 'ஏன் அவ்விதம் நடந்தது?' என்பதுதான் கேள்வி.

இது எவ்விதம் நேர்ந்திருக்கும் என்பதை ஒருவாறு ஊகிக்கலாம். தற்கொலை செய்து கொண்ட பெண்கள் முதலில் ஒரு வருஷம் தேர்வில் தவறியவர்கள்; மீண்டும் தவறியிருக்கிறார்கள். பெற்றோர்களுக்குத் தங்கள் பெண்கள் நன்றாகப் படித்து வரவேண்டுமென்ற ஆசை. அவர்கள் முதல் வருஷம் தவறியதும் பெற்றோர்களுக்குப் பெரிய ஏமாற்றம். அவர்களை நன்றாக படிக்கவைப்பதற்கென்று நினைத்துப் பலவாறாகப் வைதிருப்பார்கள். வைததில் நம் வீடுகளில் உபயோகப்படுத்தும் வார்த்தைகளைத்தான் நேயர்கள் அறிவார்களே! ' கழுதைபோல வயதாகி விட்டது. அடுத்த வீட்டுப் பெண் கமலா உன்னைவிடச் சிறியவள்; உன்னைவிட மேல் வகுப்பில் படிக்கிறாள். அண்டை வீட்டுச் சரஸ்வதி உன்னைவிட இரண்டு வருஷம் சிறியவள்; ஆனால், அதிக மார்க் வாங்குகிறாள் ' என்று சொல்லுவதுடன் கூட நிறுத்தாமல், 'இப்படி மோசமாக இருந்தால் உன்னை யார் கட்டிக் கொள்ளுவார்கள் ?' என்று வைதிருப்பார்கள். இது ஒரு தடவையோடு நின்றிருக்காது. நாள்தோறும் நடக்கும். அதுவே பெண்களுக்குச் சகிக்க முடியாமல் இருந்திருக்கும். இதன் மூலம் உண்டான வருத்தம் காரணமாகவே அவர்கள் நன்றாகப் பரீட்சைக்குப் படிக்கவும் இயலாமல் இருக்கும். இரண்டாவது வருஷம் பரீட்சையில் தோல்வி என்று தெரியவும் அவர்களுக்குத் தங்கள் பெற்றோரைக் காணவும், அவர்கள் மூலம் படும் அவமானத்தைச் சகிக்கவும் தைரியமில்லாமல் தற்கொலை செய்து கொள்ள தீர்மானித்திருப்பார்கள். அப்பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் மன நிலைமையை உணர்ந்து கொஞ்சம் அநுதாபம் மட்டும்

காட்டியிருந்தால் தங்கள் குழந்தைகளை இந்தக் கோர விபத்திலிருந்து காப்பாற்றியதோடல்லாமல், அவர்களை நன்றாகப் படித்துத் தேர்ச்சி பெறும்படியும் செய்துமிருப்பார்கள்.

பையன் ஓடிப்போனதை இனிக் கவனிப்போம். அநேகமாக அவன் தாயில்லாப் பிள்ளையாக இருப்பான். அவன் தாய் இறந்திருப்பாள். தகப்பனார் மறு விவாகம் செய்துகொண்டிருப்பார். அவனையொட்டி அவனுடைய தகப்பனாருக்கும் சிற்றன்னைக்கும் ஓயாத சண்டையாக இருக்கும். அவர்கள் சண்டையில் படுகிற துன்பமெல்லாம் அவனைப்பற்றியதாக இருக்கும். எனவே, வீட்டைக் கண்டு வெறுப்புத் தட்டி அதிலிருந்து தப்பித்துக்கொண்டுபோனால் போதுமென்று பையன் ஓடிவிடுவான். பையனாக இருக்கும்போது எங்கோ வேற்றூருக்கு ஓடிப்போய்ப் பல ஆண்டுகள் கழித்துக் கொஞ்சம் சம்பாதித்துத் திரும்பிய பலருடைய சரித்திரத்தை நான் விசாரித்திருக்கிறேன். அநேகமாய் அது இவ்விதந்தான் இருக்கிறது.

ஆனால், எல்லா விஷங்களிலும் இது சிற்றன்னையின் கொடுமையாக இல்லை. சில சமயங்களில் பையன் தாய்தந்தையரின் ஒரே மகனாக இருப்பதும் உண்டு. அப்பெற்றோர்களுக்குப் பல பெண்கள் இருக்கலாம். ஆனால், பையன் ஒருவனாக இருப்பான். அவர்கள் ஆசை, எதிர்காலம் அனைத்திற்கும் அவனை நினைத்தே கோட்டை கட்டியிருப்பார்கள். தகப்பனார் தாம் பெரிய காரியங்களைச் சாதிக்க வேண்டுமென்று நினைத்துத் தம் வாழ்க்கையில் அதைச் செய்ய முடியாதவராக இருக்கலாம். தம் வாழ்க்கையில் முடியாததைப் பையன் வாழ்க்கையில் சாதித்து அநுபவிக்க வேண்டுமென்ற ஆசையால் தூண்டப் பெறலாம்; அல்லது தகப்பனார் தம் வாழ்க்கையில் மிகச் சிறப்படைந்தவராக இருந்து, தம் பிள்ளையும் தம்மைப்போலவே சிறப்பாக வளர வேண்டுமென்று நினைக்கலாம்.

எவ்விதம் இருப்பினும், அவர்கள் தங்கள் குழந்தையிடத்தில் மிக அதிகமாக எதிர்பார்த்து அவ்விதம் செய்யும்படி தூண்டுவார்கள். அவன் அளவுக்கும் தன்மைக்கும் அதிகமாக எதிர்பார்ப்பார்கள். எதிர்பார்த்தபடி இராவிட்டால், ஏமாற்றமும் கோபமும் ஆத்திரமும் உண்டாகும். பையனுடைய உண்மை நிலையை அறியாது, அவன் வேண்டும் என்றே சரியாக முயற்சி செய்வதில்லை என்ற குறையைக் கற்பித்துக் கொள்வார்கள். பலாத்காரம் செய்தாவது அவனைத் தங்களுக்குக் கீழ்ப்படிய வைக்க முயல்வார்கள். இந்தக் கருத்து மனத்தில் வந்தவுடனே அடி, வசை கிடைக்கும். விளையாடப் போகக்கூடாது;

சில சமயங்களில் உணவு அருந்தக் கூடாது என்று கூடக் கட்டுப்பாடு செய்வார்கள். இந்த அடிதடியும் பலாத்காரமும் கட்டுப்பாடும் அதிக மாக ஆக, பையன் படிக்கும் சக்தியும் கிரகிக்கும் சக்தியும் குறைந்து கொண்டுவரும். இதன் மூலம் வீட்டில் கொடுமைகள் அதிகமாகும். இந்த நிலைமையில் பையன் ஓடிப்போவதை விட்டு வேறு என்ன வழியிருக்கிறதென்று நண்பர்களே யோசனை செய்து பார்க்கட்டும்!

பல பெற்ருேர்களிடம் இவ்விதம் செய்வது எவ்வளவு தகாத செயல் என்பதைப் பற்றிப் பேசியிருக்கிறேன். அவர்கள் சொல்லும் பதில் பெரும்பாலும் ஒரேமாதிரிதான் இருக்கும். ‘பிள்ளைகள் நன்கு வளரவேண்டுமென்று அவர்கள் பேரிலுள்ள அன்பு காரணமாகத்தானே இவ்விதம் செய்கிருேம்’ என்று சொல்லுவார்கள். ‘உண்மையில், குழந்தையின்பேரில் உள்ள சுயநலமற்ற அன்பின் காரணமாகத்தான் இவ்விதம் செய்கிருர்களா?’ என்பதுதான் கேள்வி.

பிள்ளைகளின் பேரில் பற்றற்ற அன்பு மாத்திரமே அவர்கள் மனத்திலிருந்தால், பிள்ளையின் தன்மையையும் சக்தியையும் அறிந்து அவனுக்கு உற்சாகம் ஊட்டியிருப்பார்கள். ஆனல் இயலாத காரியத்தை, அவன் சக்தியறியாமல் சுமக்கும்படி பலாத்காரம் செய்ய அவர்களைத் தூண்டியது எது? அந்தப் பிள்ளையின் மூலம் தாங்கள் பெருமை அடைய வேண்டு மென்ற சுயநலம். அந்தச் சுய நலம், அவன் எவ்வளவு சுமையைத் தாங்க முடியுமென்ற தெளிவு கூட இல்லாமல், அவர்கள் அறிவை நாசமாக்கிவிட்டது. எனவே, இச் செய்கை பற்றற்ற, எதுவும் எதிர்பாராத, சுயநலத் தொடர்பு இல்லாத, தூய்மையான அன்பால் தூண்டப்பெற்றதென எவரும் நினைக்க வேண்டாம்.

இதனல் பிள்ளைகள் நன்ருகப் படிக்காவிட்டால் அல்லது நல்ல பழக்கங்களைப் பழகாவிட்டால் அவர்களைக் கண்டிக்க வேண்டா மென்று நான் சொல்வதாக நினைக்கக் கூடாது. அதற்கான காரணங் களை அவ்வப்போது ஆராய்ந்து, செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டியது மிக அவசியம். அங்ஙனம் செய்யா விடின் நாம் செய்ய வேண்டிய முக்கியமான கடமைகளில் ஒன்றைச் செய்யத் தவறியவர்கள் ஆவோம். பையன் சரியாகப் படிக்காமலிருந் தால் அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். சில சமயங்களில் உடல் பலவீனம் இதற்குக் காரணமாக இருக்கலாம். கண் பார்வைக் குறைவு, ‘அடிஞயிடு’ போன்ற அவன் படிப்பைப் பாதிக்கும் வியாதிகள் இருந்தால் அவற்றைக் கவனித்து அகற்ற வேண்டும். படிப்பில்

முயற்சி குறைவாக இருந்தால், ஏற்ற சூழ்நிலையை வீட்டில் உண்டாக்கி கொடுக்க வேண்டும். பழக்க வழக்கங்கள் சரியான முறையில் இல்லாமலிருந்தால் அவற்றையும் கவனித்துத் திருத்த வேண்டும். இது பெரும்பாலும், பெற்றோர்கள் தங்கள் வாழ்க்கையைத் திருத்திக் கொள்வதன் மூலமே செய்யக் கூடியதாக இருக்கும். எனவே பெற்றோர்கள் செய்யக் கூடியது, செய்ய வேண்டியதெல்லாம், குழந்தைகள் நன்றாக வளருவதற்கு வேண்டிய சூழ்நிலையும் உற்சாகமும் உண்டாக்குவது தான். அதற்குமேல் குழந்தைகள் தங்கள் தங்கள் இயல்புக்கு ஏற்றவாறு தாங்களே வளருவார்கள்.

'இது என் குழந்தை; என் இஷ்டம் போல் வளர்ப்பேன்' என்று எவராவது உரைத்தால் அது ஆணவமேயொழிய அறிவல்ல. குழந்தைகள் ஆண்டவனின் வடிவங்களாக விளங்குகின்றன. இறைவனின் அறிவுச் சுடர் அவர்கள் உள்ளத்திலும் பிரகாசிக்கிறது. அவர்கள் தெய்வத் தன்மையை வெளிப்படுத்த நாம் தகுந்த சூழ்நிலையை உண்டாக்கி, அதன் மூலம் அவர்களுக்குச் சேவை செய்ய முடியுமானால், அதுவே நாம் அவர்களுக்குச் செய்யக் கூடிய பேருதவியாகும். பெற்றோர்களும், ஆசிரியர்களும் இவ்விதம் குழந்தைகளை வளர்ப்பார்களானால், அதுவே சிறந்த தெய்வ வழிபாடும், தேசியப் பணியுமாகும்.

# வீட்டில் சந்தோஷம்

"உனக்கு அழுகை வந்தால் தனி அறைக்குச் சென்று அழுது விட்டு வா! மற்றவர்கள் மத்தியில் இருக்கும் போது சிரித்த முகமாக இரு!" என்று விவேகானந்த சுவாமிகள் சொன்னார். நோய்களில் பல தொற்று வியாதிகளாக இருக்கின்றன என்பதை நாம் அறிவோம். அதுபோல் மக்கள் மனத்தில் மனச்சோர்வும் ஊக்கமும் சந்தோஷமும் தொற்றிக் கொள்வனவாக இருக்கின்றன. சந்தோஷமாகச் சிரித்து விளையாடிக் கொண்டிருக்கும் இளைஞர் கூட்டத்தில், முகத்தை 'கும்' என்று வைத்துக் கொண்டிருக்கும் ஒருவர் சென்றால், அந்தச் சந்தோஷமும், சிரிப்பும் மறைந்து விடுவதைக் காண்கிறோம். அதுபோலவே, ஏதோ இடி விழுந்ததுபோல் தலைமேல் கையை வைத்துக் கொண்டு, விழித்துக் கொண்டிருக்கும் கூட்டத்தில், ஊக்கமும் சந்தோஷமும் நிறைந்த ஒருவர் வந்தால், அந்தக் கூட்டத்தில் சிரிப்பும், சந்தோஷமும் நிலவ ஆரம்பிப்பதைப் பார்க்கிறோம். எனவே, நம் மன நிலை நம்முடன் இருக்கும் மற்றவர்களை மிகவும் பாதிக்கிறது, உலகில் சந்தோஷம் பரவ வேண்டும் என்று எல்லாரும் நினைக்கிறோம். காசின்றி, பணமின்றி, வேறு எந்தவிதமான செலவும் இன்றி இந்த விஷயத்தில் நாம் ஒவ்வொருவரும் உதவி செய்ய முடியு மென்பதைப் பலர் அறியார்கள். நாம் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் உற்சாகம் நிறைந்தவர்களாயிருந்தால் அதுவே நாம் சமூகத்திற்குச் செய்யும் பெருத்த உபகாரமாகும்.

வயது வந்தவர்கள் சந்தோஷமாக இருக்கவும், தங்கள் காரியங்களை நன்றாகச் செய்யவுமே இத்தகைய சூழ்நிலை அவசியமென்றால், குழந்தைகளின் வளர்ச்சிக்கு இது எவ்வளவு அவசியம் என்பதை நாம்

ஊகித்து உணர்ந்து கொள்ளலாம். குழந்தைகள் நன்ருக வளர்ந்து, அவர்களிடம் புதைந்திருக்கும் சக்திகள் மலர வேண்டுமாளுல், அவர்கள் வீட்டிலும், பள்ளிக்கூடத்திலும் இன்பம் நிறைந்திருக்க வேண்டும். 'சிடுசிடெ'ன்று இருக்கும் பெற்ருேர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சாசுவதமான தீங்கு இழைப்பவர்களாவார்கள். 'சிடுசிடெ'ன்று இருக்கும் ஆசிரியர்கள் சமுதாயத்திற்கே ஓர் ஆபத்து. பள்ளியிலும், வீட்டிலும் சாந்தமும் சந்தோஷமும் நிலவுவதே குழந்தைகளின் வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலையாகும்.

வீடுகளில் சாந்தமும், சந்தோஷமும் நிலவுவதற்குக் குழந்தையின் தாய் தந்தையர்களுக்குள் பரஸ்பர ஒற்றுமை இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஒரு குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை இருப்பது அவர்கள் செல்வத்தையும், படிப்பையும் பொறுத்ததென்று பலர் நினைக்கிருர்கள். இது தவருன கருத்தாகும். நன்கு வாழ்வதற்குப் பணம் ஓர் அளவு உதவியாக இருப்பினும், அது மாத்திரம் இன்பத்தைக் கொடுக்காது. புருஷனுக்கும் மனைவிக்கும் ஒற்றுமையில்லாத செல்வர்கள் குடும்பங்கள் பல இருக்கின்றன; மிகுதியான செல்வமே அதற்குக் காரணமாகவும் இருக்கலாம். பரஸ்பர அன்பும், பரஸ்பர இலட்சியங்களும், சகிப்புத் தன்மையுமே ஒரு குடும்பத்தைப் பிணைத்து அவர்களுக்குள் சந்தோஷத்தை உண்டு பண்ணுகின்றன. பல குடும்பங்களில் அவர்கள் மணமான கொஞ்ச காலத்திற்குப் பிறகு வேற்றுமை உணர்ச்சிகள் உண்டாவதைக் காண்கிரேம். அதற்குக் காரணம் வீட்டுச் சச்சரவுகள் அல்லது வாழ்க்கை நோக்கத்தின் வித்தியாசமாக இருக்கலாம். வைரம் மிகுந்த மனத்தினராக இருந்தால் இச் சண்டைகள் வளர்ந்து கொண்டே போகின்றன. சிற்சில சமயங்களில் இச் சண்டை பெருகி இருவரும் நெடுங்காலம் பிரிந்திருப்பதும் உண்டு. இங்ஙனம் நேர்வதில் பெற்ருேர் இருவரும் அதிகமாகக் கஷ்டப்படுகிருர்கள் என்பது ஒரு புறம் இருக்க, அவர்களை விட அதிகமாகக் கஷ்டப்படுகிறவர்கள் வேறு சிலர் இருக்கின்றனர் என்பதை அவர்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியது அவசியம். இதைக் கேட்டால் அவர்கள் திகைத்து 'இவ்வேற்றுமையால் வேறு யார் இன்னும் அதிகமாகக் கஷ்டப்படலாம்?' என்று கேட்கலாம். அவர்களைவிட இதளுல் பாதிக்கப் படுகிறவர்கள் குழந்தைகளே ஆவார்கள்.

ஒற்றுமையில்லாத குடும்பத்தில் வளர்ந்த குழந்தைகளைக் கண்டு பிடிப்பது எளிது. அவர்கள் மனத்தில் உற்சாகமும், சந்தோஷமும்

இரா. எதைச் செய்யவும் பயப்படுவார்கள். யார் என்ன சொல்லு வார்களோ என்று அஞ்சிக் கொண்டே இருப்பார்கள். இந்தப் பயம் அவர்கள் வாழ்க்கையையே பாதிக்கிறது. மனித வளர்ச்சிக்கு மிக அவசியமாக இருக்கிற நம்பிக்கை அவர்களிடம் அதிகமாக இராது. எனவே, சமூகத்தில் எதைச் செய்யவும் தைரியமின்றி வெற்று மனித ராக வளர்வார்கள். பெற்ருேர்கள் ஒருவருக்கொருவர் குரூரமாய் நடந்து கொள்பவர்களாக இருந்தால், அந்தக் கருத்து அவர்கள் மனத்தில் ஆழ்ந்து பதிந்து விடும்; பிற்காலத்தில் அவர்களும் அப்படி நடப்பார்கள். தாய் கேவலமாக அல்லது தகாத முறையில் நடந்து கொண்டவளாக இருந்தால், பெண் குலத்தைப் பற்றியே மிக இழிவான கருத்து அவர்கள் மனத்தில் பதியும்; வாழ்க்கை முழுவதும் அந்த இழிந்த கருத்தைக் கொண்டவர்களாக இருப்பார்கள். தந்தை குரூர மாக இருந்தால் பெண் குழந்தைகள் மனத்தில் ஆண் குலத்தைப் பற்றியே வெறுப்பு உண்டாகும். இங்ஙனம் வெறுப்பும் குரூரமும் நிறைந்து குழந்தைப் பருவத்திலிருந்து வளர்பவர்கள் எதிர்காலத்தில் எந்த உயர்ந்த காரியங்களைச் செய்யவும் தகுதியற்றவர்களாகப் போய் விடுகிருர்கள். அது மாத்திரமல்ல. தாங்கள் சிறு வயதில் அநுபவித்த கஷ்டங்களை மற்றவர்கள் பேரில் சுமத்திப் பார்ப்பதில் அவர்களுக்குச் சந்தோஷமும் உண்டாகிறது.

இதன் மூலம் அவர்கள் குழந்தைப் பருவமும் படிப்பும் பாதிக்கப் படுகின்றன. இதை நிரூபிக்க உதாரணங்கள் வேண்டியதில்லை. வேண்டுமானுல் இதோ ஒன்று இருக்கிறது: இராமு தன் பெற்ருேர் களுக்கு ஒரே பையன். அவனிடம் பெற்ருேர்களுக்கு நிரம்பப் பிரியம். ஆனுல், அவர்களுக்குள் தப்பபிப்பிராயங்கள் வளர்ந்து வந்தது காரணமாகக் குடும்பத்தின் சமாதானம் குலையத் தொடங்கியது. தாய் தந்தையர் இருவரும் அதை அவனிடம் மறைத்து வைக்க முயன்றும் முடிய வில்லை. இராமுவுக்கு முதலில் சந்தோஷம் குறையத் தொடங் கிற்று. அவனுக்குப் படிப்பில் மனம் செல்லவில்லை. கவலை அதிக மாயிற்று. கொஞ்ச காலம் கழித்துக் காய்ச்சலாகப் படுக்கையில் படுத்தான். வைத்தியர்கள் பலரைக் கொண்டு வந்து சிகிச்சை செய்தார் கள். சிகிச்சையில் பலன் ஏதும் ஏற்பட வில்லை. மனோவைத்திய நிபுணர்களைக் கொண்டுவந்து காண்பித்தார்கள். அவர் பெற்ருேர்கள் இருவருக்குமிடையே இருக்கும் ஒற்றுமைக் குறைவே பையன் நோய்க் குக் காரணமென்று எடுத்துக் காட்டினுர். பெற்ருேர் இருவருக்கும் பையனிடம் மிகுந்த அன்பு. எனவே, அவனுக்காகவாகிலும் சகிப்புடன்

வாழத் தீர்மானித்தார்கள். கொஞ்ச காலத்தில் இராமு குணமடைந்து பள்ளிக்குச் சென்றான்.

இது கதையல்ல. உண்மையில் நடந்தது. இம் மாதிரி தவிக்கக் கூடிய சம்பவங்கள் நமது நாட்டில் ஆயிரக்கணக்காக நடக்கின்றன. குழந்தையின் நோய்க்குக் காரணம் தேடி, மருந்துக்கும் வைத்தியர் களுக்கும் ஆயிரக்கணக்காகச் செலவு செய்பவர்கள் பலர். பெற்றோர் கள் நன்றாக வாழ்வதன் மூலம் குழந்தைகளின் நோய்கள் பல வற்றையுங்கூடத் தவிர்க்கலாம் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

மேற்குறித்த உதாரணத்தில் குழந்தையிடம் தாய் தந்தையர் இருவருக்கும் நிறைந்த அன்பு இருந்தது. எனினும், அவர்கள் சச்சரவு குழந்தையை அவ்வளவு தூரம் பாதித்தது. ஆனால், பல குடும்பங்களில் பெற்றோர்களுக்குள் சண்டை ஏற்பட்டால் குழந்தைகள் பெற்றோர் களில் ஒருவரைச் சார்ந்தவர்களாகப் போய் விடுகிறார்கள். தாய்க்குச் சிலரிடம் பிரியம்; தந்தைக்குச் சிலரிடம் பிரியமாகப் போய்விடுகிறது. அக் குழந்தைகள் இன்னும் எவ்வளவு அதிகமாகக் கஷ்டப்படுவார்கள் என்பதை நண்பர்கள் ஊகித்துத் தெரிந்து கொள்ளலாம்.

நம் குழந்தைகள் நன்றாக வளர்வதற்கு இன்னும் மிக முக்கியமான அம்சம் ஒன்று உண்டு. குழந்தை முதலில் தாயின் ஓர் அம்சமாகத் தோன்றும். அது பிறந்தது முதல் தாயின் கரத்தில் வளருகிறது. நெடுங் காலம் தாயையே நம்பி வாழ்கிறது. அதற்குப் பிறகு தந்தையின் பாது காப்பை நம்பி வாழ்கிறது. இந்த நம்பிக்கையை ஒட்டியே அதன் பலன் உண்டாகிறது. இந்த நம்பிக்கை அற்றுப்போனால் அதன் அடிப்படை யே அற்றுப் போகிறது. அதன் வளர்ச்சிக்குத் தாய் தந்தையர்களிடம் ஆழ்ந்த நம்பிக்கை மிக அவசியமாக இருக்கிறது. பெற்றோர்கள் மத்தி யில் பிணக்குகள் ஏற்படுவதைப் பார்க்கும்போது, குழந்தையின் சமாதா னம் குலைகிறது. தாய், தந்தையையோ அல்லது தந்தை, தாயையோ கேவலமாகப் பேசுகின்றனர். அது குழந்தைக்குப் பெற்றோரிடத்தில் இருக்கும் நம்பிக்கையைத்தான் குலைக்கும் என்று அவர்கள் நினைக்க லாம். இது மிகவும் தவறு. இத்தகைய வார்த்தைகள் தாய்தந்தையரிடம் குழந்தைக்கு இருக்கும் நம்பிக்கையைக் குலைப்பதோடு தன்னிடத்தி லிருக்கும் தன்னம்பிக்கையையும் குறைக்கிறது. எனவே, குழந்தைகளை நன்றாக வளர்க்கும் பெற்றோர்கள் அனைவரும் தங்களுக்குள் பரஸ்பர அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

குடும்பங்களில் ஒற்றுமைக் குறைவுக்குக் காரணம் பணம் அல்லது கல்வியில்லாமை அல்ல. தரித்திரம் தாண்டவமாடும் பலகுடும்பங்களில் அன்பும் ஒற்றுமையும் நிறைந்திருப்பதைக் காணலாம். அன்பும் ஒற்றுமையும் இல்லாக் குடும்பங்களில் பணத்தால் பெறக்கூடிய வசதிகள் இருந்தும் அவை நரகங்களாக இருக்கின்றன. அங்கு வளரும் குழந்தைகள் நரகவேதனைக்கு ஆளாகிறார்கள். பணத்தின் மூலம் குழந்தைகளுக்குப் பல வசதிகள் செய்து கொடுக்கலாம். ஆனால், அவற்றை விட அவசியமானது பெற்றோர்களுக்குள் பரஸ்பர அன்பும் சகிப்புத் தன்மையுமே ஆகும். இத்தகைய குடும்பங்களில் வளரும் குழந்தைகளே பிற்காலத்தில் சமூகத்திற்குப் பெரும்பயனை அளிக்கிறவர்களாக வளருகிறார்கள்.

# பலாத்காரம் வேண்டாம்

கந்தசாமி எனக்கு மிக நெருங்கிய நண்பர்களில் ஒருவர்; மிகவும் நல்லவர்; தேசத்திற்காக உழைக்க வேண்டும் என்ற உயர்ந்த லட்சியம் உடையவர்; பல தடவைகள் நாங்கள் சிறைக்கு ஒன்ருகச் சென்று, ஒன்ருக இருந்திருக்கிரேம். தேசபக்தியுடன் தெய்வ பக்தியும் உடையவர். தமிழ் நாட்டிலே மிக ஒழுக்கம் வாய்ந்த பிரமுகர்களில் ஒருவர். அவருக்கு நம் மத ஆசாரங்களில் மிகுந்த பக்தி உண்டெனினும் நெற்றிக்கு ஏதும் அணிந்து கொள்ள மாட்டார். பல நாட்கள் நாங்கள் ஒன்ருகச் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிரேம். குளித்ததும் நெற்றிக்கு திருநீறு அணிந்து கொள்ளும் பழக்கம் எனக்கு உண்டு. அவரை 'தாங்கள் நெற்றிக்கு வைத்துக் கொள்ளும் பழக்கம் இல்லையா?' என்று கேட்டேன். அப்பொழுது அவர் தம் அநுபவத்தைச் சொன்ஞர்.

அவருடைய தந்தையார் கோவையில் பிரபல வக்கீலாக இருந் தார்; ஒழுக்கமும் சீலமும் உடையவர். நம் சமய ஆசாரங்களில் அவருக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. குளித்ததும் நெற்றிக்கு விபூதி அணிந்து, பிரார்த்தனை செய்து முடிந்த பிற்பாடுதான் எந்தக் காரி யத்தையும் தொடங்குவார். தம்முடைய பிள்ளைகளும் அவ்விதமே வளர வேண்டுமென்ற ஆசை அவருக்கு உண்டு. அப்பொழுது கந்தசாமி பள்ளியில் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு விளையாட்டுக்களில் நிறைந்த ஆர்வம் உண்டு. விளையாடி விட்டுச் சுமார் இரவு ஏழரை மணிக்குத் திரும்புவான். உணவு அருந்தும்போது தந்தையுடன்

போய் இலை முன் உட்காருவான். தகப்பனார் இவனைப் பார்த்தவுடனே அவன் நெற்றியில் திருநீறு இல்லாததைப் பார்த்துக் கோபப்படுவார். 'விபூதி அணியாத உனக்கு என்னடா சாப்பாடு வேண்டும்? போய் விபூதி அணிந்து, பிரார்த்தனை செய்துவந்த பிற்பாடுதான் உனக்கு உணவு போடப்படும்' என்று மிகக் கடுமையாகச் சொல்லித் திட்டு வார். அவ்வார்த்தைகள் அவன் மனத்தில் வெறுப்பை உண்டாக்கும். தகப்பனாருக்குப் பயந்து வேண்டா வெறுப்புடன் விபூதி அணிந்து வந்து சாப்பிடுவான். நாளடைவில் இந்த வெறுப்பு விபூதியின்மேல் பாய்ந்தது. அவனுக்குச் சுயேச்சை வந்தபோதும் அந்த விபூதியின் மேல் இருந்த வெறுப்புத் தணியவில்லை. இந்த அனுபவத்தைச் சொல்லித் தம் தகப்பனார் இவ்வளவு கண்டிப்பாக இருந்ததன் காரணத் தினால் தமக்குத் திருநீற்றின் பேரில் மிகுந்த வெறுப்பு உண்டாயிற்று என்றும் அது இன்றும் (அப்பொழுது அவருக்குச் சுமார் 40 வயது இருக்கும்) ஓரளவு இருந்து வருகிறது என்றும் பதில் சொன்னார்.

அவருடைய தகப்பனார் மிக நல்லவர். 'அதிகாலையில் எழுந்து, குளித்து, நெற்றிக்கு விபூதி அணிந்து இறைவனை வழிபட்டு, அதற்கு மேல் இதர காரியங்களைச் செய்ய வேண்டும்' என்பது அவருடைய கொள்கை. அது மிகவும் நல்ல கொள்கைதான். தம் குழந்தைகளும் அவ்விதம் வளரவேண்டும் என்று அவர் நினைத்தார். அதுவும் மிகப் போற்றக்கூடிய எண்ணம்தான். ஆனால், இந்தப் பழக்கத்தைத் தம் பையனிடத்தில் உண்டாக்க அவர் மேற்கொண்ட முறைதான் தவறாக இருந்தது. தம் பிள்ளைகளிடம் நல்ல பழக்கங்களை உண்டாக்கத் தாம் மிகவும் கண்டிப்பாக இருப்பதாக அவர் நினைத்த போதிலும், அந்தக் கண்டிப்பு எதிர்மாறாக வேலை செய்தது. தம் பையனுக்கு விபூதியணியும் பழக்கத்தை உண்டாக்குவதற்குப் பதிலாக, அந்தப் பழக்கத்தின்மேல் வெறுப்பையே உண்டாக்கிவிட்டது. இங்ஙனந்தான் நம் தந்தையர் கள் பலர் செய்கிறார்கள். நம் ஆசிரியர்கள் சிலரும் இவ்விதம் செய்கிறார்கள். வெறும் கண்டிப்பும், நல்ல எண்ணங்களும் மாத்திரம் நல்ல பயனை அளிப்பதில்லை. அவைகளை நல்ல முறையில் கையாளு வதும் மிக முக்கியமானது.

எனக்கு நெருங்கிய உறவினர் ஒருவர் உண்டு. அவர் நல்ல குடும்பத்தில் பிறந்தவர். அந்த ஜில்லாவிலேயே அவர்கள் குடும்பம் முதன்மையானது. அந்த ஜில்லாவுக்குப் பல தலைவர்களை அந்தக்

குடும்பம் அளித்திருக்கிறது. அந்த ஊரில் அவருடைய பெற்றோர்கள் மிகவும் செல்வாக்கு வாய்ந்தவர்கள். இளம் வயதில் அவருக்கு வீட்டில் பாடம் சொல்லித் தருவதற்கு ஒரு ஆசிரியரை நியமித்திருந்தார்கள். பையன் சில சமயங்களில் சரியாகப் படிக்க மாட்டான்; கணக்குத் தப்பாகப் போடுவான். ஆசிரியருக்குக் கோபம் வந்து விடும். 'ஏண்டா தப்பாகப் போட்டாய்?' என்று கேட்டு அடிப்பார். பையனுக்கு மனத்தில் பயமும் குழப்பமும் உண்டாகிக் கணக்குகளெல்லாம் தப்பாகவே போட ஆரம்பிப்பான். எழுதுவதும் தவருகவே எழுதுவான். ஆசிரியருக்கு இன்னும் கோபம் அதிகமாகும். கரும் பலகையால் ஓங்கி அவன் முட்டிகளில் அடிப்பார். முதலில் உண்டான பயம் இக் கொடுமையால் குரோதமாகவும் வெறுப்பாகவும் முடிந்தது. கோபத்தால் அவரை எதிர்த்துக் கையை நீட்டி அதற்குத் தண்டனையும் வாங்கிக் கொள்ளுவான். பையன் மிகவும் நல்லவன்; நல்ல புத்திசாலியும்கூட. ஆனால், அவன் பள்ளிக்கூடத்தில் தேறவேயில்லை. அவன் தேருததற்குக் காரணம் அவனிடத்தில் அறிவும் புத்தி கூர்மையும் இல்லை என்பது அல்ல. இரண்டாவது பாரத்துக்குமேல் அவன் செல்லவேயில்லை. அதற்குக் காரணம் அவனுடைய ஆசிரியர்தான் என்பது என்னுடைய அபிப்பிராயம். அவருடைய கொடுமையே அவனுக்குப் படிப்பின்மேல் ஒரு வெறுப்பை உண்டாக்கி விட்டது. 'ஆசிரியர், அடிப்பதற்குமேல் என்ன செய்வார்?' என்ற ஒரு எதிர்ப்பை உண்டாக்கிற்று. எனவே, படிப்பின் மேல் பிரியத்திற்குப் பதிலாக துவேஷம் உண்டாயிற்று. அப்படியிருக்கும் பையன் படிக்க முடியுமா? இந்தத் துவேஷத்தை உண்டாக்கக் காரணமாய் இருந்தவர்கள் யார்? யார் அவனைப் படிப்பதற்கு உதவி செய்ய வேண்டு மென்று நினைத்தார்களோ அவர்களேதான் அவன் படிப்பைக் கெடுப்பதற்குக் காரணமாய் இருந்தார்கள்! இவன் நன்ருகப் படிக்க வேண்டு மென்ற எண்ணம் அவர்கள் மனத்திலே இருந்தது. இந்த எண்ணத்தைக் கொண்டுசெலுத்த, அவர்கள் மேற்கொண்ட முறைதான் மிகத்தவருக இருந்தது. அந்த முறை அவர்கள் எண்ணத்திற்கு மாருன பயனை உண்டாக்கிற்று.

நம்முடைய வாழ்க்கையிலேயே இது மாதிரி உதாரணங்கள் பலவற்றைக் காணலாம். வெறும் எண்ணம் மாத்திரம் இருந்தால் போதாது. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு "The hell is paved with good intentions" என்று. அதற்குப் பொருள் நரகத்திற்குச் செல்பவர்கள் கூட நல்ல எண்ணங்களால் தூண்டப்பட்டிருக்கிருர்கள் என்பது. அதாவது, உலகத்தில் பல இடங்களில் பெண்டு பிள்ளைகளைக்

காப்பாற்றுவதற்காக, பல தவருன காரியங்கள் கூடச்செய்யப் படலாம். உதாரணமாக ஒரு திருடன் இருக்கிருன். அவன் தன் பெண்டு பிள்ளை களைக் காப்பாற்றவே திருடலாம். அவர்களைக் காப்பாற்ற வேண்டு மென்ற நல்ல எண்ணம் மாத்திரம் அவனுக்கு இருந்தால் போதாது. அந்த நல்ல எண்ணத்தை அவன் சரியான முறையிலே நடத்திக் காட்ட வேண்டும் அல்லவா ? அதேபோல்தான் வாழ்க்கையில் நம் கருத்துக் கள் நல்லனவாக இருந்தால் மாத்திரம் போதா. அவைகளைக் கையாளும் முறைகளும் நல்லனவாக இருக்க வேண்டும். நாம் விரும் பும் நற் பயன்களைத் தோற்கடிக்கிற மாதிரி இல்லாமல், அவை வாழ்க் கையில் வெற்றிபெறுகிற முறையில் இருக்க வேண்டும். வாழ்க்கை யில் நாம் நன்ருக அறிந்து கொள்ள வேண்டிய கருத்துக்களில் இது ஒன்று.

வெறும் பலாத்காரம், கோபம், ஆத்திரம், கடினமான நடவடிக் கைகள் இவைகள் விரும்பிய பயனை அளிப்பதில்லை. இவைகள் நம் பிள்ளைகள் பேரில் உள்ள அன்பாலும், அக்கரையாலும், அவர்கள் நற் பழக்கங்களுடன் வளர வேண்டுமென்ற நல்ல எண்ணத்தாலும் உண்டானுலும் அவை நன்மை பயவா. குழந்தைகளை வளர்ப்பதில் நாம் முக்கியமாக தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களில் இதுவும் ஒன்ருகும். நம் குழந்தைகளை வீரர்களாக்குவதும், பேடிகளாக்குவதும் நம்கையில்தான் இருக்கின்றன சுதந்திரம் கொடுத்துத் தைரியமாக அவர்களை வளர்த்தால், அவர்கள் வீரர்களாவார்கள். ஆனுல், மிரட்டி, பயப்படுத்தி, அந்தப் பயத்தால் அவர்களைக் கீழ்ப்படியும்படி செய்து வளர்த்தால், பயம் மறைந்த பின்னர் அதற்கு நேர்மாருக அவர்கள் செய்வார்கள் ஆதலால் நம் குழந்தைகளைச் சரிவர வளர்ப்பதற்கு அவர்கள் வாழ்க்கையை அனுசரித்து அவர்களுக்குச் சுதந்திரம் கொடுத்து, அன்புடன் நடத்தினுல், நாம் விரும்பும் பயனைப் பெறலாம்.

இது மிகக் கடினமான காரியம். ஒரு பையன் ஒன்றை விரும்பு கிருன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்காக அவன் தன் தாய் தந்தையரிடம் வந்து கேட்பான். தாய் தந்தையர்களால் அதைக் கொடுக்க முடியாது என்பது அவனுக்குத் தெரியாது. ஆனுலும், அத னையே அவன் விரும்புவான். தங்கள் நிலைமையைக் குழந்தைகளுக்கு நன்ருக எடுத்து உரைப்பதற்கு மிகுந்த பொறுமை வேண்டியிருக்கும். அவன் விரும்பும்போது பொறுமையுடன் எடுத்துச்சொல்வது மிகக் கடி னம். ஆனுல், அதற்குப் பதிலாகக் கோபப்பட்டு 'கிடையாது, போடா!

என்று கடுஞ்சொல் சொல்வது அல்லது, 'அட சனியனே நச்சாதே! நச்சினுல் அடிப்பேன்' என்று சொல்வது அல்லது கோபப்பட்டு அடித்து மிரட்டுவது மிகவும் எளிது. இந்தக் கடுஞ் சொல்லும், அடியும் உடனே பயன் அளிப்பதாகத் தோன்றும். இவைகளைக் கண்டு பையன் பயந்து சும்மா இருந்து விடலாம். ஆனால், நாளடைவில் இம் மிரட்டுதலும் பலாத்காரமும் கெடுதியையே விளைவிக்கின்றன, அவர்களை அச் சமயங்களில் பொறுமையுடன் நடத்துவது மிகக் கடினமான காரியம். அதற்கு மிகுந்த பொறுமையும், சகிப்புத் தன்மையும் அவசியம். ஆனால், இவைகளே மிகுந்த பயனை அளிக்கக் கூடியவையாகும்.

# வணங்கி வெல்க

அன்னை சாரதாமணி தேவியை அறியாதவர்கள் இருக்க மாட்டார்கள். அனைவர்பாலும் ஆழ்ந்த அன்பு கொண்டு, ஆத்மிக உணர்வும் அறிவும் கொடுத்த காரணத்தால் அவர் அனைவருடைய அன்னையாகக் கருதப் பட்டு பூஜிக்கப்பட்டு வருகிறார். தம் சிஷ்யர்கள் மத்தியில் அவர் உட்கார்ந்திருந்தபோது ஒரு கேள்வி பிறந்தது. "தாயே! தாங்கள் எங்களை எளியவர்கள், நோயாளிகள் முதலியவர்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்களே, அச்சேவையின் தன்மை எத்தகையதாக இருக்க வேண்டும்?" என்று ஒரு சிஷ்யை கேட்டாள். அதற்கு அவர்கள் கொடுத்த விடை அற்புதமானதாக இருந்தது. "சாக்கடையில் நீர் இருக்கிறது. அது எவ்வளவு அசுத்தமான நீர்! அந்த நீரையும் சுத்தம் செய்து மேம்பாடு செய்யச் சூரியன் விரும்பு கிறான். சூரியன் எவ்வளவோ கோடி மைலுக்கப்பால் உயர்ந்து சிறப் பாக விளங்குகிறான். ஆனால் இந்த அசுத்த நீரை அவன் சுத்தம் செய்து உயர்ந்ததாக ஆக்க விரும்பினால் அவன் என்ன செய்ய வேண்டி யிருக்கிறது? அவன் தாழ்ந்து வருகிறான். தன் கிரணங்களாகிய கைகளைக் கொண்டு அந்த நீர் இருக்கும் இடத்திற்கு இறங்கி வந்து, அதை ஆவியாக மாற்றி, வான லோகத்திற்கே தன்னுடன் அழைத்துச் செல்லுகிறான்; அதற்குப் பிறகு, அது மழையாக வரும்போது அதை அமிர்தமாக மக்கள் கொள்கிறார்கள். அதுபோல், நீங்களும் தாழ்த்தப் பட்ட மக்களை உயர்த்த விரும்பினால், நீங்கள் இருக்கிற இடத்திலேயே அல்லது நிலையிலேயே இருந்து கொண்டு அவர்களை உயர்த்த முடியாது. வெறும் பிரசங்கங்கள் மாத்திரம் இந்த விஷயத்தில் உதவி செய்யா. அவர்கள் இருக்கும் நிலைக்கு நாம் அன்புடன் பணிந்து

செல்ல வேண்டும். அவர்கள் மனத்தையும் நிலையையும் அறிந்து, அவற்றிற்கேற்றபடி அவர்களுடன் பழகி, அவர்களும் அறியாமல் அவர்களை உயர்நிலைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்'' என்று உரைத்தார்கள்.

இந்த மிக உயர்ந்த கருத்து குழந்தைகளை வளர்ப்பதிலும் பொருந்தும். பல பெற்றோர்களுக்குக் குழந்தைகளின் நிலையும் தன்மையும் புரிவதில்லை. பெரியவர்களுடன் பழகுகிறமாதிரியே குழந்தைகளுடனும் அவர்கள் பழகுவார்கள். ஒரு விஷயத்தைக் குழந்தையிடம் சொன்னவுடன் அது புரிந்து கொள்ளா விட்டால் அதனிடம் சலித்துக் கொள்ளுவார்கள். இத்தகைய பெற்றோர்கள் குழந்தைகளை வளர்க்க தகுதியற்றவர்கள். குழந்தைகளும் அத்தகையவர்களுடன் நன்ருகப் பழக மாட்டார்கள். எனவே, குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர்களும், ஆசிரியர்களும் குழந்தைகளின் மிருதுவான உள்ளத்தின் தன்மையை அறிந்து, அதற்கேற்றவாறு நடந்து கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

சில பெற்ருேர்களுக்குத் தங்கள் குழந்தைகள் வெகு வேகமாகக் கற்றுச் சிறப்புற வேண்டு மென்ற ஆசை யிருக்கும். இன்னும் சில பெற்ருேர்களுக்குத் தங்களுடைய பூர்த்தி பெருத ஆசைகளைக் குழந்தைகளின் மூலமாவது பூர்த்தி செய்து கொள்ள வேண்டு மென்ற எண்ணம் தோன்றுவதுண்டு. அதன் காரணமாக, அல்லும் பகலும் குழந்தையைப் படிக்கும்படி தூண்டுவார்கள். காலையிலும், மாலையிலும், எப்பொழுதும் ஏதாவது சொல்லிக் கொண்டே யிருப்பார்கள். குழந்தையின் மனத்தில் கிரகிக்கும் சக்திக்கு ஒரு எல்லையுண்டென்பதையும், அதற்கு மேல் போனுல் அதற்குச் சலிப்பு உண்டாகுமென்பதையும் அவர்கள் உணர்வதில்லை. அவர்கள் அதிகமாகத் திணிப்பதின் காரணமாகப் பல சமயங்களில் குழந்தைகளுக்கு அவ்விஷயங்களில் வெறுப்பு உண்டாகிறது. அதன் காரணமாகப் படிக்க மறுக்கின்றனர். படிக்க மறுக்கும்போது குழந்தைக்கும், பெற்ருேருக்கும் மன வேற்றுமை ஏற்படுகிறது. பையன் வேண்டுமென்றே தமக்கு விரோதமாகப் பிடிவாதம் செய்வதாகப் பெற்ருேர்கள் நினைக்கிருர்கள். அதற்குமேல் வசை! அது பயனற்றுப் போனுல் அடிக்க ஆரம்பிக்கிருர்கள். பையனுக்குப் பெற்ருேரின் மாறுதல் புரிவதில்லை. இவ் வசையும் அடியும் காரணமாக அவன் மனத்தில் மருட்சியும் பயமும் உண்டாகின்றனவே யொழிய, அந்த

விஷயத்தைப் படித்துக் கொள்ள தேவையான ஆவல் உண்டாவதில்லே. கொஞ்ச காலத்திற்குப் பிறகு, இவ் வசையும் அடியும் பயனற்றுப் போய்விடுகின்றன. எனவே, பையனுக்கு 'மந்தி'யென்றும், 'மடையனெ'ன்றும், 'உதவாக்கட்டை' யென்றும் பட்டம் கட்டி விடுகிருர்கள். அடிக்கடி மந்தியென்று கூறப்பட்ட குழந்தைகள் மனத்தில் தாங்கள் மந்திகள்தான் என்ற எண்ணம் உண்டாகி, தன்னம்பிக்கையிழந்து, உண்மையில் மந்தியாக ஏதுவாகிறது. இங்ஙனம், மிகபுத்தி நுட்பமான பிள்ளேகள் கூடப் பெற்ருேர்களால் மந்தியாக்கப்பட்டு, வாழ்க்கை வீணுக்கப்பட்டவர்கள் இந்த நாட்டில் ஆயிரக்கணக்கில் இருப்பார்கள்.

பிள்ளேகளே அடக்கி ஆளலாமென்ற எண்ணம் பெற்ருேர்கள் மனத்திலிருந்து அகல வேண்டும். ஒரு பெரும் வெள்ளத்தை ஒருவன் அடக்கியாள நினேத்தால் அது முடியுமா? முடியும். ஆனுல், அதன் இயல்பை அறிந்து, அதன் தன்மை தெரிந்து, அதற்கேற்றவாறு செய்தால் காவிரிக்கும் அணே போட்டு விடலாம். ஆனுல் அதன் இயல்பு தெரியாமல் அணே போட விரும்புகிறவர்களின் கதி என்னவாகும்? அவர்கள் அணே பயனற்றுப் போவதுடன், அவர்கள் முயற்சியும் வீணுகும். அது போல, குழந்தையின் உள்ளத்தில் எல்லேயற்ற சக்தி புதைந்து கிடக்கிறது. குழந்தைகளின் இயல்பையும் தன்மையையும் அறிந்து அவற்றை அனுசரித்து நடத்தினுல், அவர்களே நன்ருகப் பயன்படுத்த முடியும். அவர்கள் இயல்பை அறியாமல், அவர்களே அடக்கி மாற்றியமைக்க மாத்திரம் முயற்சி செய்தால், நம் முயற்சியனேத்தும் வீணுகப் போய்விடும். சில பெற்ருேர்கள் குழந்தைகளின் தன்மை தெரியாமல் பிடிவாதம் செய்வார்கள். அதன் பிறகு குழந்தைகளேக் குறை கூறுவார்கள். குழந்தைகள் சரியானபடி வளராமைக்கும், பழகாமைக்கும் காரணம் தாங்கள்தாம் என்பதை அவர்கள் உணருவதில்லே.

குழந்தைகளின் இயல்பை அறிந்து அவர்களுக்கு வணங்கிக் கொடுத்தல் மிக அவசியம். குழந்தைகள் சில சமயங்களில் தங்கள் விருப்பங்களேத் தெரிவிக்கின்றனர். கால்பந்துப் போட்டிப் பந்தயம் நடக்கிறது; ஒரு பிரபல தலேவர் ஊருக்கு வந்து பிரசங்கம் செய்யப் போகிருர்; பக்கத்து ஊரில் ஒரு விழா நடக்கிறது; ஒரு கண்காட்சி நடக்கப்போகிறது; இம்மாதிரி நிகழ்ச்சிகளேப் போய்ப் பார்க்கக்

குழந்தைகள் விரும்புவார்கள். விரும்புவது மாத்திரமல்ல, மிக ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். சில பெற்ருேர்கள், 'பரீட்சை பக்கத்தில் வருகிறது பாடங்களைச் சரியாகப் படிக்கவில்லை ; தனியாகப் போய்வர முடியாது; வீட்டில் வேலை இருக்கிறது' என்பன போன்ற காரணங்களைச்சொல்லி நிறுத்த முயற்சி செய்கிருர்கள். குழந்தை மீண்டும் தன் விருப்பத்தை வற்புறுத்திஞல் கோபித்துக் கொள்வார்கள்.

இங்ஙனம் செய்வது, குழந்தையின் உண்மை வளர்ச்சியை எவ்வளவு தூரம் பாதிக்கிறதென்பதை அவர்கள் உணருவதில்லை. இம் மாதிரி விஷயங்களில் தங்களுக்கு வேறு விதமான கருத்து தீவிரமாக இருந்தபோதிலும், குழந்தைகளின் விருப்பத்திற்கு விட்டுக் கொடுப்பது நல்லது. இங்ஙனம் செய்வதன் மூலம் குழந்தையின் உண்மையான நன்மதிப்பையும், அன்பையும் அவர்கள் பெறுவார்கள். தன் பெற்ருேர்களுக்கு வேறு கருத்து இருந்தபோதிலும் தன் விருப்பத்திற்காக விட்டுக் கொடுத்தார்களென்ற எண்ணமே அவன் மனத்தில் அவர்கள்பால் மரியாதையை யுண்டாக்கி, அவர்கள் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்கும்படி செய்யும்.

குழந்தை விரும்பும் செய்கை தகாதது அல்லது இயலாதது என்று தோன்றிஞல் அதை அது புரிந்துகொள்ளும் வகையில் எடுத்துரைத்தல் அவசியம். இங்ஙனம் செய்வதற்கு மிகுந்த பொறுமை வேண்டும். பெரும்பாலான பெற்ருேர்கள், 'இவையெல்லாம் குழந்தைக்குப் புரியாது, இக்காரணங்களை எல்லாம் குழந்தைக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா?' என்று நினைக்கிருர்கள். இது தவறு. இப்படி எடுத்துரைப்பதன் மூலம் குழந்தைகளை நிரந்தரமாக நன்ருக வளர்த்தவர்களாவோம்.

குழந்தையின் இயல்புகளுக்கும், அதன் நல்லுணர்ச்சிகளுக்கும் வணங்கிக் கொடுத்தல் அவர்களை நன்ருக வளர்ப்பதற்கு இன்றியமையாத தன்மையாகும் அதன் மூலம்தான் அவர்களை உயர்ந்தவர்களாக்கி நாம் வெற்றிபெற முடியும். இதுவே உயர்ந்த தன்மை வாய்ந்த பெற்ருேர்கள் அல்லது ஆசிரியர்களுடைய தன்மையாகும்.

# நிதானம்

ஒரு நண்பர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அங்கு வீட்டு வாசலில் கொட்டை எழுத்துக்களில் ''தானத்திலும் பெரிது நிதானம்'' என்று எழுதப் பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் எனக்குக் கொஞ்சம் வியப்பாக இருந்தது. நிதானமாக இருக்க வேண்டுமென்பது யாரும் ஒப்புக் கொள்ளக் கூடியது. ஆனால் அது தானம் செய்து, மற்றவர்களுக்கு உதவுவதை விட எப்படிப் பெரியது என்பது சந்தேகமாக இருந்தது. ஆனால், வாழ்க்கையை நன்கு கவனித்துப் பார்த்தால் இதன் உண்மை தெளிவாகப் புலனாகிறது. ஒருவர் உதவிக்கு மற்றொருவரை நாடுகிறார். இவரைக் கண்டதும் அவர் 'சிடு சிடு'வென்று வரவேற்கிறார். 'நீ முட்டாள் பயல். பணத்தைத் தொலைத்து விட்டு இப்படி வருவாயென்று எனக்கு முந்தியே தெரியும்' என்று பலவாறாகச் சொல்லிக் கடைசியில் பணமும் கொடுக்கிறார். வந்தவர் வேறு ஒருவரிடமும் செல்லுகிறார். அவர் சிரித்த முகத்துடன் வரவேற்று 'என்ன விஷயம் சொல்லுங்கள் என்னால் இயன்றது ஏதாவது இருந்தால் நிச்சயம் செய்கிறேன்' என்கிறார். சென்றவர் மனத்தில் உடனே ஒரு சந்தோஷம் ஏற்படுகிறது. விஷயத்தை எடுத்துரைக்கிறார். அவர் சொல்லுவனயாவும் கேட்டுக் கடைசியில், 'தாங்கள் சொல்லும் விஷயம் மிகவும் வருத்தமாக இருக்கிறது. ஆனால், என் நிலையில் தங்களுக்கு ஏதும் செய்ய முடியாமலிருப்பது பற்றி மன்னிப்பீர்கள்' என்று வினயத்துடன் சொல்லுகிறார். முந்தியவர் பணம் கொடுத்து உதவினார். ஆனால் பிந்தியவர் ஒன்றும் கொடுக்கவில்லை; எனினும் யார் பேரில் சென்றவருக்கு அதிகத் திருப்தியும் சந்தோஷமும் இருக்குமென்று யோசனை செய்து பாருங்கள்! முதல் நண்பர் பணம் கொடுத்தாலும் முதலில்

அவமானப்படுத்தியதால் கேட்டவர் மனது மிகவும் புண்பட்டிருக்கும்; பணம் கொடுத்து அப்புண்ணை ஆற்ற முடியாது. நாவினுல் சுட்ட வடு ஆறுதல்லவா ? அவர் மனத்தில் அன்பு இல்லை என்பதல்ல. பணம் கொடுத்தார்; எனினும், அந் நிதானமில்லாத வார்த்தைகளின் காரண மாக அதன் பயன் அற்றுப் போய் விட்டது. இரண்டாம் நண்பர் உதவ முடியாமல் போனுலும் தன் நிதானமான நய வார்த்தைகளாலும் அனுதாபத்தாலும் சென்றவரின் நன் மதிப்பைப் பெற்றிருப்பார். இந்த அனுபவத்தை அனுசரித்துத்தான் வள்ளுவப் பெருந்தகையாரும்

'' அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலனுகப் பெறின் '' (திருக்குறள் 92)

என்று சொன்னுர் போலும்!

குழந்தைகளை வளர்ப்பதற்கும் நிதானத்திற்கும் என்ன சம்பந்த மிருக்கிறதெனச் சிலர் நினைக்கலாம். நிரம்ப சம்பந்தம் இருக்கிற தென்பதை நம் குடும்பங்களைக் கவனித்தவர்கள் உணருவார்கள். நமது தாய் தந்தையர்களுக்குக் குழந்தைகளிடம் நிறைய அன்பு உண்டு. அதில் சிறிதும் சந்தேகமில்லை. தங்கள் குழந்தைகளுக் காகத் தாங்கள் எவ்வளவு கஷ்டமும் படத்தயாராக இருப்பார்கள். குறிப்பாக, நமது தாய்மார்கள் குழந்தையின் சந்தோஷத்திற்காகவும் சுகத்திற்காகவும், தங்கள் சுகத்தையும் சந்தோஷத்தையும் குறைத்துக் கொள்ளத் தயாராக விருக்கிருர்கள் ஆனுல், பல குடும்பங்களில் இந்த அன்பின் தோற்றத்தில் நிதானமிருப்பதில்லை. பிரியம் வரும்போது தங்கள் குழந்தைகளை, ''என் கண்ணே, என் ராஜா, என் தங்கமே'' என்று கட்டி அணைத்து முத்தமிட்டுத் திணர அடித்துவிடுவார்கள். சில சமயங்களில் கோபம் வரும்போது, 'மூதேவி, பிசாசு' என்று பலவாறுக வைது, தலைகால் தெரியாமல் அடித்துவிடுவார்கள். தாய்மார்களை விடத் தந்தைகளே இவ்விதம் செய்வதைப் பொதுவாகப் பார்க்கலாம். அவர்கள் அடிப்பதைப் பார்த்தால் பக்கத்தில் பார்த்துக் கொண்டிருப் பவர்கள் கூடச் சகிக்கமுடியாது. 'ஏன் ஐயா! இப்படி இளங்குழந் தையை அடிக்கிறீர்கள்?' என்று யாராவது தப்பித் தவறிக் கேட்டு விட்டால், 'என் குழந்தையை நான் அடித்தால் நீ யார் கேட்பதற்கு?' என்று சொல்லி, தங்கள் உரிமையை நிலை நாட்டுவதற்கு இன்னும் அதிகமாக மொத்துவார்கள். பையன் 'வீர் வீர்' என்று கத்தக் கத்த அவனை அப்படியே போட்டுவிட்டுப் போய்விடுவார்கள். ஒன்றிரண்டு மணி நேரம் கழித்து அவர்கள் ஆத்திரம் குறைந்து நிதான புத்தி வந்தவுடன் தங்கள் மனமே தங்களை வருத்த, குழந்தைக்கு இழைத்த துன்பத்திற்கு ஈடுகட்ட நினைத்து மறுபடியும் கொஞ்ச வருவார்கள்.

குழந்தை மறுபடியும் சிரித்தால், அது முன் அடிபட்டதை மறந்து விட்டதாகப் பெற்றோர்கள் நினைக்கிறார்கள். இது முற்றிலும் தவறு. பெற்றோர்கள் சில சமயங்களில் ஒரு விதமாகவும், மற்ற சமயங்களில் வேறு விதமாகவும் நடப்பதன் மூலம் பெருத்த குழப்பத்தை உண்டு பண்ணுகிறார்கள். தன் தாய் தந்தையருக்குத் தன்னிடம் அன்பு இருக்கிறதா என்பதிலும், தான் அவர்களிடம் எப்படி பழக வேண்டுமென்பதிலும் அதற்குச் சந்தேகம் உண்டாகிறது. குழந்தைகளுக்கு அந்தப் பருவத்தில் வேறு சார்புகள் இல்லை. அதன் உலகம் முழுவதும் பெற்றோர்தான். இந்தப் பருவத்தில் அவர்கள் பெற்றோர்களிடம் நிறைந்த நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தால்தான், அவர்கள் தன்னம்பிக்கையும் தைரியமும் உள்ளவர்களாக வளர முடியும். அப் பெற்றோர்கள், நேரத்திற்கு ஒரு மாதிரி அன்பும் வெறுப்பும், கொஞ்சுதலும் மொத்துதலும் மாறி மாறி வருகிறவர்களாக இருந்தால் குழந்தைக்கு அவர்களிடம் இருந்த நம்பிக்கை குறைந்து, அதன் மனத்தில் பயம் குடி கொள்ளுகிறது. இத்தகைய பிள்ளைகள் பெரியவர்களாகும் போது மற்ற மக்களுடன் தாராளமாகப் பழகுவதற்கே பயப்படுவார்கள். எங்கு சென்றாலும் காரியங்களைச் செய்யத் தைரியம் வராது. குழந்தைப் பருவத்திலேயே பயம் குடி கொண்ட போது, பின்னால் எப்படித் தைரியம் வரமுடியும்?

குழந்தைகள் மனத்தில் பயம் உண்டாவது அவர்களிடம் கோபித்துக் கொண்டால் மாத்திரம் அல்ல. அவர்கள் எதிரில் மற்றவர்களிடம் வெகு அதிகமாகக் கோபம் உண்டானால் அதன் பயன் குழந்தையின் மனத்திலும் உண்டாகிறது. பல பேர்கள் வேலைக்காரர்கள், கூலிக்காரர்கள் அல்லது மற்றவர்களிடம் தாறுமாறாகக் கோபித்துக் கொள்ளுவார்கள். இதன் பயனாகத் தங்கள் குழந்தையின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறதென்பதை அவர்கள் அறியமாட்டார்கள். அத்தகைய சம்பவங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் அஞ்சி நடுநடுங்கிப் பயப்படுவதைக் காணலாம். அவர்கள் மனத்தில் இந்தக் காட்சி ஒரு பெருங்குழப்பத்தை உண்டு பண்ணுகிறது. சாதாரணமாகத் தம்மிடம் அன்புடன் பழகும் தம் தந்தை திடீரென்று ராட்சசனாக மாறுவதாகக் குழந்தையுள்ளத்தில் தோன்றுகிறது. இப்படி ராட்சசனாக மற்றவர்களிடம் மாறின தந்தை, தம்மிடம் எப்பொழுது ராட்சசனாக நடப்பாரோ என்ற பயமும் அவற்றின் மனத்தில் உண்டாகிறது.

குழந்தையுள்ளம் மிகவும் மிருதுவானது. ஒரு இளஞ் செடியை மெதுவாகத் தண்ணீர் விட்டு வளர்க்கிற மாதிரி அதுவும் பெற்றோர்

அன்பால் வளர்ச்சி பெறுகிறது. தண்ணீர் கொஞ்சமாகப் பாய்ச்சி, அதைக் கொஞ்சம் காயவிட்டு, பின்னுல் மறுபடியும் காயவிட்டதற்கு ஈடு செய்ய அதிகத் தண்ணீர் பாய்ச்சினுல் அந்த இளஞ்செடி பிழைக்குமா? பல சமயங்களில் பிழைக்காது. வறண்டு போகும்; அல்லது அழுகிப் போகும். தண்ணீர் பாய்ச்சுவது நிதானமாகவும் அளவாகவும், மாறுபாடில்லாமலும் இருந்தால் செடி செழித்து வளரும். குழந்தை உள்ளத்தின் மிகமிக மிருதுவான தன்மையை அறிந்து பெற்ருேர்கள் தங்கள் வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டியது மிக அவசியம்.

இந்தச் சமயத்தில் எனக்கு ஒரு அழகான திருக்குறள் நினைவிற்கு வருகிறது.

> ''உலகம் தழீயது ஒட்பம் மலர்தலும்
> கூம்பலும் இல்லது அறிவு'' (திருக்குறள் 425)

இதில் இரண்டு கருத்துக்கள் அடங்கி இருக்கின்றன. முதல் கருத்து உலகம் தழீயது ஒட்பம். ஒட்பம் என்ருல் அறிவுடைமை. அதாவது புத்திசாலித்தனம். எதைப் புத்திசாலித்தனம் என்று வள்ளுவர் கூறுகிருர்? உலகத்தைத் தழுவி இருக்கக்கூடிய தன்மைதான் அறிவுக்கு அடையாளம் என்கிருர். அதாவது பல திறப்பட்ட மக்களின் தன்மையையும் நிலையையும் அறிந்து அவர்கள் தன்மைக்கும் நிலைக்கும் ஏற்றவாறு அவர்களிடம் பழக வேண்டும். அதுதான் அறிவுடைமைக்கு அடையாளமாகும். குழந்தைகளிடத்தில் பழகும்போது அவர்கள் மெல்லிய இயல்பை அறிந்து அதற்கு ஏற்றவாறு அவர்களிடம் பழக வேண்டும். அவர்கள் வளர்ச்சிக்கு எது ஏற்றதோ அவ்விதம் நாம் ஒழுக வேண்டும். 'இது என் குழந்தை; இதை எவ்விதம் நடத்தவும் எனக்கு உரிமையுண்டு' என்று நினைப்பது அறிவுக்கு அடையாளமாகாது.

அங்ஙனம் அவர்கள் இயல்பை அறிந்து கொண்ட பின்னர், அவர்களிடம் ஒரே விதமாகப் பழக வேண்டும். ஒரு மனிதன் நம்மிடத்தில் காரணமின்றிச் சில சமயங்களில் சிநேகமாகவும் சில சமயங்களில் விரோதமாகவும், அல்லது சில சமயங்களில் சிரித்துக்கொண்டும் சில சமயங்களில் 'சிடு சிடெ'ன்றும் இருந்தால் அவரைப்பற்றி என்ன நினைப்பீர்கள்? அவரைப் பைத்தியக்காரர் அல்லது விஷயம் தெரியாதவர் அல்லது நம்பத்தகாதவர் என்று நினைப்போம். ஒரே மாதிரி பழகுகிறவர்களைத்தான் உலகத்தில் மக்கள் பாராட்டுவார்கள். அதைத்தான் வள்ளுவப் பெருந்தகையார் உரைத்திருக்கின்ருர்.

மக்களை அனுசரிக்கும் அறிவு மட்டும் இருந்தால் போதாது. மலர்தலும் கூம்புதலும் இன்றி ஒரே மாதிரி சுபாவமாகப் பழகக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டும்.

இவ்விதமான மாறுதல் உடைய பழக்கத்தால் விஷயம் நன்குகத் தெரிந்திருக்க வேண்டிய முதியோர்களுக்கே சலிப்பு உண்டாகிறதென்ருல் குழந்தைகளைப்பற்றிக் கேட்பானேன்? விருப்பு வெறுப்பு, பிரியம் சலிப்பு முதலியன அதிகமில்லாமல் ஒரே மாதிரி சுபாவத்துடன் குழந்தைகளுடன் பழகுவது மிக அவசியம். அங்ஙனம் பழகினுல் குழந்தைகள் சந்தோஷத்துடனும், தைரியத்துடனும், தெளிவுடனும் வளருவார்கள் என்பதில் ஐயமில்லை.

# ஆண்மையுடன் வளர்த்தல்

தங்கள் பிள்ளைகள் ஆண்மையுடன் வளர வேண்டுமென பலர் நினைக்கிறார்கள். ஆனால், மற்ற விஷயங்களிற்போலப் பிள்ளைகளை வளர்ப்பதற்கு வெறும் நினைவு மாத்திரம் போதாது. உலகில் எந்தக் காரியத்தையும் செய்வதற்கு, அது கைகூடுவதற்கு வேண்டிய ஞானமும், அதைப் பின்பற்றிச் சாதிக்கக் கூடிய முயற்சியும் வேண்டும். வாழ்க்கையில் பெரும்பான்மையோர் வெற்றிபெறாமைக்குக் காரணம் இவ்விரண்டும் இல்லாமைதான்.

சென்னையிலிருந்து மதுரை செல்ல நினைக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்காக நான் முதலில் மதுரைக்குப் போகும் பாதையைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதைத் தெரிந்து கொள்ளாமல் வேறு ஏதாவது ஒரு பாதையில் நடக்கத் தொடங்கினால், போய்ச் சேர வேண்டுமென்ற நினைவு என் மனத்தில் எவ்வளவு தீர்மானமாக இருந்தாலும், மதுரையிலிருந்து அதிகமாக விலகிப்போய்க் கல்கத்தா போய்ச் சேர்ந்தாலும் சேரலாம்! பலருடைய வாழ்க்கை இவ்விதந்தான் இருக்கிறது. அவர்கள் இலட்சியம் ஒன்று. அவர்கள் பின்பற்றும் வழி அதற்கு நேர் மாறானதாயிருக்கும். அப்படி இருந்தால் எங்ஙனம் அவர்கள் எண்ணிய இலட்சியத்தைப் பெறமுடியும்?

வழியைத் தெரிந்தால் மாத்திரம் போதாது; அதை விடாமுயற்சியுடன் கடைசிவரை பின்பற்ற வேண்டும். இடையில் சோர்வு வந்துவிட்டாலும் கோரிய இலட்சியத்தை அடைய முடியாமல் போய்விடும். எனவே, சரியான வழியைத் தெரிந்து கொள்ளுவதும், இடைவிடா முயற்சியும் காரியங்களை வெற்றிகரமாக முடிப்பதற்கு மிக அவசியம்.

பிள்ளைகளை ஆண்மையுடன் வளர்ப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? பிள்ளைகள் மனம் மிக மென்மையானது; பலவித உணர்ச்சிகள் நிறைந்தது. பிள்ளைகள் மனத்தை ஒரு இயந்திரத்தைச் செலுத்துவது போன்று செலுத்த முடியாது. இயந்திரத்திற்கு உணர்ச்சி இல்லை. ஒரு மோட்டார்க் காரை சென்னை நோக்கி விட்டால் அதில் பெட்ரோல் இருக்கும் வரை அதை நாம் நினைத்தபடி ஓடச் செய்யலாம். அதற்குச் சொந்த நினைவும், உணர்ச்சியும் இல்லை. ஆனால் குழந்தைகளை நாம் அப்படிச் செலுத்த முடியாது என்பதை உணரவேண்டும். அவர்களின் உணர்ச்சிகளை உணர்ந்து அதை அனுசரித்து அவர்களை உயர்ந்த நெறியில் செலுத்த முயலவேண்டும். செலுத்தல் என்ற வார்த்தை தவறு. அவர்கள் தாங்களாகவே செல்லும்படி செய்யவேண்டும். நாம் அதற்கு உதவியாக இருக்க வேண்டும். அவர்கள் உணவு. உடை, பேச்சு வார்த்தைகள், பாட்டுகள் அவர்கள் சுற்றுப்புறங்கள், அவர்களின் பெற்றோரின் நடத்தை, வார்த்தைகள் யாவும் அவர்களைப் பாதிக்கின்றன. அவர்களுடன் பழகும் ஒவ்வொருவரும் அவர்கள் மனத்தைப் பாதிக்கிறார்கள். இவை உயர்ந்த இலட்சியங்களை ஊட்டக் கூடியனவாக இருந்தால் அவர்களுக்கு அவ்விஷயத்தில் உதவியாக இருக்கின்றன. அப்படியில்லாமல் இவை மக்களைத் தாழ்த்தக்கூடியனவாக இருந்தால், குழந்தைகளை உயர்ந்த லட்சியத்தை நோக்கி வளராமல் தடுக்கின்றன. குழந்தைகளுக்கு எது உயர்ந்தது? எது தாழ்ந்தது? எவை அவர்களுக்குப் பலமும் தன்னம்பிக்கையும் ஆண்மையும் கொடுக்கின்றனவோ அவையெல்லாம் அவர்களுக்கு உயர்ந்தவை; ஏற்றவை; எவையெவை அவர்களைப் பலவீனப் படுத்துகின்றனவோ அவை அவர்களுக்குத் தகாதவை. அவைகளை நஞ்சென ஒதுக்கித் தள்ளவேண்டும். குழந்தைகளை வளர்ப்பதில் இந்தக் கருத்தை நாம் முக்கியமாக மனத்தில் வைத்துக் கொள்வது அவசியம்.

தன்னம்பிக்கைதான் ஆண்மையின் அடிப்படை, தன்னம்பிக்கை இருந்தாலொழிய ஒருவன் எக்காரியத்தையும் செய்ய முடியாது. மனிதனுக்கும் மனிதனுக்கும் வித்தியாசத்தை உண்டுபண்ணுவது அவனுக்கு இருக்கும் தன்னம்பிக்கைதான். ஒருவன் பலவீனனாக இருப்பதற்கு அவனிடம் இது இல்லாமலிருப்பதே காரணம். தன்னைப் பலவான் என நினைப்பவன் பலவானாகிறான். தன்னைப் பலமற்றவன் என நினைப்பவன் பலமற்றவனாகவே ஆகிறான். ஆதலால், நம் குழந்தைகள் மனத்தில் அளவற்ற தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும். எக்காரியத்தையும் செய்து முடிக்கக் கூடிய திறமையும் ஆற்றலும்

தங்களிடம் இருக்கிறதென்ற நம்பிக்கையை இளமையிலிருந்தே அவர்களுக்கு ஊட்ட வேண்டும்.

பெற்றோர்கள், சாதாரணமாகத் தங்கள் பிள்ளைகளை இகழ்ந்துரைப்பதையும், ''முட்டாள்'' ''உதவாக்கரை'', என்று திட்டுவதையும் காண்கிறோம். இங்ஙனம் அவர்களைத் திட்டுவது மிகத்தவறு. இப்படித் திட்டப்படும் குழந்தைகள் பல சமயங்களில் முட்டாள்களாக வளருவதை நாம் காண்கிறோம். அவர்கள் தவறான காரியங்களைச் செய்யும் போது அவர்களுக்குச் சரியான வழியை, நியாயமான முறையில் போதிக்க வேண்டுமே ஒழிய அவர்களைத் தாழ்வாகப் பேசுவதும், திட்டுவதும் சரியல்ல. பிள்ளைகளை எப்படித் திருத்தவேண்டும் என்பதற்கு இராமாயணத்தில் அழகான உதாரணமொன்றிருக்கிறது.

பட்டாபிஷேகம் தடைபட்டு, கைகேயிக்குக் கொடுத்த வரங்களின் காரணமாக, இராமன் வனத்திற்குச் செல்லவேண்டும் என்ற செய்தியைக் கேட்டு, இலக்குவன் மிகவும் கோபாவேசங் கொண்டு வில்லையும் அம்பையும் தாங்கி, 'எதிர்த்து வருபவர் அனைவரையும் அழித்து, இராமனுக்கு அரசு அளிப்பேன்' என்று சொல்கிறான். இராமன் அப்போது அவன் முன்வந்து, ''இக்கோபம் எதற்காக? எல்லாம் விதியின் செயல்'' என்றான். அதற்கு இலக்குவன், ''எவர் எதிர்த்து வரினும் அழிப்பேன். விதிக்கும் விதியாகும் என் வில் தொழில் காண்பாயாக!'' என்கிறான். இலக்குவன் பேசுவது தவறு என்று இராமனுக்கு நன்றாகத் தெரியும். அதற்காக ''அடேலக்ஷ்மணா! அசட்டுத்தனமாகப் பேசாதே'' என்று சொல்கிறானா? இல்லை. ''வாய் தந்தன கூறுதியோ மறைதந்த நாவால்?'' என்றான். ''உன் நா வேதங்களை யெல்லாம் கற்று உண்மையறிந்த நா அல்லவா? அப்படிப்பட்ட நாவினால் இப்படி வாய்க்கு வந்ததையெல்லாம் பேசலாமா?'' என்கிறான். இலக்குவனை அவன் தாழ்த்திப் பேசவில்லை. ஆயினும் திருத்துகிறான்.

இங்ஙனமே, பின்னால் பரதன் சேனைகளுடன் காட்டுக்கு வருவதைப் பார்த்து, அவன் இராமன் மீது படையெடுத்து வருவதாக எண்ணிக் கோபாவேசங் கொண்டு வில்லும் அம்பும் தாங்கி, ''இப்பரதனை அவன் சேனையுடன் நானே அழித்துவிடுகிறேன் பார்!'' என்று பரபரப்புடன் இலக்குவன் பேசுகிறான். அவன் பேசுவது தவறு என்று இராமனுக்கு நன்றாகத் தெரியும்; எனினும், ''அடே லக்ஷ்மணா! நீ ஒரு மண்டு, நீ நினைப்பதெல்லாம் தவறு'' என்றா சொல்லுகிறான்? இல்லை. எவ்வளவு அழகாகச் சொல்கிறான் இராமன்!

''இலக்குவ! உலகம் ஓர் ஏழும் ஏழும் நீ
கலக்குவன் என்பது கருதினால் அது
விலக்குவது அரிது[1] ''

என்று முதலில் அவனைப் பெருமைப் படுத்திப் பேசுகிறான். அதற்கு மேல் கேட்கிறான்.

''அப்பா! நம் குலத்தில் உதித்தவர்களில் அறத்தினின்றும் நீங்கியவர் யாரேனும் உண்டா? அப்படியிருக்க, பரதனை மாத்திரம் வேறு விதமாக நீ நினைக்கலாமா?

பெருமகன் என்வயிற் பிறந்த காதலின்
வருமென நினைகையும் மண்ணை என்வயின்
தருமென நினைகையுந் தவிரத் தானையால்
பொருமென நினைகையும் புலமைப் பாலதே?[2]''

என்று கேட்கிறான். இலக்குவனை இரண்டு தடவை இராமன் நன்றாகவே கண்டிக்கிறான். ஆனால், அவனுடைய சொற்கள் இலக்குவனுடைய தன்னம்பிக்கையைக் குன்றச் செய்யவில்லை; அதை அதிகப் படுத்தும் முறையில்தான் அவை இருக்கின்றன என்பது கவனிக்கத் தக்கது.

எந்த விதத்திலும் குழந்தைகளை நாம் மிரட்டி வளர்க்கலாகாது. பல சமயங்களில் குழந்தைகள் அழும்போது, பேய் பிசாசு என்று சொல்லித் தாய்மார் குழந்தையை மிரட்டி அழுகையை நிறுத்தச் செய்வதுண்டு. இளமையில் பிறந்த இந்தப் பயம் பலர் மனத்தில் ஆயுள்வரை நீடிந்திருப்பதை நாம் அனுபவத்தில் காண்கிறோம். ஒரு தற்காலிக வசதிக்காகக் குழந்தைகள் மனத்தில் நிரந்தரமான பயத்தை உண்டு பண்ணுவது பெரிதும் தவறான காரியமாகும். வேறு எந்தவிதமாக மிரட்டி வளர்ப்பதும் சரியல்ல. ''அய்யா அடித்துப் போடுவார்கள், சாமி கண்ணைக் குருடாக்கிவிடும்'' என்று இவ்விதமான வார்த்தைகளைத் தாய்மார் குழந்தைகளிடம் சொல்லுவதை நாம் அடிக்கடி கேட்கிறோம். இவையெல்லாம் குழந்தையின் பலத்தையும் தன்னம்பிக்கையையும் இளமையிலேயே போக்கி விடுபவைகளாக இருக்கின்றன. இவற்றிற்குப் பதிலாக, 'தவறு செய்தால் அய்யா கண்டிப்பார்'' ''கெட்டது செய்தால் அதன் பலனை நாம்தான் அனுபவிக்க வேண்டும்'' என்ற எண்ணங்களையே குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். அதாவது, ''நாம் செய்யும் நன்மை தீமைகளின் பயனையும்,

1. கம்பராமாயணம் : திருவடிசூட்டுப் படலம் 42
2. ,, ,, 45

நம் முயற்சியின் பயனையும், நாம் அடைந்தே தீருவோம்'' என்ற நினைவை அவர்களுக்கு அளிக்கவேண்டும். தவிர, ''ஒவ்வொருவனும் தான் சிறப்புற்று வளருவது தன் சொந்த முயற்சியால்தான்'' என்ற நம்பிக்கையையும் இளமையிலிருந்தே அவர்களுக்கு ஊட்டவேண்டும்.

பிள்ளைகள் தவறு செய்தால் அதைத் திருத்தலாகாது என்று சொல்வதாக நினைக்கக்கூடாது. தவறைத் திருத்தத்தான் வேண்டும். ஆனல், திருத்துவது பயத்தால் அல்ல. நம் வீட்டில் குழந்தைகள் சில சமயம் விட்டத்தின் மேலும், சுவரின் மேலும் ஏறுகிருர்கள். இதைக் காணும் தாய்மார் பயந்து அலறிப் பையனைக் கீழே வரும்படி மிரட்டி, அவன் கீழே வந்ததும், ''இனிமேல் இப்படிச் செய்வாயா?'' என்று சொல்லி அடிப்பதை நாம் பல இடங்களில் பார்த்திருக்கிறேம். இதன் மூலம் குழந்தையின் மனத்தில் பயந்தான் உண்டாகும். அல்லது திருட்டுத்தனம் உண்டாகும். அதாவது தாய்மார் பாராத சமயத்தில் அங்ஙனம் செய்யலாமென்ற எண்ணம் உண்டாகலாம். இவ்வெண்ணத்தை உண்டாக்கும் முறை, பிள்ளைகளை ஆண்மையுடன் வளர்க்க உதவாது.

இதையே இன்னும் எவ்வளவு அழகாகச் செய்யலாம் பாருங்கள். ஒருநாள் சிம்லாவில் நான் நடந்து சென்றுகொண்டிருந்தேன். ஐந்து அல்லது ஆறு வயதிருக்கும் ஒரு குழந்தை; ஒரு சுவரின்மேல் ஏற முயன்றுகொண்டிருந்தான். ஆனல், இரண்டு மூன்று தடவை தவறிக் கீழே வீழ்ந்தான். அவனுக்குக் கொஞ்ச தூரத்திலிருந்த அவன் தந்தை அவன் காதைத்திருகி, ஏன் இப்படிச் செய்தாயென்று மிரட்டவில்லை. அவனருகில் வந்து அவனைப் பிடித்துக்கொண்டு அச்சுவரின் மேல் ஏற அவனுக்கு உதவி செய்தார். பிறகு தாம் அருகில் நின்றுகொண்டு அவனையே ஏறும்படி சொன்னர். இரண்டு மூன்றுதரம் ஏறிய பிறகு, ''குழந்தாய்! சுவரின்மேல் அவ்விதம் ஏருதே'' என்று சொல்லியனுப்பினர். சுவரின்மேல் ஏறுவது தவறு என்று சொல்லாமல் இருக்கவில்லை. ஆனல், சுவரின்மேல் ஏறுவது அசாத்தியமான காரியம் என்ற உணர்ச்சி குழந்தையின் மனத்தில் இருக்கக் கூடாதல்லவா? 'முயற்சி இருந்தால் எதையும் செய்ய முடியும்' என்ற உணர்ச்சியையும் அத்தந்தை உண்டாக்கினர். இதுதான் பிள்ளைகளைத் தன்னம்பிக்கையுடனும், ஆண்மையுடனும் வளர்ப்பதன் இரகசியமாகும்.

சில பெற்றோர்களும், ஆசிரியர்களும் குழந்தைகளைப் பலவாருகத் திட்டுகிருர்கள். "மடையன், தடியன், குட்டிச்சுவர், முட்டாள், கழுதை" என்றும், இன்னும் சில சமயங்களில் வாயில் சொல்லக் கூடாத வார்த்தைகளையும் சொல்லித் திட்டுகிருர்கள். இது குழந்தைகளின் சுய மரியாதையைப் பாதிக்கிறது. நாளடைவில், அக்குழந்தைகள் சுரணையற்றுப் போய் விடுவார்கள். சுயமரியாதையும், சுய உணர்ச்சியும் இல்லாத குழந்தைகள் எங்ஙனம் ஆண்மையுள்ளவர்களாக வளர முடியும்? சென்ற பதினைந்து வருஷங்களாகக் குழந்தைகளிடம் நெருங்கிப் பழகிவரும் அனுபவத்திலிருந்து நான் ஒன்று நிச்சயமாகச் சொல்ல முடியும். பிள்ளைகளைப் பலவாருகத் திட்டுவதின் மூலம் அவர்களைப் பயன் படுத்தித் தற்காலிகமாக வேலை செய்விக்கலாம். ஆனல், அக் குழந்தைகளுக்கு அதன் மூலமாக நிரந்தரமான கெடுதல்களைச் செய்கிருேமே யல்லாமல் வேறில்லை; அதன்மூலம் நம் குழந்தைகளுக்கும் நம் தேசத்திற்குமே பெரிய தீங்கு இழைத்தவர்களாகிருேம்.

குழந்தைகள் மனதில் உயர்ந்த கருத்துக்களும், சுயமரியாதையும், தன்னம்பிக்கையும் வளரும்படி நாம் அவர்களை வளர்க்கவேண்டும். ஜப்பானில் ஒரு குழந்தை பெரிய தவறு செய்துவிட்டால், 'ஒரு ஜப்பானியக் குழந்தை இவ்வளவு மோசமான காரியம் செய்யலாமா?' என்று கேட்பார்களாம். அதுதான் அவர்கள் பயன்படுத்தும் மிகக் கடுமையான வார்த்தையாகும். அதன்மூலம் அவர்கள் எவ்வளவு தேச பக்தியுடனும், சுய மரியாதையுடனும் வளர்க்கப்படுகிருர்கள் என்பது ஒருவாறு விளங்கும். ஒழுக்க ஈனமான காரியங்கள் சுயமரியாதைக்கும், பெருமைக்கும் விரோதமென்ற உணர்ச்சியுடன் பிள்ளைகள் வளரவேண்டும். 'அடித்தால்தான் பிள்ளைகள் திருந்துவார்கள்' என்று நினைப்பது மிகத்தவறு. அவர்களின் உயர்ந்த தன்மையை எடுத்துக் காட்டுவதன் மூலம் அவர்கள் இன்னும் நன்ருக வளருவார்கள். 'ஓர் இந்தியன் இவ்வாறு தவறுகள் செய்யலாமா? ஸ்ரீ ராம கிருஷ்ணர், விவேகானந்த சுவாமிகள், மகாத்மாகாந்தி—இவர்களைப் பின்பற்றுகிறவர்கள் இங்ஙனம் செய்யலாமா?' என்று சொல்லிப் பிள்ளைகளைத் திருத்தவேண்டும். இந்த முறை உடனே பலனளிக்காது என்று சிலருக்குத் தோன்றலாம். ஆனல், நாளடைவில் இம்முறைதான் நிரந்தரமான பயனையளித்துப் பிள்ளைகளை ஆண்மையுள்ளவர்களாக வளர்க்கும்.

## ஆண்மை எது?

ஆண்மையென்ருல் ஆண் மகனுக்குரிய உயர்ந்ததொரு குணம் என்ற பொருள் படுகிறது. ஆனுல், அது பல ஆண்களிடத்தில் காணுத ஒரு பொருளாக இருக்கலாம். பல பெண்கள் அதை உடையவர்களாகவும் இருக்கலாம். ராணி லட்சுமிபாய் போன்று போரில் வாள் தாங்கி ஆண்மையுடன் போர் புரியக்கூடிய பெண்களும் உண்டு. ஆதலால், ஆண்மை யென்பது வெறும் ஆண் தன்மையைக் குறிப்பதில்லே. மக்களுக்குச் சிறப்பாக இருக்கும் 'எதற்கும் அஞ்சாத ஒரு தன்மை'யை அது குறிக்கும்.

ஆண்மை யென்றதும் போர்க்களத்திலுள்ள வீரர்களேத்தான் நாம் நினைக்கிறேம். எவ்வளவு தைரியத்துடன் அவர்கள் போர் புரிகிருர்கள்! தங்களுக்கு வரும் ஆபத்துக்களே அவர்கள் ஒரு பொருட்டாக நினைப்ப தில்லே. தங்கள் கஷ்டங்களே அவர்கள் கிஞ்சித்தும் பொருட்படுத்துவ தில்லே. தங்கள் உயிருக்கு ஆபத்து வருமென்று கூட அவர்கள் அஞ்சுவ தில்லே. பகைவனே வெல்லுவதில்தான் அவர்கள் முழு மனதும் ஈடு பட்டிருக்கிறது. அக் காரியத்தைச் செய்வதில் அவர்கள் தங்களேயே மாய்த்துக் கொள்ளவும் தயாராக இருக்கிருர்கள். கூற்று உடன்று மேல் வரினும், அதற்கும் அஞ்சாது கூடி எதிர்ப்பார்கள் அவர்கள். தங்கள் உடலேயும் உயிரையும் அச்சமயத்தில் ஒரு பெரிதாக மதிப்ப தில்லே. ஒருவன் தன் கையிலிருக்கும் வேலேப் பகைவன் மேல் எறிவானும். அதற்கடுத்த படி அவன் மேல் எறிய வேறு வேல் இல்லேயே என்று வருந்துவானும். அதுசமயம் பகைவன் எறிந்த வேல் தன் மார்பில் குத்தி யிருப்பது கண்டு, பகைவன்மேல் எறிய இன்னு

மொரு வேல் அகப்பட்டதே என மகிழ்ந்து, அதைப் பறித்து எறிவானும். இத்தகைய வீரமே ஆண்மையெனப்படும். எதற்கும் அஞ்சாத இத் தன்மை மிக அரியதொரு குணமாகும்.

ஆனால் இதைவிட உயர்ந்ததொரு ஆண்மையுண்டு. சுமார் பதினைந்து இருபது வருடங்களுக்கு முன்பு எங்கள் சென்னை மடத்திற்கு (ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்) ஒருவர் வந்திருந்தார்; அவர் பெயர் கேப்டன் மாஸ்கா என்பது; சென்ற உலக யுத்தத்தில் அவர் போர்க் களத்தில் முன் அணியில் நின்று போர் புரிந்தவர்; சுமார் ஆறு அடி மூன்று அங்குல உயரமிருப்பார். உயரத்திற்குத் தக்க பருமன். நல்ல பலசாலி. சாதாரண மனிதர்கள் இருவர் தம் கையில் தொங்கிக் கொண்டிருந்தாலும் அவர்களை அனாயாசமாகச் சுழற்றி வீசி எறிந்து விடுவார். அவர் உடலில் பல இடங்களில் போர்க்களத்திற்குச் சென்றிருந்ததன் அறிகுறிகள் தென்பட்டன. ஒரு குண்டு கண் ஓரத்தில் பாய்ந்து காதைத் துளைத்துக் கொண்டு போயிருந்தது. தோளிலும், கையிலும் இன்னும் அவர் உடலின் பல பாகங்களிலும் துப்பாக்கிக் குண்டுகள் பட்ட காயத்தின் தழும்புகள் தென்பட்டன. அவர் தம் தேசத்தையும், பூர்வீக வாழ்க்கையையும் விடுத்து, ஆத்மீக வாழ்க்கையை நாடி இந்தியாவுக்கு வந்திருந்தார். அவருடைய போர் அனுபவமும், அவர் உடலிலுள்ள போர்க் குறிகளும் எங்களுக்கு ஆச்சர்யத்தை உண்டாக்கின. அவரிடம் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவருடைய அனுபவங்களைக் கேட்டு வியந்து, ''தாங்கள் மிக அரிய வீரராக இருக்க வேண்டும்'' என்று நாங்கள் சொன்னோம்.

அதற்கு அவர் சொன்ன பதில் வியக்கத்தக்கதாயிருந்தது. அவர் சொன்னார்: ''போரில் ஈடுபடுவதற்கு வேண்டிய ஆண்மையும், தைரிய மும், பழக்கத்தில்தான் உண்டாகின்றன. சேனையில் சேரும் மக்கள் மிகச் சாதாரணமானவர்கள் தாம். சாதாரண மக்களிடத்தில் காணும் பீதியும், பயமும் அவர்களிடத்திலும் இருக்கின்றன. ஆனால், பழக்கத் தாலும் சேர்க்கையாலும் அவர்களுக்குத் தைரியம் ஏற்படுகிறதே யொழிய வேறில்லை. முதல் தடவை குண்டுகள் வந்து விழுந்தபோது நாங்கள் மிகவும் பயந்து போனோம். ஆனால், நாட்கள் செல்லச் செல்ல அதற்குப் பழகிப் போனோம். அதன் பிறகு குண்டுகள் விழும் இடங்களிலிருந்து குதித்து விலகிக் கொள்வோம். ஆதலால், போரில் மக்கள் காட்டும் தைரியம் அவ்வளவு உயர்ந்ததொன்றுமில்லை. அது கேவலம் பழக்கத்தாலும் பயிற்சியாலும் உண்டாகக் கூடியதுதான்'' என்று உரைத்தார்.

எங்களுக்கு அவர் வார்த்தைகள் முதலில் ஆச்சர்யத்தை உண்டு பண்ணின வெனினும் சிந்திக்க சிந்திக்க அவற்றின் உண்மை புலனு யிற்று. சாதாரண மக்களுக்கு ரத்தத்தைப் பார்க்கவும் சகிக்க முடிகிற தில்லை அல்லவா? உடலில் ஒரு வெட்டுக் காயம் அல்லது பெரிய புண், பிளவை போன்றவை வந்தாலும் அவைகளைக் காண அவர்களால் சகிக்க முடியாது. சிலருக்கு மயக்கம் கூட வந்து விடுகிறது. வைத் தியக் கல்லூரியில் சேரும் மாணவர்கள் மாத்திரம் இவர்களைவிட வேருனவர்களா? அவர்கள் மாத்திரம் எங்ஙனம் கிஞ்சித்தும் பாதிக்கப் படாமல் அறுத்துத் தள்ளுகிருர்கள்? வயிற்றைக் கிழித்துப் பெரிய 'ஆப் ரேஷன்' முதலியன எப்படிச் செய்கிருர்கள்? சிறு வயதில் சிறிய காயத் தையும் பார்க்கச் சகிக்க முடியாதவர்களே பின்னல் பெரிய டாக்டர்க ளாகி ரண சிகிச்சை செய்கிருர்களே! இது எப்படிச் சாத்தியமாகிறது? பழக்கமும் பயிற்சியும்தான் இதற்குக் காரணமாகும். வைத்தியக் கல்லூ ரியில் முதன் முதலில் சவங்களை அறுத்துப் பழக வேண்டும். மாமிச ஆகாரத்தை என்றும் புசியாத சைவர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கி ருர்கள். மாமிசம் புசிப்பவர்களுக்குக் கூட அது கடினமாக இருக்கும். அங்ஙனமிருக்க மற்றவர்கள் எங்ஙனம் அதைச் செய்கிருர்கள்? அப்பள்ளியில் பயிலும் மாணவர்களை விசாரித்தால் அதன் உண்மை தெரியும். 'முதலில் மிகக் கடினமாகத்தானிருக்கும். அந்தப் படிப்பையே விட்டு விட்டு ஓடி வந்து விடலாமென்று கூடத் தோன்றும். முதலில் சில தினங்கள் இவ்வேலையைச் செய்து விட்டு, உணவு உண்ணக்கூட முடியாது. ஆனல், கொஞ்ச காலத்திற்குள் அது பழக்கமாகி விடுகிறது. என்று அவர்கள் சொல்லுவார்கள். இம்மாதிரியான காரியங்கள் செய்வதற்குப் பிரமாதமான ஆண்மை யொன்றும் தேவையில்லை. பழக்கமும் பயிற்சியும் இருந்தால் போதுமானது. போர்க்களத்தில் உண்டாகக்கூடிய தைரியமும் இத்தகையதுதான். அதுவும் பழக்கத்தி லும் பயிற்சியினலும் உண்டாகக் கூடியதுதான் என்று கேப்டன் மாஸ்கா சொன்னது இப்பொழுது புலனுகும்.

கேப்டன் மாஸ்கா இன்னுமொரு விஷயமும் சொன்னர். இதை விட உயர்ந்த ஆண்மையொன்றுண்டு. அதுதான் ஆத்மிக வாழ்க்கை யைத் தொடர்ந்து பின்பற்றக் கூடிய ஆண்மை. மனத்தைத் தாழ்ந்த கருத்துக்களில் செல்ல விடாமல் உயர்ந்ததொரு லட்சியத்தில் செலுத்துவது உயர்ந்த ஆண்மையாகும். அதுவே யாவற்றிலும் சிறந்ததென அவர் உரைத்தார். புற உலகில் விரோதி புலன்களுக்குத் தென்படுகிருன். ஆனல், புலன்களுக்குத் தென்படாமல் நமது அகத்தி லேயே மறைந்திருக்கும் விரோதியை எதிர்த்துப் போராடுவது இன்னும்

எவ்வளவு கடினமான விஷயம்! தவிர எவரும் சிற்சில சந்தர்ப்பங்களில் சிற்சில இடங்களில் தைரியமாக இருக்க முடியும். ஆனால், ஆத்மீக வாழ்க்கை யென்பது, எல்லாச் சமயங்களிலும் காலங்களிலும் இடங்களிலும் தவருது ஒரு இலட்சியத்தைப் பின்பற்ற வேண்டும். இது எவ்வளவு கடினமான விஷயம்! அங்ஙனம் பின்பற்றுவதே உயர்ந்த அறிவும் ஆண்மையும் ஒருங்கே அமையப் பெற்றதாகும். அதைத் தான் வள்ளுவரும்,

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு" (திருக்குறள்: 422)

என்று அருளியிருக்கிருர்.

போர்க் களத்தில் ஆண்மையுடன் போர் புரிந்த வீரர்கள்,அரசர்கள் ஆகியோரின் எண்ணிக்கை மிக அதிகம். ஆனல், தங்கள் வாழ்க்கை முழுவதிலும் ஓர் உயர்ந்த இலட்சியத்தை இடைவிடாமல் பின் பற்றியவர்களின் எண்ணிக்கையோ மிகக் குறைவு. விசுவாமித்திரர் போன்ற தவசிரேஷ்டர்களும் சிற் சில சமயங்களில் தங்கள் இலட்சியத்திலிருந்து தவறியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவையெல்லாம் எதை நிரூபிக் கின்றன? ஆத்மீக லட்சியங்களை ஏற்று, அவைகளை வாழ்க்கை முழுவதும் பின்பற்றி வாழ்வதே யாவற்றினும் உயர்ந்தது. அதுவே யாவற்றினும் உயர்ந்த ஆண்மை யென்பதை இவை புலப்படுத்துகின்றன.

இக் கருத்தைக் கம்பர் வெகு அழகாக உரைத்திருக்கிருர். மார்புக்கு நேராகக் கூர்மையான ஒளி பொருந்திய ஆயுதம் நீட்டிக் கொண்டிருக்கும்போது, அதற்கு அஞ்சாது மேற்செல்பவர்கள் வீரர்கள் தான். ஆனல், அவர்களைவிட உயர்ந்த வீரர்கள் உண்டு. இறந்தாலும், தங்கள் செல்வமெல்லாம் இழக்க நேரிடினும், தங்கள் இலட்சியத்தையும், உயர்ந்த தரும நெறியையும் கைவிடாதவர்களே உயர்ந்த வீரர்களாவார்கள் என்று அவர் சொல்லுகிருர்.

"நிறப்பெரும் படைக்கலம் நிறத்தின் நேர் உற
மறப்பயன் விளைக்குறும் வன்மையன்று அரோ
இறப்பினும் திருவெலாம் இழப்ப வெய்தினும்
துறப்பிலர் அறமெனல்சூரர் ஆவதே.[1]"

1. கம்பராமாயணம்: தைலமாட்டுப் படலம் 30

ஒரு இலட்சியத்தைப் பின்பற்றுவதில் பல இடைஞ்சல்கள் வரலாம்; பொருளை இழக்கலாம்; சுற்றத்தார் உறவினர் விரோதமாகப் போக லாம்; பெண்டிர் பிள்ளைகள் கோபிக்கலாம்; அல்லது உயிரையே இழக்க நேரிடலாம். இவையனைத்திற்கும் அஞ்சாது எவனொருவன் முயற்சி செய்வானோ அவன்தான் தன் குறிக்கோளை நோக்கி முன்னேற முடியும். விவேகானந்த சுவாமிகள் சொல்லுகிறார்: ''உங்கள் காரியத் தில் இடையூறுகள் மலைபோலத் திரண்டு வரினும், அவற்றைத் தயங்காது எதிர்த்துக் கொல்லும் திடமான மனோ சங்கற்பம் உங்களிடம் இருக்கிறதா? முழு உலகமும் சேர்ந்து கையில் கத்தி கொண்டு எதிர்த்து நின்றாலும், நீங்கள் சரியென்று நினைக்கும் காரியத்தைச் சற்றும் பின் வாங்காது செய்ய வல்ல தைரியம் உங்களிடம் இருக்கிறதா? உங்கள் பெண்டு பிள்ளைகளே விரோதமாக நிற்பினும், உங்கள் பணமெல்லாம் இழக்க நேரிடினும் அதனால் உங்கள் பெயரே கெடுவதானாலும், மற் றெல்லாச் செல்வங்களும் போய்விடுவதாக இருந்தாலும் கூட, அப் பொழுதும் எடுத்த காரியத்தை விடாமல் உறுதியாக நிற்பீர்களா? சகலமும் துறக்க நேரிடினும் அக்காலத்திலும், நீங்கள் கருதிய உங்கள் இலட்சியம் கை கூடும் வரை இடைவிடாமல் உறுதியாக மேல் நோக்கிச் செல்வீர்களா? பத்ருஹரி சொல்வது போல் 'ஞானிகளானோர் நிந்திப் பதனாலும் நிந்திக்கட்டும்; அல்லது புகழ்வதானாலும் புகழட்டும்; சகல பாக்கியங்களையும் கொடுக்கும் லட்சுமி வந்தாலும் வரட்டும். அல்லது தனக்கு இஷ்டமான இடத்திற்கு போனாலும் போகட்டும்; மரணமானது இன்றே வந்தாலும் சரி அல்லது நூறு வருஷங்கள் கழித்து வருவதா னாலும் சரி; எவனொருவன் உண்மையினின்றும் மயிரிழையேனும் பிறழாதிருப்பானோ அவனே உறுதியுடையவன் ஆவான்[1]' அதுவே உண்மையான ஆண்மையாகும். அத்தகைய ஆண்மையை நாம் பெற்று உய்வோமாக.

1. 'கல்வி' — (5-ஆம் பதிப்பு) தி. சு. அவினாசிலிங்கம் பக்கம் 66

# பிள்ளைகளுக்கு இலட்சியம்

தம் பிள்ளைகள் நன்ருக வளரவேண்டுமென்று நினைக்காத தாய் அல்லது தந்தை இருக்கமாட்டார். ஒவ்வொரு பள்ளி ஆசிரியரும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள் நன்ருக வளரவேண்டுமென்று தான் நினைக்கிருர். தேசத்தின் முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்ட அனைவரும் அவ்விதம்தான் கோருகிருர்கள். ஆனல், இவர்கள் அனைவருக்கும் 'பிள்ளைகளை நன்ருக வளர்ப்பதென்ருல் என்ன ?— அதாவது ஒரு இலட்சியமான பிள்ளையென்பவன் எங்ஙனம் இருப்பான்?' என்பதைப்பற்றித் தெளிவான கருத்துக்கள் பொதுவாக இருப்பதில்லை. நமது இலட்சியத்தை நாம் முதலில் தெளிவுபடுத்திக் கொண்டால்தான், அதை நாம் பின்பற்றுவதும், அதற்காக முயற்சி செய்வதும் சாத்தியமாகும். நாம் ஓர் ஊருக்குச் செல்லவேண்டுமானல் அந்த ஊரின் பெயர், திக்கு முதலியன முதலில் தெரிந்துகொண்டால் தானே அதை நோக்கிச் செல்ல முடியும். இங்ஙனமே பிள்ளைகளை வளர்ப்பதும் இருக்கின்றது. இவ்விஷயத்திலும் ஒரு இலட்சியத்தைத் தெளிவாக அறிந்து அதைப் பின்பற்றினுலொழிய, நம் குழந்தைகளை நாம் நன்ருக வளர்க்க முடியாது.

இதில் ஒரு சந்தேகம் உண்டாகலாம். ஒரு நாட்டில் பலதிறப்பட்ட மக்களும், பல தொழில்களைப் பின்பற்றுகிறவர்களும், பலவிதமான குணங்களை உடையவர்களும் இருக்கிருர்கள். ஒரு போர் வீரனுக்கு வேண்டிய குணங்கள் வேறு; ஒரு வைத்தியனுக்கு வேண்டிய குணங்கள் வேறு; ஓர் இயந்திரக் கலைஞனுக்கு (இன்ஜினியருக்கு) வேண்டிய குணங்கள் வேறு. இவ்விதமிருக்கும்போது, எல்லாக் குழந்தைகளும் பின்பற்றக்கூடிய ஒரு தேசீய இலட்சியம் இருக்க

முடியுமா? அங்ஙனம் இருந்தாலும் அதை எல்லாரும் பின்பற்றினல் அது அவர்களுக்கு நன்மை பயக்குமா? போர் வீரனுக்கும் வியாபாரிக்கும் வேண்டிய பயிற்சிகள் வேறு வேறுதான். வைத்தியனுக்கும் இயந்திரக் கலைஞனுக்கும் வேண்டிய பயிற்சி வேறு வேறுதான். அவரவர்கள் தொழில் முறையில் அவரவர்கள் இலட்சியம் வெவ்வேருகத்தான் இருக்கும்; வெவ்வேருகத்தானிருக்க வேண்டும். ஆனல், நாம் எல்லாரும் ஒரு மனித சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையான உண்மையை அனுசரித்து, நாம் எல்லாரும் ஒருமித்து ஒப்புக்கொண்டு, வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய இலட்சியங்கள் சில உள. போர்வீரர், வியாபாரிகள், வைத்தியர், இயந்திரக் கலைஞர், பாடகர், ஓவியக்காரர், பள்ளி ஆசிரியர், தொழிலாளர், நகரவாசிகள், கிராமவாசிகள் முதலிய அனைவரும் ஏற்றுப் போற்றக்கூடிய சில உயர்ந்த எண்ணங்களும் கருத்துக்களும் இருக்கின்றன. ஆண்மை, வீரம், பரிசுத்தம், நல்லொழுக்கம், அன்பு, சேவை முதலிய கருத்துக்கள் மனித இனத்திற்கே அடிப்படையான இலட்சியமாயிருப்பவை. எல்லாத் தொழில்களிலும், நிலைகளிலும் இருக்கும் மக்களுக்கு இவை பொருந்தும். மனித சமூகத்தின் நன்மைக்காகவும், மனிதஇனத்தின் முன்னேற்றத்திற்காகவும் இவற்றை அனைவரும் இலட்சியமாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

மற்ற துறைகளைப் போலப் பிள்ளைகளைப் பேணுவதிலும், நமக்கு ஒரு தேசீய இலட்சியம் அவசியம். நமது தற்கால வீழ்ச்சியின் காரணத்தை ஆராயும்போது, ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் சொல்லுகிருர்: ''சீனு இந்தியா போன்ற தேசங்கள் மிகப் பெரியதாக இருப்பினும் ஏன் அடிமை நாடுகளாகவிருக்கின்றன ? இங்கிலாந்து, ஜப்பான் போன்ற சிறிய நாடுகள் ஏன் அவைகளைவிடப் பலமுள்ளவைகளாக இருக்கின்றன? காரணம் இதுதான். அவைகளின் ஜனத்தொகை சிறியதாக இருப்பினும் அவர்கள் அனைவரும் ஒன்ருக நினைத்து ஒரு இலட்சியத்தை ஏற்று வாழ்கிருர்கள். அது அவர்களுக்கு அளவற்ற வலிமையைத் தருகிறது. ஆனல், சீனு நம்நாடு போன்ற நாடுகளில் ஜனத்தொகை மிகுதியாக விருப்பினும் அவர்கள் பலவேருக நினைத்து அதன்மூலம் தங்கள் பலத்தை இழக்கிருர்கள். ஒன்ருக நினைப்பதும் செய்வதும் அளவற்ற பலத்தை அளிக்கின்றன. ஒன்றுக்கொன்று மாறுபட்டு நினைப்பதும், செய்வதும் நமது சக்தியைக் குலைத்து நம்மைப் பலமற்றவர்களாகச் செய்கின்றன. எனவே, நமது நாடு அல்லது சமூகம் பலம் பெற்று முன்னேற்றமடைய வேண்டுமானல், தங்கள் பிள்ளைகளை

வளர்ப்பதிலும் இதர முக்கியமான விஷயங்களிலும் மக்கள் அனைவரும் ஒரு தேசிய இலட்சியத்தை ஏற்று ஒழுகுவது அவசியமாகும்.''

இதில் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியவிஷயம் ஒன்றுண்டு. நம்முடைய இலட்சியம் நம் மக்களின் போக்குக்கும் நாகரிகத்திற்கும், பணிவுக்கும், பழக்கத்திற்கும் ஏற்றதாக விருக்க வேண்டும். அங்ஙனமிருந்தாலொழிய நம் மக்கள் அவைகளை ஏற்றுப் பின்பற்ற முடியாது. நம் பிள்ளைகள் அளவற்ற ஆண்மையுடனும், நிறைந்த சக்தியுடனும் வளரவேண்டும். 'சகுந்தலை பெற்றதோர் பிள்ளை சிங்கத்தினைத் தட்டி விளையாடி' என்று பாரதியார் பாடுகிறார் அல்லவா? அதுபோல் பயமென்பதே எள்ளத்தனையும் இல்லாதவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். ஆனால், வெறும் உடல் பலம் மாத்திரம் இந்திய மக்களின் இலட்சியமாயிருக்க முடியாது. அத்துடன் ஆத்மீக பலமும் சேர்ந்திருக்க வேண்டும். தங்களிடமிருக்கும் சக்தியை அவர்கள் தங்களுக்கென பயன்படுத்திக் கொள்ளாமல், மன்னுயிரைத் தன்னுயிர்போல் நினைத்து, அவர்களுக்காகத் தமது உடைமை அனைத்தையும் தியாகம் செய்ய முன்வர வேண்டும். அன்பிலார் எல்லாவற்றையும் தமக்குரியதாக்கிக் கொள்ள முயல்வார்கள். அது உடல் பலத்தின் அறிகுறி. இத்தகையவர்கள் எல்லாரிடத்தும் கருணையுடன் ஒழுக வேண்டும். மனிதர்கள் மாத்திரமல்ல – மிருகங்களும் அவர்கள் கருணைக்குப் பாத்திரமாகும். அவர்கள் எவ்விதக் கஷ்டங்களாலும் சுகத்தாலும் பாதிக்கப்படாமல், 'தங்கள் நிலையில் திரியாது' பலத்துடன் விளங்குவார்கள். தங்கள் அடக்கத்தை இழந்து அவர்கள் என்றும் தங்கள் பலத்தை எளியோர்பால் பயன்படுத்த மாட்டார்கள். இத்துடன் தங்கள் சமூகத்தின் பேரிலும், தங்கள் நாட்டின் பேரிலும் எல்லையற்ற அன்பும் அவைகளின் முன்னேற்றத்திற்காக அவசியமானால் தங்கள் உடைமைகள் அனைத்தையும் தியாகம் செய்யும் உயர்ந்த உணர்ச்சியும் அவர்களிடம் இருக்கும். எல்லையற்ற பலம், நம்பிக்கை, சக்தி, அனைவரிடத்தும் அன்பு, எளிமை, வினயம், ஆண்டவனிடமும் தேசத்தினிடமும் பக்தி, தியாக புத்தி, சேவா உணர்ச்சி, சகோதரத்துவம்—இவைகளே நம் குழந்தைகளின் இலட்சியமாயிருக்க வேண்டும்.

இராமனும் லட்சுமணனும், பரதனும் அனுமானும், அபிமன்யுவும் அர்ச்சுனனும், சாவித்திரியும் இலக்ஷ்மிபாயும், நம் குழந்தைகளுக்கு இலட்சியமாயிருக்கட்டும்! இவர்கள் ஒவ்வொருவரும் திடகாத்திரமும், நிறைந்த கல்வியும், ஒழுக்கமும் பெற்றவர்களாக இருந்தார்கள்.

எத்துணை அளவற்ற பலமும், ஆழ்ந்த அன்பும் உடையவர்களாயிருந்தார்கள்! தங்கள் எல்லையற்ற பலத்தை அவர்கள் என்றும் தங்கள் சுய நலத்திற்காகப் பயன்படுத்தவேயில்லை. எப்பொழுதும் நாட்டின் நலத்திற்காகவும் சமூகத்தின் நன்மைக்காகவுமே அதை பயன் படுத்தியிருக்கிருர்கள், அதுமாத்திரமல்ல; தங்கள் நாட்டின் நன்மைக்காகவும், பெரியோர்களுடைய வாக்கைப் பரிபாலனம் செய்வதற்காகவும் எல்லையில்லாத் துன்பங்களைப் புன்முறுவலுடன் மேற்கொண்டார்கள்; எக்கஷ்டங்கள் வரினும் ஆண்மையுடன் சகித்தார்கள். எத்தகைய பெரிய காரியங்களையும் எளிதாகச் சாதித்தார்கள்; இத்தகைய எல்லையற்ற சக்தியும், தூய்மையும் வாய்ந்தவர்களே நம் குழந்தைகளுக்கு இலட்சியமாகவிருக்கத் தகுதியானவர்கள்.

மகாத்மா காந்தி மிக விரும்பிக் கேட்கும் பாட்டு ஒன்றுண்டு. அதை தமிழ்க்கவிஞர் ஒருவர் மிக அழகாக மொழி பெயர்த்திருக்கிருர். 'இது சொல்லுவம் வைஷ்ணவன் யாரெனக் கேளீர்' என்று ஆரம்பிக்கிறது. வைஷ்ணவன் என்ருல் ஒரு இலட்சிய மனிதன் என்று இங்கு பொருள். அவன் எப்படியிருப்பானும்? அவன் எல்லாருடைய துக்கத்தையும் தானே அறிந்து அகற்றுவானும்; இவ்வளவு ஆற்றல் படைத்தவனுயிற்றே, அவனிடம் கர்வம் இருக்குமாவென்ருல் கர்வம் எள்ளளவும் அவனிடம் இராதாம்; அது மாத்திரமல்ல. அவன் எல்லா உயிர்களையும் தெய்வ வடிவங்களாகப் பாவித்து வந்தனை செய்வானும்; நிந்தனை மொழிகள் அவன் வாயில் வாரா. அவன் மனம், வாக்கு, காயம் மூன்றிலும் பூரணப் பரிசுத்தமாயிருப்பான். இத்தகைய குழந்தையைப் பெற்றெடுத்த தாய் தந்தையருக்கு அளவற்ற புகழும் பெருமையும் அளிப்பதுடன், உலகத்தையே பரிசுத்தப் படுத்துவானும். பாட்டை இப்பொழுது பார்ப்போம்.

''சொல்லுவம் வைஷ்ணவன் யாரெனக் கேளீர்!
சோர்ந்தவர் பீடையை அறிவானே;
எல்லோர்தம் துக்கத்தை எரிப்பவ ணுயினும்
எள்ளளவும் கர்வம் அடையானே;
மன்னுயிர் மக்களை வந்தித்து நிற்பான்
மாசுறு நிந்தனை மொழியானே;
சொல்மனம் உடலதில் சுத்தம தானவன்
சோதியுற் ருள்பெற்ற தாய்மாரே;
காமமும் கோபமும் கபடமும் லோபமும்
கனவிலும் இல்லாத கனவானே;
பாமரர் பார்த்திட பற்பல தலைமுறை
பாவனம் அடைந்திடச் செய்வானே.''

INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION DEEMED UNIVERSITY

நம் பிள்ளைகள் இங்ஙனம் ஆக வேண்டும். தற்காலக்கவிஞர் ஒருவர் முருகனைப் பார்த்து இறைஞ்சிக் கேட்டுக் கொள்கிறார் தமக்கு இன்னவை அருள வேண்டுமென்று.

''பண்டு பெரும்புகழ் பார்த்தன் தன்வீரமும்
குழந்தையின் உள்ளமும் குற்றமில் செய்கையும்
பழந்தமிழ் போற்றுநின் பதமலர் பக்தியும்
கலையமு தின்பமும் கனிவுள நெஞ்சமும்
மலைமகள் தந்த மணியெனக் கருள்வாய்''

என்பது பாடல்!

இங்ஙனம் எதையும் எதிர்த்து வெல்லக்கூடிய வீரமும், அத்துடன் அனைவர்பாலும் கனிந்து ஒழுகும் அன்பும், தேசத்தின்பாலும் சமூகத்தின் பாலும் நிறைந்த பக்தியும், இவற்றின் சேவைகாக அனைத்தையும் கொடுக்கக் கூடிய தியாகமும்-இத்தனையும்-ஒருங்கே பெற்றிருப்பதே நமது குழந்தைகளின் இலட்சியமாயிருக்க வேண்டும்.

## OUR PUBLICATIONS

| *English* | | | *Price* |
|---|---|---|---|
| 1. | Education by Swami Vivekananda | — Ed: *T.S. Avinashilingam* | 1.50 |
| 2. | Educational Philosophy of Swami Vivekananda (II Edition) | — *T.S. Avinashilingam* | 12.00 |
| 3. | World Teachers on Education | — Ed: *T.S. Avinashilingam & K. Swaminathan* | 5.00 |
| 4. | Audio - Visual Aids | — *K. Kulandaivel* | 4.50 |
| 5. | Education for National Integration | — Ed: *T.S.Avinashilingam* | 9.00 |
| 6. | Swami Vivekananda and Indian Renaissance | — *T.M.P. Mahadevan* | 7.00 |
| 7. | Vivekananda and Gandhi (II Edn.) | — *T.S. Avinashilingam* | 1.00 |
| 8. | Science of Human Development: Bhagvad Gita (II Edn.) | — *T. S. Avinashilingam* | 3.00 |
| 9. | Place of Spiritual Values in Education | — *Seminar Report* | 3.75 |
| 10. | Cultivation of Heart | — *Seminar Report* | 2.00 |
| 11. | Concentration, the only Method of Education | — *Seminar Report* | 2.50 |
| 12. | Swami Vivekananda's Teachings on Education | | 4-00 |
| 13. | Remedial Teaching | | 2.00 |
| 14. | Innovative Educational Practices | — *T. S. Avinashilingam and Others* | 2-50 |
| 15. | Science and Spirituality | — *T.R. Seshadri* | 2.00 |
| 16. | Journal of Educational Research and Extension (Quarterly) | —*Annual Subscription* | 10.00 |

| *தமிழ்* | | | |
|---|---|---|---|
| 17. | நான் கண்ட மகாத்மா | — *தி. சு. அவிநாசிலிங்கம்* | 6.00 |
| 18 | கல்வி (Education) | — *சுவாமி விவேகானந்தர்* | 1.50 |
| 19. | வித்யாலய பஜனைப் பாடல்கள் | | 1.50 |
| 20. | திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு (விற்பனை: அமுத நிலையம், சென்னை 18) | — *கி. வா. ஜகந்நாதன்* | 18.00 |

INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDUCATION
( DEEMED UNIVERSITY )
LIBRARY